Follow us

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 438 பிலவ வருடம், தை மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை (26.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் ஆகீர் - 22, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

# அமைச்சரவை தீர்மானங்கள்

**2022.01.24 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:**

**01. அக்குரஸ்ஸயில் புதிய பஸ் நிலையத்தை நிர்மாணித்தல்**

2012ஆம் ஆண்டு அக்குரஸ்ஸ நகர அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அக்கருத்திட்டத்தின் முதலாம் கட்டமாக 4.5 ஏக்கர்களை அபிவிருத்திசெய்து பிரதான பஸ் நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்திகளுக்குத் தேவையான அடிப்படை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 1.75 ஏக்கர்களில் 20 தரிப்பிடங்களுடனும் மற்றும் ஏனைய வசதிகளுடனும் கூடிய பிரதான பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளது. கருத்திட்டத்தின் இறுதி கட்டிட வடிவமைப்பு மற்றும் பொறியியல் திட்டங்களுக்கமைய 474 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவின் கீழ் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. உங்களுக்கு வீடு – நாட்டுக்கு எதிர்காலம் வீடமைப்பு வேலைத்திட்டத்தின் உதவித்தொகையை அதிகரித்தல்**

தற்காலிக வீடுகளில் வசித்து வரும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் குடும்பமொன்றுக்கு 600,000 ரூபா உயர்ந்தபட்சம், உதவித்தொகையொன்று வீடமைப்பு நிர்மாணத்தின் முன்னேற்றத்திற்கமைய வழங்கப்படும். இக்கருத்திட்டம் 2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், கட்டுமானப் பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமையால், அதனால் 600,000 ரூபா உதவித்தொகையில் எதிர்ப்பார்க்கின்ற வகையிலான வசிப்பதற்குப் பொருத்தமான முழுமையான வீடொன்றை அமைப்பதற்கு சிரமமாக அமையும். அதனால், 2022 ஆம் ஆண்டு தொடக்கம் தெரிவுசெய்யப்படும் பயனாளிக் குடும்பங்களுக்கு குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் செலுத்தப்படும் உதவித்தொகையை 650,000 ரூபா வரைக்கும் அதிகரிப்பதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை உடன்பாட்டை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

**03. நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கொட்டா வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள காணியில் அதி-உயர் ( High- Rise ) அபிவிருத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

நிர்மாணம், கட்டுமானம், நிதியிடல், தொழிற்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் பொறிமுறையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கொட்டா வீதியில் அமைந்துள்ள, 01 ஏக்கர் 01 ரூட் 9.29 பேர்ச்சர்ஸ் காணித்துண்டில் போட்டித்தன்மை அடிப்படையில் முதலீட்டு முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக துப்புரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் கீழ்காணப்படும் நிரந்தர அமைச்சரவை மீளாய்வுக் குழுவால் அதி – உயர் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு குறித்த காணியை லங்கா ஓரெக்ஸ் லீசிங் கம்பனியின் தலைமைக் கம்பனியான LOLC Investment Holdings Two (Pvt) Ltdஇற்கு நீண்டகாலக் குத்தகையின் அடிப்படையில் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் குறித்த காணியை அப்பணிக்காக பயன்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. தோட்டத்துறையில் காணப்படும் சுகாதார நிறுவனங்களை மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு ஒப்படைத்தல்**

மலையக சமூகத்தவர்களுக்கு மிகவும் பயன்வாய்ந்த சுகாதார சேவைகளை வழங்கும் நோக்கில் தோட்டத்துறையில் காணப்படும் சுகாதார நிறுவனங்களை மாகாண சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைத்தல் மிகவும் பொருத்தமானதாக அமையும் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய பொறிமுறைகள் தொடர்பாக பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையில், குறித்த ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரிகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய, தோட்டத்துறையில் காணப்படும் 450 சுகாதார நிறுவனங்களில் முதற் கட்டமாக 59 சுகாதார நிறுவனங்களை மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு ஒப்படைப்பதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. உடல் உறுப்புக்கள், இழையங்கள் மற்றும் உயிரணுக்கள் மாற்று அறுவைச் சிகிச்சை தொடர்பாக இலங்கையின் தேசிய கொள்கை**

சிறுநீரகம், ஈரல் இதயம், நுரையீரல் மற்றும் கணையம் போன்ற உள்ளக உறுப்புக்கள் செயலிழக்கும் தருவாயில் உள்ள நோயாளர்களின் உயிரைப் பாதுகாப்பதற்கான வெற்றிகரமான சிகிச்சை முறையாக உடல் உறுப்புக்கள், இழையங்கள் மற்றும் உயிரணுக்கள் மாற்று அறுவைச் சிகிச்சை முறை கருதப்படுகின்றது. இலங்கையில் கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள பிரதான தேசிய நிலையங்கள் 02 உள்ளிட்ட 09 அரச மருத்துவமனைகளில் தற்போது உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடல் உறுப்பு நன்கொடையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களைப் போலவே உறுப்புக்களைப் பெறும் நோயாளர்களின் வாழ்க்கை மட்டத்தை உயர்த்துதல் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை தொடர்பான தேசிய கொள்கையொன்றின் தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, உலக சுகாதார மாநாட்டின் 57 ஆவது சமவாயம் மற்றும் மனித உறுப்புக்கள் மாற்று அறுவைச் சிகிச்சை தொடர்பாக உலக சுகாதார தாபனத்தின் வழிகாட்டல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு உடல் உறுப்புக்கள், இழையங்கள் மற்றும் உயிரணுக்கள் மாற்று அறுவைச்சிகிச்சை தொடர்பாக இலங்கையில் தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 02 பக்கம்

## தயா மாஸ்டருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறை



## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக செயற்பட்ட தயா மாஸ்டர் என்றழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதிக்கு 05 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 02 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே நேற்று இந்த தீர்ப்பு வழங்கப் பட்டது. 02 பக்கம்

## காளி அவர்களை விட்டுவிடமாட்டாள்!

### சாபம் விட்டார் சந்தியா







நா.தினுஷா

காணாமல்போன எனது கணவரை காளி மீட்டுத்தருவாள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவருக்கு ஏதேனும் ஆபத்து நடந்திருந்தால் அதனை செய்தவர்களையும் காளி அம்மா விடமாட்டாள். இதுவரை எனது கணவருக்காக நான் முன்னெடுத்த போராட்டம் தொடரும்"

இவ்வாறு காணாமல்போன ஊடக வியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா... 02 பக்கம்

## 2021 ஆம் ஆண்டிற்கான ஊழல் மதிப்பாய்வு தரவரிசை வெளியீடு

### 102 ஆம் இடத்தில் இலங்கை




02 பக்கம்

# கட்டுப்பாடுகளை விதிக்க அரசு ஆலோசனை!

## அமைச்சரவையில் நீண்ட நேரம் கலந்துரையாடல்

யோ.தர்மராஜ்

நாட்டில் கொரோனா வைரஸின் புதிய திரிபு ஒமிக்ரொன் தொற்று தீவிரமாக பரவி வருவதால் மக்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய சுகாதார விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக உயர் மட்டத் தகவல்கள் 'தமிழன்' செய்திகளிடம் நேற்று தெரிவித்தன.

நாட்டில் மீண்டும் நாளொன்றுக்கு 800 இற்கு மேற்பட்ட கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதோடு, வைத்தியசாலைகளில் இட நெருக்கடி ஏற்படும் அபாயமுள்ளதால் மக்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி கொரோனா பரவலைக் குறைப்பதற்கு அரசு அவதானம் செலுத்தியுள்ளது.

இந்த நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை சமாளிப்பதற்கு அமைச்சர் உதய கம்மன்பில சில முக்கிய யோசனைகளை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைத் துள்ளார். இந்த யோசனைகளையும் கவனத்தில் கொண்டு, புதிய சுகாதார கட்டுப்பாடுகளை விதிப்பதற்கே... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



காமினி லொக்குகேவும், கம்மன்பிலவும் போடுற சண்டையபார்க்கேக்க பேசாமல் கரண்ட் இல்லாமலேயே இருந்திடலாம் போல கிடக்குது...

## விளைச்சலில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு

### அரசு விசேட அறிவிப்பு

யோ.தர்மராஜ்

அரசாங்கத்தின் பசுமை விவசாயத் திட்டத்தை அமுல்படுத்தியதால் பெரும்போகத்தில் நெல் உற்பத்தியில் ஈடுபட்டு, விளைச்சலில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்ட ஈடு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அதற்காக, 40 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில், 02 பக்கம்

## கொடிகாமத்தில் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு - ஒருவர் கைது!



02 பக்கம்

## இரு இராஜாங்க அமைச்சர்கள் உட்பட மூவருக்கு கொரோனா








ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்ப டுத்தும் மேலும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொவிட் 19 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள ஆகியோருக்கு இவ்வாறு வைரஸ்... 02 பக்கம்

## நாளைய தினம் வரை மின்வெட்டு அவசியமில்லை

02 பக்கம்

## உஷ்



கொரோனா தொற்றின் ஒமிக்ரொன் திரிபு தீவிரமடைந்துள்ள நிலையில் அதில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சிக்கியுள்ளனர்.


இதனால் கடந்த சில வாரங்களாக ஜனாதிபதி செயலகத்தில் நடந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் சூம் தொழில்நுட்பத்தினூடாக இடம்பெற்றது.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கொரோனா தொற்றுக்குள்ளானதால் ஆளுங்கட்சியின் உள்ளக அரசியல் கூட்டங்களும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தமிழக மீனவர்களின் படகுகளை ஏலத்தில் விடுவதா?



## பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் அவசர கடிதம்!



02 பக்கம்

## கைக்குண்டு மீட்பு விசாரணையை துரிதப்படுத்த நீதிமன்றம் உத்தரவு

பொரளையில் உள்ள சர்வ புனிதர்கள் தேவாலய வளாகத்தி லிருந்து கைக்குண்டு மீட்கப்பட்டமை தொடர்பான விசாரணையை துரிதப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட் டுள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தாம் கருதுவதாக தெரிவித்த மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய, விரைவாக விசாரணையை நடத்தி அதன் முன்னேற்றத்தை அடுத்த மாதம் 02ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு உத்தரவிட்டார். 02 பக்கம்

## இலங்கை கடற்பரப்பில் கைதான 55 இந்திய மீனவர்கள் விடுதலை



02 பக்கம்

## நாளைய தினம்...

நாட்டில் நாளைய தினம்வரை மின்வெட்டுக்கான அவசியமில்லை. இலங்கை மின்சார சபையினால் மின்வெட்டு தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனையை மீண்டும் நாளை 27ஆம் திகதி பரிசீலிக்கப்போவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இந்த நாட்களில் மின்சாரம் தயாரிக்க போதுமான எரிபொருள் இருப்புள்ளது.

- இவ்வாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன் தலைவர் ஜனக்க ரத்நாயக்க மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தற்போதுள்ள எரிபொருட்களின் இருப்புகள் தொடர்பாகவும் அவற்றை மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கக்கூடிய திகதிகள் பற்றிய தகவல்களையும் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதேநேரம், புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் 3ஆம் அலகு இம்மாத இறுதிக்குள் மீண்டும் மின் உற்பத்தியை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, தடை யற்ற மின்சார விநியோகத்தை வழங்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

மேலும், நிலக்கரி மற்றும் பிற எரிபொருட்களை இறக்குமதிசெய்வதற்குத் தேவையான அந்நிய செலாவணியை எவ்வாறு கண்டுபிடிப்பதென்பது குறித்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருடன் கலந்துரையாடினோம். எதிர்காலத்தில் இந்த அந்நியச் செலாவணி பிரச்சினையும் தீர்க்கப்படுமென நம்புகிறோம். இதேவேளை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார நெருக்கடிக்கு குறுகிய மற்றும் நடுத்தர கால தீர்வுகள் பலவற்றை பரிந்துரைத்துள்ளது. மின்சார நுகர்வோரின் ஆதரவுடன் துரிதப்படுத்தப்பட்ட மின் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் மின்சாரத்திற்கான தேவையை குறைப்பது குறுகியகால திட்டங்களில் ஒன்றாகும்.

மேலும், மத்தியகால தீர்வாக அரசு மற்றும் தனியார்துறை மின் உற்பத்தியாளர்களை திறம்பட பயன்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின் பற்றாக்குறை ஏற்பட்டால், அந்த ஜெனரேட்டர்களிலிருந்து திறன்வாய்ந்த மின் உற்பத்தியை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற ஜெனரேட்டர்களை தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுவருகிறது. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவும் சூரிய மற்றும் காற்றாலை மின்சக்தி அமைப்புகளை விரைவில் நிறுவுமாறு பரிந்துரைத்துள்ளது - என்றும் குறிப்பிட்டுள்ளது இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு.

## கொடிகாமத்தில்...

***யாழ். நிருபர்***

யாழ். கொடிகாமம் - கெற்பேலி பகுதியில் மணல் கடத்தல் கும்பல் மீது இராணுவம் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளது. துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தையடுத்து மணல் கடத்தல் கும்பல் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மணல் கடத்தல் இடம்பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து, சம்பவ இடத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர் கடத்தல்காரர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுத்தபோது தப்பி ஓடியுள்ளனர். இதனையடுத்து துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதி கைதுசெய்யப்பட்டார். உழவு இயந்திரமும் அதன் சாரதியும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இலங்கை கடற்பரப்பில்...

இலங்கை கடற்பரப்பில் கைதான 55 இந்திய மீனவர்கள் நேற்றைய தினம் நிபந்தனையுடன் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு மற்றும் எழுவைதீவு அருகே கடந்த வருடம் டிசம்பரில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 55 பேருக்கும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதகால சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவர்களது கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், 5 வருட காலத்தில் மீண்டும் இலங்கை பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை உடனடியாக கைதுசெய்வதற்கும் நீதவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு எடுக்கப்பட்டபோது இந்திய மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், இலங்கை குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தினூடாக இந்தியாவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவும் நீதவான் உத்தரவிட்டார்.

## கைக்குண்டு மீட்பு...

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளில் திருப்தியடையவில்லை எனவும் விசாரணைகளை வேறு பொலிஸ் பிரிவிடம் ஒப்படைக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடுமாறும் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன மன்றில் கோரிக்கை விடுத்தார்.

சம்பவம் தொடர்பான உண்மையை கண்டறிவதற்கும், உண்மையான சந்தேகநபர்களை கைது செய்வதற்கும் நியாயமானதும் நீதியானதுமான விசாரணை நடத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆராயுமாறு, பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தின் பங்குத்தந்தைகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நெவில் அபேரத்ன கோரிக்கை விடுத்தார்.

## இரு இராஜாங்க ...

தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், அமரகீர்த்தி அத்துகோரளவின் மனைவிக்கும் கொவிட்-19 வைரஸ் தொற்றுக்கு உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுக்கு கொவிட் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. கடந்த சில நாட்களாக, பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொவிட்-19 வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, ஒரு வாரத்தில் கொவிட்-19 வைரஸால் பாதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

## தயா மாஸ்டருக்கு...

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டர் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தார். இந்நிலையில், தயா மாஸ்டருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 2009 மே 18ஆம் திகதிக்குட்பட்ட காலப்பகுதிக்குள், தடைசெய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது.

2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளைத் தடுக்கும் கட்டளைகளின் கீழ் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றத்தை புரிந்துள்ளதாக வவுனியா மேல் நீதிமன்றில், சட்ட மா அதிபரால் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கில் தயா மாஸ்டருக்கு கட்டாய சிறைத்தண்டனை வழங்கவேண்டிய பிரிவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அந்த குற்றப்பத்திரிகை திருத்தப்பட்டு குறைந்த குற்றச்சாட்டுகள் மாத்திரம் அவர் மீது முன்வைக்கப்பட்டது. தன் மீதான குற்றச்சாட்டுகளை தயா மாஸ்டர் ஒப்புக்கொண்டமையால், 05 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 02 வருட சிறைத்தண்டனை விதித்து இன்று தீர்ப்பளிக்கப்பட்டது.

நேற்றைய வழக்கு விசாரணையில் தயா மாஸ்டர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

## விளைச்சலில் பாதிக்கப்பட்ட....

நாட்டில் நெல் விளைச்சலில் ஈடுபடும் 11 இலட்சம் விவசாயிகள் தொடர்பாக அமைச்சரவையில் விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, 2020ஆம் ஆண்டு பெரும்போகத்தில் 60 இலட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெல் விளைச்சல் செய்தவர்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருக்குமாக இருந்தால் அவர்களுக்கான நட்டஈட்டை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக 40 ஆயிரம் மில்லியன் நிதியும் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது.

விஷமற்ற உணவுக்கான பசுமை விவசாயத் திட்டத்தை அமுல்படுத்தியதால் தங்களுடைய விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் தங்களுக்கான உரிய நஷ்டஈட்டை வழங்குமாறு கோரி கடந்த காலங்களில் விவசாயிகள் பாரிய போராட்டங் களை முன்னெடுத்தனர்.எனினும், பசுமை விவசாயத்தால் உங்களுடைய விளைச்சல்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அதற்கான நஷ்டஈட்டை வழங்குவதாக நாங்கள் தொடர்ந்தும் உறுதியளித்திருந்தோம்.

அதற்கமைய, பெரும்போகத்தில் நெல் விளைச்சலில் ஈடுபட்டு, பாதிப்படைந்த அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதால், தொகைமதிப்பு புள்ளிவிவரவியல் திணைக்களமும் விவசாயத் திணைக்களமும் ஒன்றிணைந்து விவசாயிகளின் விளைச்சல் தொடர்பாகவும் பாதிப்புகள் தொடர்பாகவும் ஆய்வுசெய்து கொண்டிருக்கின்றோம். அதனைக்கொண்டு நஷ்டஈடு வழங்குவோம். எனினும், போகத்தை கடந்து விளைச்சலில் ஈடுபட்டவர்களுக்கே விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதே தவிர, சரியான நேரத்தில் விளைச்சல் செய்தவர்களுக்கு பாதிப்புகள் ஏற்படவில்லை.

இதனால், அரசு மற்றும் தனியார்துறையினருக்கு போட்டி அடிப்படையில் நெல் கொள்வனவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக ஒரு கிலோ நெல்லை 75 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## கட்டுப்பாடுகளை...

அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

அதன்படி, வாரத்தில் ஒரு நாள் வீடியோ தொழில்நுட்பம் மூலம் பாடசாலைகளை நடத்தல், போக்குவரத்து நெரிசலை குறைக்க பல்வேறு நேரங்களில் அலுவலகங்களை திறத்தல், எரிபொருள் விலை சூத்திரத்தை உடனடியாக அமுல்படுத்தல், கொழும்புக்கு வரும் வாகனங்களை கட்டுப்படுத்தல் போன்ற யோசனைகளை அமைச்சர் முன் வைத்துள்ளார்.

மேலும், அரச நிறுவனங்களின் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் மாநாடுகளுக்கு அதிகாரிகளை அழைப்பதை மட்டுப்படுத்தவும், பிரதேச செயலாளர்கள் போன்றவர்களை கொழும்புக்கு வரவழைப்பதை மட்டுப்படுத்தவும் யோசனை முன்வைத்துள்ளார்.

ஆகவே, எரிபொருள் நெருக்கடிகளுக்கு முன்வைக்கப்பட்டுள்ள இவ்வாறான யோசனைகள் கொரோனா தொற்று பரவலுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என்பதால் இந்த யோசனைகள் குறித்த நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவையில் அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஒமிக்ரொன் திரிபு தொடர்ந்தும் அதிகரிப்பதால் மீண்டுமொரு கொரோனா அலை உருவாகலாம் என சுகாதாரத்துறையினர் எச்சரித்துவருவதால், மீண்டுமொரு முடக்கத்தை நாடு தாங்காது என்பதை கவனத்திற்கொண்டு, இறுக்கமான சுகாதாரக் கட்டுப்பாடுகள் ஊடாக மக்களின் கட்டுப்பாடுகளை குறைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது முன்னெடுக்கப்படும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி திட்டத்தை விரைவுபடுத்தி அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்குவதற்கும் உரிய தரப்புக்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளது.

அத்தோடு, தற்போதுள்ள சுகாதார விதிமுறைகளையும் முடிந்தவரை இறுக்கமாக கடைப்பிடிப்பதற்கு மக்களுக்கு அறிவுறுத்துமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, கொரோனா வேகமாக பரவி முழு முடக்கத்திற்குச் செல்லும் முன்னர் புதிய சுகாதாரக் கட்டுப்பாடுகளை விதித்து மக்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்துவது குறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிய முடிந்தது.

## காளி அவர்களை...

எக்னலிகொட நேற்று "தமிழன்" செய்திகளிடம் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல்போய் 12 வருடங்களை பூர்த்தியாவதை முன்னிட்டு நேற்றுமுன்தினம் (24) சந்தியா எக்னலிகொட காணாமல்போன தனது கணவருக்காக காளி தெய்வத்துக்கு விரதமிருந்து முகத்துவாரம் காளி கோவிலில் மொட்டையடித்து விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

இந்த பூஜை வழிபாடுகள் குறித்து விளக்கமளிக்கும்போதே எமது செய்திப் பிரிவுக்கு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனது கணவர் காணாமல்போய் (24) 12 வருடங்கள் நிறைவுக்கு வருகின்றன. அதற்காக நேற்று முன்தினம் அம்மன் கோவிலில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தேன். அதன் தொடர்ச்சியாக இன்றும் (நேற்று) முகத்துவாரம் காளி கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

எனது கணவருக்கு நீதி கோரி, விரமிருந்து, மொட்டையடித்து, தோத்திரங்களை பாடி வழிபாட்டில் ஈடுபட்டேன்.

ஜனவரி 24ஆம் திகதி எனது கணவர் காணாமல் போயிருந்தாலும், 25ஆம் திகதி அக்கரைப்பற்று பிரதேசத்துக்கு சென்றபோதே அவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இதுவே விசாரணைகளில் தெரியவந்த உண்மை.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் குற்றவாளிகளை விடுதலை செய்துள்ளது. ஆணைக்குழுவும் முறையாக இயங்குவதாக தெரியவில்லை. சாட்சிக்காரர்களும் பயமின்றி செயற்படும் நிலையே இன்று காணப்படுகின்றது. ஆகவே, நீதிமன்றம் மீது நம்பிக்கைகொள்ள முடியாதவொரு இக்கட்டான சூழ்நிலையே இன்று ஏற்பட்டுள்ளது.

அதனால், தெய்வீகத்தை நம்புவதே தற்போது எஞ்சியுள்ள தீர்வாகும். காளி தெய்வத்தை சரணடைந்துள்ளேன். எனது கோரிக்கைக்கு நீதி கிடைக்கும் வரை எனது போராட்டம் தொடரும். அதேபோன்று இந்த காளி வழிபாடும் தொடரும்" என்று குறிப்பிட்டார்.

## 2021ஆம் ஆண்டிற்கான...

சர்வதேச நிறுவனமான ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் நிறுவனத்தினால் தொகுக்கப்பட்ட அண்மைய ஊழல் மதிப்பாய்வு சுட்டி (Corruption Perceptions Index) வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பாய்வு சுட்டியானது உலகெங்கிலுமுள்ள 180 நாடுகளின் பொதுத்துறை ஊழல்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. குறித்த மதிப்பாய்வு சுட்டியில், புள்ளி வழங்கப்படும் முறையில் 0 என்பது கூடிய ஊழல் நிலையையும் 100 என்பது ஊழலற்ற தூய்மையான நிலையையும் சுட்டிக்காட்டுகின்றது.

2021ஆம் ஆண்டிற்கான ஊழல் மதிப்பாய்வு சுட்டியின் பிரகாரம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள 37 புள்ளிகள், முன்னைய வருடத்தை விட ஒரு புள்ளி குறைவாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தரவரிசையின் அடிப்படையில், 2020ஆம் ஆண்டு 94ஆம் இடத்திலிருந்து இலங்கை, 2021ஆம் ஆண்டு 102ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இலங்கை அதிகபட்சமாக 2012 ஆம் ஆண்டு 40 புள்ளிகளை பெற்றுள்ளமை நினைவுகூரத் தக்கது.

ஊழல் மதிப்பாய்வு சுட்டியில் இலஞ்சம், பொது நிதியின் தவறான பயன்பாடு, ஊழல் தொடர்பான வழக்குகளை திறம்பட விசாரணை செய்யும் தன்மை, போதுமான சட்ட கட்டமைப்புகள், முறைகேடுகளை வெளிப்படுத்துவோர், ஊடகவியலாளர்கள் மற்றும் புலனாய்வாளர்களுக்கான சட்டப் பாதுகாப்புகளின் தன்மை ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், பொறுப்புக்கூறலுக்குத் தேவையான அதிகாரத்தை வைத்திருப்பதற்குத் தேவையான உரிமைகளை உறுதிப்படுத்தல், அதிகாரத்தின் மீதான நிறுவனக் கட்டுப்பாடுகளை மீட்டெடுத்து வலுப்படுத்தல், எல்லை கடந்த ஊழல் வடிவங்களை எதிர்த்துப் போராடுதல், அரச செலவீனங்களில் தகவலறியும் உரிமையை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்களை ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் நிறுவனம் பரிந்துரை செய்கின்றது.

ஊழல், மனித உரிமை மீறல்கள் மற்றும் ஜனநாயக வீழ்ச்சி போன்றவற்றின் தொடர் சுழற்சியை எதிர்த்துப் போராடுவதற்காக குறித்த நிறுவனம் மேற்கூறப்பட்ட பரிந்துரைகளை வழங்குகின்றது.

## தமிழக மீனவர்களின் ...

தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களை தடுக்கவும், தமிழக மீனவர்களின் படகுகள் ஏலம் விடுவதை தடுக்கவும் கோரி முதலமைச்சர் ஸ்டாலின், பிரதமர் மோடி மற்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதாவது:-

நாகப்பட்டினம் மாவட்டம், புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த 3 தமிழக மீனவர்கள், கடந்த 23ஆம் திகதியன்று வேதாரண்யம் கடற்கரை யிலிருந்து 16 கடல் மைல் தொலைவில் மீன்பிடித் துக்கொண்டிருந்தபோது இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 300 கிலோ எடைகொண்ட மீன்பிடி வலை, தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் 30 லீற்றர் டீசல் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தாக்குதலுக்குள்ளான மீனவர்கள் வேதாரண்யம் அரச மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இவ்வாறு அப்பாவி மீனவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடத்துவதன் மூலம், தமிழக மீனவர்களை அவர்களது பாரம்பரிய பாக். வளைகுடா மீன்பிடி கடல் பகுதிகளுக்கு வரவிடாமல் தடுப்பதை இலக்காகக்கொண்டு இலங்கை செயல்படுவதை காணமுடிகிறது.

இது நமது மீனவ மக்களின் வாழ்வாதாரத்திற்கு கடுமையான அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த விவகாரத்தில் இந்திய அரசு வாய்மூடி மௌனமாக இருத்தல் கூடாது. அதேபோன்று இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த 105 மீன்பிடிப் படகுகளை மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை எதிர்வரும் பெப்ரவரி 7 முதல் பெப்ரவரி 11 வரை ஏலத்தில் விடுவதற்கு முயற்சிசெய்து வருகிறது.

இந்தியா-இலங்கை கூட்டுப் பணிக்குழுவானது மீன்பிடித்தல் தொடர்பான பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கவிருக்கும் சூழ்நிலையில், இந்த ஏலம் விடுவதற்கான அறிவிப்பு நீண்டகாலமாக நிலுவையிலுள்ள இப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண முன்வந்துள்ள தமிழக மீனவர்களுக்கு அதிர்ச்சியையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதும், அவர்களது உடைமைகளை கொள்ளையடிக்கும் அல்லது சேதப்படுத்தும் செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாத வகையிலும் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## அமைச்சரவை...

### 06. சுகாதார சேவைகளின் தரப்பண்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கை

தற்போது காணப்படும் தரப்பண்பான சுகாதார சேவைகள் மற்றும் நோயாளர்களின் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கைக்கு 2015ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உலக சுகாதார மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நோயாளர்களின் பாதுகாப்பு தொடர்பான உலகளாவிய நடவடிக்கைகள் தொடர்பாக முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த கொள்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சுகாதார சேவைகளின் தரப்பண்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் குறித்த திருத்தப்பட்ட கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் வலயங்களை நிலைப்படுத்தல் மற்றும் புதிய தொழில் முயற்சியாளர்களுக்கான வியாபார அபிவிருத்திக்கான முதலீட்டு வாய்ப்புகளை வழங்கும் தேசிய கருத்திட்டம்

2022ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கைத்தொழில் பேட்டைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தை பிரதேசவாரியாக கொண்டு சென்று பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலான கைத்தொழில் வலயங்களை அமைத்து பிரதேச கைத்தொழில் மயமாக்கல் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய கைத்தொழில் அமைச்சால் வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதன்கீழ் மாவட்டம்/பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அடையாளங்காணப்பட்டுள்ள காணியின் அளவுக்கேற்ப இரண்டு வகையான கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 5-15 ஏக்கர் காணியிலான தொழிற்சாலைகள் 15-35 அளவிலான சிறியளவிலான கைத்தொழில் பேட்டை மற்றும் 15-25 ஏக்கர் காணியிலான தொழிற்சாலைகள், 35-50 ஏக்கர் அளவிலான நடுத்தர அளவிலான கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பதற்காக தேசிய குழுவொன்று மற்றும் மாவட்ட நடவடிக்கைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. 2021/2022 பெரும்போகத்தில் நெல் கொள்வனவு வேலைத்திட்டம்

நெல் விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொடுப்பதற்கும், அரசாங்கம் நெல் இருப்பை பாதுகாப்பாக பேணுவதையும் நோக்காகக்கொண்டு 2021/2022 பெரும்போகத்தில் அரசாங்க நெல் கொள்வனவு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த நெல் அறுவடையை கொள்வனவு செய்தல், நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக நேரடியாகவும் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்களால் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை இயக்குவதன் மூலமும் மேற்கொள்ளப்படும். அதற்குத் தேவையான 29,805 மில்லியன் ரூபா ஒதுக்கீடு அரச வங்கிகள் மூலம் வழங்கப்படும். அதற்கமைய, விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்திற் கொண்டு, அமைச்சரவையால் கீழ்வருமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) 2021/2022 பெரும்போகத்தில் அரசாங்கம் நெற்கொள்வனவு செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் தனியார்துறையினருடன் போட்டித்தன்மை மிகுந்த விலைகளுக்கு சந்தைப்படுத்தல் சபை மூலம் நெல் கொள்வனவு செய்தல்.

(ii) 2021/2022 பெரும்போகத்தில் நெல் அறுவடையில் குறைவு ஏற்பட்டால் அதனால் பாதிப்புக்குள்ளாகும் நெல் விவசாயிகளின் வருமான மட்டத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு கிலோகிராம் நெல்லுக்கு 25 ரூபா வீதம் இழப்பீட்டுத் தொகை செலுத்துதல்.

### 09. உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் தொற்று நீக்கப்பட்ட திரவ சிறியளவு சத்தூட்டத் திரவம் ( sdq d t l ntl d qlmsdq r – SLSVP Injectable) அரச துறைக்காக கொள்வனவு செய்தல்

உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் தொற்று நீக்கப்பட்ட திரவ சிறியளவு சத்தூட்டத் திரவம் (Sterile Liquid Small Volume Parenterals – SLSVP Injectable) அரச துறைக்காக கொள்வனவு செய்வதற்காக கிட்டத்தட்ட அரசாங்கம் வருடாந்தம் 3,000 மில்லியன் ரூபாவை (15 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) செலவிடுகின்றது. குறித்த சத்தூட்ட திரவம் 50 மில்லியன் வருடாந்தம் உற்பத்தி செய்யக்கூடிய வகையிலான இயலளவைக்கொண்ட தொழிற்சாலையொன்றை பெல்லேகலே பிரதேசத்தில் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட கெலூன் லயிஃப்சயன்சஸ் (தனியார்) கம்பனிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. ஏற்புடைய தரநியமங்களுடன் தொற்று நீக்கப்பட்ட திரவ சிறியளவு சத்தூட்டத் திரவத்தை இலங்கையில் உற்பத்திசெய்வதற்கு இயலுமை கொண்ட ஒரே கம்பனியான இக்கம்பனி 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் உற்பத்திகளை விநியோகிப்பதற்குத் தயாராகவுள்ளது. அதற்கமைய, குறித்த உற்பத்திகளை அரச துறையின் தேவைகளுக்காக விநியோகிப்பதற்கு இயலுமான வகையில் குறித்த கம்பனிக்கும் அரச மருந்துகள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 10. 2007ஆம் ஆண்டு 54ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையானவர்களை (சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்) தொடர்பான சட்டத்தை திருத்தம் செய்தல்

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகவும் அவர்களை புனர்வாழ்வளிப்பதற்கான ஏற்பாடுகள், 2007ஆம் ஆண்டு 54ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையானவர்கள் (சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்) தொடர்பான சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. குறித்த சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகள், சமகால தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் திருத்தம் செய்யப்படவேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியும் நீதி அமைச்சரும் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. வருமான அடிப்படையிலான வரி தொடர்பாக இரட்டை வரி விதிப்பை தவிர்த்தல் மற்றும் வரி செலுத்தாமல் தவிர்ப்பதை தடுத்தலுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம் கீழ்க்காணும் உடன்பாடுகளை எட்டியுள்ளது.

(i) இரட்டை வரி விதிப்பை தவிர்த்தல் மற்றும் வருமான வரி செலுத்தாமல் விடுவதைத் தடுத்தல் போன்றவற்றுக்காக இந்திய அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள ஒப்பந்த கூட்டணிக்கு கையொப்பமிடல்.

(ii) துருக்கி அரசாங்கத்துடன் வருமான அடிப்படையிலான வரி தொடர்பாக இரட்டை வரி விதிப்பை தடுத்தல் மற்றும் வரி செலுத்தாமல் தவிர்ப்பதை தடுத்தலுக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்.

(iii) செக் குடியரசின் அரசாங்கத்துடன் வருமான அடிப்படையிலான வரி தொடர்பாக இரட்டை வரி விதிப்பை தடுத்தல் மற்றும் வரி செலுத்தாமல் தவிர்ப்பதை தடுத்தலுக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்.

அதற்கமைய, குறித்த ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கும், 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குறித்த ஒப்பந்தங்களை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவை தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.)

# இன்றைய ராசி பலன்

**26.01.2022 புதன்கிழமை தை 13**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: சுவாதி** காலை 10.07 வரை **விசாகம்** காலை 10.07 - 27.01.2022 காலை 8.51 வரை **யோகம்: சூலம்** காலை 6.25 - காலை 6.52 வரை **கண்டம்** காலை 6.52 - 7.01.2022 அதி காலை 4.09 வரை **திதி: அமர பட்ச நவமி** 27.01.2022 அதி காலை 4.34 வரை **முற்கரணம்: தைதுலம்** காலை6.25 - மாலை 5.33 **பிற்கரணம்: கரஜம்** மாலை 5.33 - 27.01.2022 அதிகாலை 4.34 வரை

**சுப நேரங்கள்** காலை 6.29 - 7.57 காலை 10.55 - பி.ப 12.23

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்** பிற்பகல்12.23 - 1.52 **குளிகை காலம்** **எமகண்ட காலம்** காலை 7.58 - 9.26 **துர் முகூர்த்தம்** பிற்பகல் 12.00 - 12.47

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** வணிக இலாபங்கள் அதிகரிக்கலாம். உங்களுடன் விரக்தியடைந்த சில உறவுகளை சீர்படுத்தும் நாளாக அமையலாம். மனக்குழப்பம் ஏற்படலாம். வேலைத்தளங்களில் பணிகள் சிறப்புறும்.

**ரிஷபம்:** நிர்வாகப் பணிகளில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கலாம். இல்லத்தில் ஒரு விழாக்கால சூழல் உருவாகலாம். பணியிடங்களில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கலாம்.

**மிதுனம்:** சில தவறுகளால் வேலைகளில் கெடுதல் ஏற்பட்டு, மாலைநேரத்தில் சரிசெய்யப்படலாம். மாண வர்களின் சில சாதனைகளுக்கு கௌரவம் கிடைக்கப் பெறலாம். மகிழ்வான பயணங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** வணிக வருவாய் குறையலாம். ஒரு புதிய வேலையைப் பற்றிய திட்டம் உருவாகலாம். சில தவறான அல்லது மாயை நம்பிக்கைகளிலிருந்து விலகவேண்டிய தருணம் இன்று ஏற்படலாம்.

**சிம்மம்:** வேலைத்தளத்தில் மரியாதை மற்றும் பாராட்டு கிடைக்கப் பெறலாம். பணியிட பிரச்சினைகளும் நீங்கப் பெறலாம். புதிய அறிமுக நட்பால் நன்மை கிடைக்கலாம். காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம்.

**கன்னி:** திருமண உறவில் புரிந்துணர்வு தேவைப்படலாம். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதும் நன்மை. வேலைகளில் பொறுமை தேவைப்படலாம். உங்கள் மீதான இரகசிய எதிர்ப்புகளிலும் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் நன்மை.

**துலாம்:** வணிக விற்பனை மேம்படும். ஒரு பயணத்தால் நன்மை கிடைக்கலாம். திறமைகள் பாராட்டப்படலாம். பிள்ளைகளுடன் மகிழ்வான நாளாக அமையலாம்.

**விருச்சிகம்:** நிதி சம்பந்தப்பட்ட ஆவணங்களில் கவனம் தேவைப்படலாம். உடல்நலத்திலும் கவனம் தேவைப்படலாம். விலை மதிப்பு கூடிய பொருட்களின் கொள்வனவு உண்டாகலாம். பணிச்சுமை அதிகரிக்கலாம்.

**தனுசு:** புதிய தொழில் அல்லது வேலை துவங்க சாதகமான நாள். உங்கள் பணி முறை முதலாளியிடம் ஈர்ப்பை உண்டாக்கலாம். பயணத்திற்கும் நல்ல நாளாக அமையலாம். இன்று உற்சாகமான நாளாக இறையருளால் அமையலாம்.

**மகரம்:** புதிய வியாபாரத் திட்டம் உருவாகலாம். வேலைத்தளத்தில் கௌரவம் உண்டாகலாம். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள சாதகமான நாள். உங்கள் சாதனைகளால் குடும்பத்தினருக்கு பெருமிதம் ஏற்படலாம்.

**கும்பம்:** வெளிநாட்டுப் பயண பிரச்சினைகள் நீங்கப் பெறலாம். வாழ்க்கைத்துணைக்கு பரிசு வழங்கப்படலாம். புதிய பணிக்கான முயற்சி உண்டாகலாம். சளி சம்பந்தப்பட்ட சிறிய பிரச்சினைகள் நீங்கத் துவங்கலாம். வேலைகளில் தடைகள் நீங்கலாம்.

**மீனம்:** சில முதலீடுகளை இன்று தவிர்ப்பது நல்லது. வணிகத்தில் விற்பனை குறையலாம். குடும்பச் சூழ்நிலை கவலை தரலாம். உடல்நலத்திலும் கவனம் தேவைப்படலாம். சில சுயநலவாதிகளின் நட்பில் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.

**சந்திராஷ்டமம்: ரேவதி நட்சத்திரத்திற்கு அ.கா 4.21 - 27.01.2022 அதிகாலை 3.13 வரை**

# ஐக்கிய மக்கள் சக்தியானது இருளின் நடுவில் வெள்ளிக் கோடு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அம்பலாந்தோட்டையில் தெரிவிப்பு



தற்போதைய அரசாங்கம் இன்று முழு நாட்டையும் இருளில் மூழ்கடித்துள்ளதாகவும், விரக்தியடைந்த நாடே மிச்சப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த இருண்ட பயணத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றக்கூடிய ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தியே என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இருளின் நடுவே தோன்றிய ஒரே ஒரு வெள்ளிக் கோடு ஐக்கிய மக்கள் சக்திதான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அம்பலாந்தோட்டை மலாய் கொலனியிலுள்ள உச்சவாலிகா விகாரையில் நடைபெற்ற உந்துவப் பெருவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருட்களின் விலையேற்றம் மற்றும் பணவீக்கம் அதிகரித்து நாட்டை பாதாளத்தை நோக்கித் தள்ளுவதால் இந்நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலைகளை குறைக்குமாறு அமைச்சரிடம் கேட்டபோது, பொருட்களின் விலைகளை குறைப்பது எப்படி என்பதை கற்றுக்கொடுக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர் மீள கேள்வி கேட்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் நிர்வாகத்தை முழு நகைச்சுவையாக இந்த அமைச்சர்களே மாற்றியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மின்வெட்டுக்கு நாமே அனுமதி வழங்குகிறோம்; தொழிற்சங்கங்களுக்கு உரிமை கிடையாது

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க சுட்டிக்காட்டு

*(அஷ்ரப் ஏ சமத்)*

மின்வெட்டுக்கு அனுமதியை வழங்கும் அரச நிறுவனம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மட்டுமே. சில மின்சார சபையின் சங்கங்களுக்கு மின்வெட்டு தொடர்பாக அனுமதியையோ அதற்கான அறிவித்தலையோ வழங்க முடியாது - என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் மின்வெட்டு தொடர்பாக வெளியாகும் செய்திகள் தொடர்பாகவும் மின்வெட்டு குறித்த அவசியம் தொடர்பாகவும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

மேலும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்பது மின்சாரத் துறையை ஒழுங்குறுத்துகை செய்யும் ஒரு நிறுவனமாகும். இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டம் மற்றும் மின்சார சபை சட்டத்தின் பிரகாரம் மின்வெட்டுக்கான அனுமதியை இவ்வாணைகுழு மட்டுமே வழங்கும்.

அந்த அடிப்படையில் பொதுமக்களுக்கு தவறான செய்திகளையும் இன்றும் மின் வெட்டப்படுமோ என்ற அச்சத்தையும் மின்சார சபையிலுள்ள சில தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வருவது சட்டத்திற்கு முரணானது மட்டுமன்றி மின்வெட்டு குறித்த அறிவித்தலை மேற்கொள்ள முடியாது.

எதிர்வரும் காலங்களில் மின்வெட்டுவதற்கான அனுமதி கோரி கடிதம் இன்றுதான் எமக்கு கிடைத்துள்ளது. உடனடியாக இதற்கான அனுமதியை வழங்கவும் முடியாது. குறித்த விடயத்துடன் தொடர்புபட்ட எமது ஆணைக்குழுவின் தொழில்சார் வல்லுனர்கள் ஆராய்ந்து முடிவை வெளியிடுவர். ஆனால், தற்போது மின்வெட்டை மேற்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. காரணம், தேவையானளவு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இனியும் எரிபொருள் இல்லை என கூறமுடியாது.



இது மட்டுமன்றி கொழும்பில் நாம் தனியார்வசமுள்ள ஜெனரேட்டர்கள் தொடர்பாக கூட்டமொன்றை நடத்தியுள்ளோம். அதன்மூலமும் எமக்கு மின்சாரத்தை வழங்க திட்டமிட்டுள்ளோம்.

மின்சார பாவனையாளர்களாகிய பொதுமக்கள் செய்யவேண்டியது மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவதோடு, கடந்த ஒன்றரை வருடங்களாக செலுத்தாமல் இருக்கும் மின்சாரப் பட்டியலை செலுத்துவது அவசியமாகும். இவ்வாறு செலுத்தப்படாத மின்சாரப் பட்டியலால் சுமார் 50 மில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளது.

# கொக்குவிலில் வீடொன்றின்மீது வன்முறைக் கும்பல் தாக்குதல்



யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த வன்முறைக் கும்பலொன்று வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும் தீ வைத்துவிட்டு தப்பியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கார் ஒன்று சேதமடைந்துள்ளதுடன், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இச்சம்பவத்தில் காருக்கு வைக்கப்பட்ட தீ பெரியளவில் பரவாத நிலையில், கார் சேதமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள் இரண்டும் முற்றாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அநுராதபுரத்தில் முச்சக்கரவண்டி விபத்து: இருவர் பலி; இருவருக்கு காயம்

*(அநுராதபுரம் செய்தியாளர்)*

முச்சக்கரவண்டியொன்று மரத்தில் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், படுகாயமடைந்த மேலும் இருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காலதிவுல்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை காலதிவுல்வெவ பொலிஸ் பிரிவிலுள்ள ஐந்து வீட்டுத்தொகுதிக்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 38 மற்றும் 39 வயதுடைய தலாவ பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட இருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

ஜயகங்கை பகுதியிலிருந்து ஹெலம்பவெவ பகுதிக்கு பயணித்த முச்சக்கரவண்டி சாரதிக்கு வண்டியை கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் போனதால் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களை நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கும்போது இருவர் உயிரிழந்துள்ளனர். அவர்களுடைய சடலம் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காலதிவுல்வெவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




**பொருட்கள் சேவைகள் மீதான விசேட வரிவிதிப்பு மூலம் மதுவரித் திணைக்களத்துக்கு வரிசேகரிக்கும் உரிமை மறுக்கப்படுவதாக தெரிவித்து திணைக்களத்துக்கு முன்பாக ஊழியர்கள் நேற்று (25) பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)**

# வடக்கிலுள்ள ஒரு இலட்சத்து 60 ஆயிரம் விவசாயிகளை பாதுகாக்கும் பொறுப்பு நமதாகும்

## அங்கஜன் எம்.பி. யாழில் தெரிவிப்பு

*(யாழ். செய்தியாளர்)*

வடக்கிலுள்ள ஒரு இலட்சத்து 60 ஆயிரம் விவசாய குடும்பங்களை பாதுகாக்க வேண்டியதும் அவர்களின் விவசாயத்தை பெறுமதிசேர்க்க வேண்டியதும் நமது பொறுப்பாகும் - என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் விசேட அபிவிருத்தி நன்கொடை நிதிமூலத்தின்கீழ் வடக்கு மாகாண சபை ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் 'சேதன பசளை மற்றும் சேதன பீடைநாசினி உற்பத்தித் திட்டம்' பயனாளிகளுக்கான உதவித் திட்டங்கள் கையளிப்பு நிகழ்வு நேற்று (25) இடம்பெற்றது.

மாகாண விவசாயத் திணைக்களத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உதவித் திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

வடக்கிலுள்ள ஒரு இலட்சத்து 60 ஆயிரம் விவசாயக் குடும்பங்களை பாதுகாக்க வேண்டியதும் அவர்களின் விவசாயத்தை பெறுமதி சேர்க்க வேண்டியதும் நமது பொறுப்பாகும். அதனடிப்படையில் இதுவரைகாலமும் இரசாயன உர கொள்வனவுக்காக வெளிநாட்டுக்கு வழங்கப்படும் பெருமளவு நிதியை பயன்படுத்தி உள்நாட்டில் சேதன உர உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகளுக்காக வழங்குவதனூடாக எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்க முடியும்.

தற்சார்பு பொருளாதாரத்தை வளர்க்கும் வகையில் எம் மண்ணிலேயே எம் வளங்களைக்கொண்டு விவசாய புரட்சியை செய்யவேண்டிய தருணமொன்றாக இதை பயன்படுத்துவோம். அதனூடாக அறுவடை செய்யப்படும் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து பெறுமதிசேர் ஏற்றுமதிகளாக அவற்றை மாற்றியமைத்து யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதிசெய்ய முடியும்.







உதாரணமாக, சேதன விவசாயத்தின் ஊடாக பெறப்படும் காய்கறிகளுக்கு இந்தியாவிலுள்ள சந்தை வாய்ப்பை நாம் பயன்படுத்தி, யாழ். விமான நிலையத்தினூடாக ஏற்றுமதிசெய்ய பெரும் வாய்ப்பொன்று எமது விவசாய தொழில்முயற்சியாளர்களுக்கு உள்ளது. இப்படியான சாத்தியப்பாடுகளையெல்லாம் கருத்திற்கொண்டு இந்தக் கருவிகளை வினைத்திறனோடு பயன்படுத்துமாறு அனைத்து விவசாயிகளையும் அழைக்கின்றேன் - என்றார்.

அரசாங்கத்தின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத்திட்டத்துக்கமைய, பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் அரசாங்கத்தால் மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவற்றினடிப்படையில், யாழ். மாவட்ட விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில், கூட்டெரு தயாரிப்பு, சேதனப் பசளை, மண்புழு உரம் உற்பத்தியாக்கத்தில் ஈடுபடும் விவசாயிகளை இனங்கண்டு, அரசாங்கத்தினால் மாவட்ட ரீதியில் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் உதவித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

மேலும் தாவர பீடைநாசினி தயாரிப்பை ஊக்கப்படுத்தும் வகையில் மானிய அடிப்படையில், ஈர அரைக்கும் இயந்திரம், திரவப் பசளை தயாரிப்பதற்கான இயந்திரங்கள் என்பனவும், பசுந்தாள் பசளை தயாரிப்புக்கான உபகரணங்களும், அவற்றுக்கான காட்டுச்சூரியகாந்தி, கிளிசறியா உள்ளிட்ட பயிர்வகைகளும் வழங்கப்பட்டன.

இவற்றோடு, சேதனப் பசளைகளையும் பயிர்களையும் விற்பனை செய்வதற்கான நிலையங்கள், திருநெல்வேலி, அச்சுவேலி, சாவகச்சேரி, புத்தூர் ஆகிய பிரதேசங்களிலுள்ள விவசாய அபிவிருத்தி நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசியலமைப்பு தொடர்பான விடயங்களில் ஆர்வமில்லை. வாழ்வாதாரத்தையும், அபிவிருத்தியையுமே அவர்கள் விரும்புகின்றனர் - என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்

இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

*''எனது வாழ்க்கையில் இது தொடர்பான பல விடயங்களில் ஈடுபட்டவன் என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சென்றவேளை அவர்கள் அரசியலமைப்பு தொடர்பான விடயங்களில் ஆர்வமாக இல்லை என்பதை நான் அவதானித்தேன். அவர்கள் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையுமே விரும்புகின்றனர்-. அனைத்து அரசியல் கட்சிகளும் இதனை அடிப்படையாக வைத்தே செயற்படவேண்டும். இரண்டு விடயங்களில் ஒத்துழைப்பு இடம்பெறலாம் என நான் கருதுகின்றேன்.*

*ஒன்று, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் யோசனை தொடர்பானது. -இரண்டாவது, வடக்கு, கிழக்கை எவ்வாறு அபிவிருத்தி செய்யவேண்டும் என்பது தொடர்பான புரிந்துணர்விற்கு வருவது. ஏனென்றால், நாங்கள் அரசியலமைப்பு குறித்து தீர்மானிக்கும்வரை மக்களின் வாழ்வாதாரம் எதிர்காலத்திற்காக காத்திருக்கப்போவதில்லை-. எங்கள் முன்னால் இரண்டு சவால்கள் உள்ளன.*

*முதலாவது, அந்நியசெலாவணி நெருக்கடி - அது தற்போது பாதிப்பை ஏற்படுத்திவருகின்றது-.*

*இரண்டாவது, நிதிசார்ந்த சவால் - இது எங்களின் சக்திக்கப்பால் நாங்கள் வாழ்ந்ததால் சுதந்திரத்தின் பின்னர் சுவீகரிக்கப்பட்ட பாரம்பரியம்.*

*அமெரிக்க வர்த்தக ஜாம்பவானும் முதலீட்டாளருமான வரென்பவட் அலை குறையும்போது யார் நிர்வாணமாக நீந்துகின்றார்கள் என்பது தெரியவரும் என தெரிவித்துள்ளார். பெருந்தொற்று உண்மையான அலையை உருவாக்கியுள்ளது என நான் கருதுகின்றேன். இது நாங்கள் எதிர்கொள்ளும் உண்மையான சவால்.*

*நிலைமையை ஓரளவு ஸ்திரப்படுத்துவதற்கு இந்தியா முன்வந்துள்ளது. ஆனால், நாங்கள் அடிப்படை காரணங்களுக்கு தீர்வை காணவேண்டும்.*

*இலங்கையின் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ 2021 டிசம்பரில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டவேளை, நாங்கள் நான்கு ஒத்துழைப்பு தூண்களுக்கு குறுகிய காலத்திற்கு இணக்கம் தெரிவித்தோம்.*

*முதலாவது, உணவு மற்றும் மருத்துவப் பொருட்களுக்கான அவசர உதவி -சமீபத்தில் நிதியமைச்சருடன் மேற்கொண்ட மெய்நிகர் சந்திப்பின் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஒரு பில்லியன்*


தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.

தொலைநகல் : 0112 67 34 42.

தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87

விளம்பரம் : 077 172 1880

மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜனவரி 26ஆம் திகதி, புதன்கிழமை


# தமிழர் உரிமையும் மிலிந்தவின் குதர்க்கமும்!

*கடனுதவியை அறிவித்தார்.*

*இலங்கை ஜனநாயக நாடு. அங்கு பலவிதமான குரல்கள் ஒலிக்கும். இன்று உலகம் முழுவதிலும் துருவமயப்படுத்தல் பிரிவினை பூதாகாரமயப்படுத்துதல் போன்றவை காணப்படுகின்றன. இது இலங்கைக்கு மாத்திரம் தனித்துவமான விடயமல்ல. இந்தச் சூழமைவின் அடிப்படையிலேயே இதனை நாங்கள் பார்க்கவேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் தங்கள் அடையாளங்களில் கவனம் செலுத்தும் இன்றைய உலகில் பிரிவினைகள் பலவிதமாக உள்ளன. இதனை இந்தச் சூழமைவிலேயே வைத்துப் பார்க்கவேண்டும்.*

*வரலாறு முழுவதும் எங்களது மிகப்பெரும் சவால்களும் சந்தர்ப்பங்களும் இந்து சமுத்திரத்திலிருந்தே வந்துள்ளன. நாங்கள் போர்த்துக்கீசர்கள், ஒல்லாந்தர்கள், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் காணப்பட்டோம். அனைத்திற்கும் எங்கள் கேந்திரமுக்கியத்துவமே காரணமாக காணப்பட்டது.*

*1980களில் இலங்கை, அமெரிக்காவிற்கு நெருக்கமாக உள்ளது என கருதப்பட்டவேளை, இந்தியாவுடன் பதற்றம் காணப்பட்டது. அதனால் விளைவுகள் ஏற்பட்டன.*

*சீனா புதிய நாடு. இந்த விடயத்தினை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து நாங்கள் எங்கள் வரலாறுகளிலிருந்து பாடங்களை கற்றுள்ளோம். சிலவேளைகளில் நாங்கள் தவறிழைக்கின்றோம். -பாடங்களை கற்றுக்கொள்கின்றோம். இதுவே எங்கள் தலைவிதி. நாடொன்றின் யதார்த்தம் இது. நாங்கள் இதனை கையாளவேண்டும்''* என்று குறிப்பிட்டுள்ளார் மொரகொட.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகரின் இந்தக் கருத்துகள் தமிழர்களை கிள்ளுக்கீரைகளாக கருதும் சிங்கள மேலாண்மைவாத கருத்தியலின் வெளிப்பாடாகும். விடுதலைப் புலிகளிடமிருந்து கருணா அம்மான் பிரிந்தபோது அப்போதைய ரணிலின் ஆட்சியில் முக்கிய பொறுப்பிலிருந்த மொரகொட, புலிகளை இரண்டாக உடைப்பதற்கு அரும்பெரும் பாடுபட்டவர்.

தமிழர் உரிமைப்போராட்டம் அஹிம்சையில் தொடங்கி ஆயுதப்போராட்டம்வரை சென்றதற்கான அடிப்படைகளைக்கூட தெரியாதவராக இருக்கும் மிலிந்த, தமிழர் பிரச்சினைத் தீர்வுக்காக குறைந்தபட்ச அதிகாரங்களையாவது வழங்குங்கள் என்று கூறும் நாடொன்றின் தூதுவராக இருந்துகொண்டு பிதற்றுகிறார். அரசியலமைப்பு தொடர்பான விடயங்களில் தமிழர்கள் ஆர்வமாக இல்லை என்பதையும் தமிழர்கள் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையுமே விரும்புகின்றனர் என்றும் மொரகொட எந்த அடிப்படையில் கூறுகின்றார்?

வாழ்வாதாரமும், உழைப்பும் தமிழர்கள் இரத்தத்துடன் கலந்த விடயங்கள். தமிழர் பிரதேச அபிவிருத்தி என்பது அரசு செய்யக்கூடிய கடமை. ஆனால், அரசியலமைப்பினூடாக தமது குறைந்தபட்ச உரிமைகளை பெறுவதற்கு தமிழர்களுக்கு அக்கறை இல்லை என்று எந்த அடிப்படையில் இவரால் கூற முடியும்? போர் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்கள் தமது மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கிவரும் ஆணையின் அடிப்படை கூட தெரியாத உயர்ஸ்தானிகராக இருக்கிறார் மொரகொட.

இந்தியாவில் இலங்கை உயர்ஸ்தானிகராக இருந்து இலங்கை அரசின் ஊதுகுழலாக மொரகொட செயற்படலாம். அதுதான் அவரின் வேலை. அதற்கு அவருக்கு உரித்தும் உண்டு. ஆனால், தமிழர் உரிமையை கொச்சைப்படுத்த, தமிழர்களுக்கு உண்ண உணவும், உறங்க உறைவிடமும் கொடுத்தால் போதும் என்ற திமிர்த்தனமான பேச்சை அவர் பேசக்கூடாது.

இன்னுயிரையே துச்சமாக மதித்து தமிழ் இளையோர் மாண்டது வாழ்வாதாரத்தையும்,அபிவிருத்தியையும் பெறவல்லவென்பதை மிலிந்த புரிந்துகொள்ள வேண்டும்.

# சாட்சிகள் உள்ளபோதிலும்

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி கிட்டாதது ஏன்?




உலகில் பல்வேறு நாடுகளும் உற்சாகம் நிரம்பிய பண்டிகை மாதமாக ஜனவரி மாதத்தினைக் கருதுகின்றன. அதற்காக பலதரப்பட்ட ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. இலங்கையில் பெரும்பாலான பொதுமக்களுக்கு இம்முறை பிறந்துள்ள புத்தாண்டானது முதிர்ச்சியற்ற தீர்மானங்களின் காரணமாக வாழ்க்கையில் பெரும் போராட்டத்தினை எதிர்கொள்ளும் நிலையில் அமைந்திருக்கின்றது. தான்தோன்றித்தனமான ஆட்சியின் கடும் விளைவுகளை அனுபவிக்கின்ற மக்களுக்கு புத்தாண்டு தொடர்பில் சிந்திப்பதனைவிட அன்றாடம் எப்படி வாழ்க்கையை நகர்த்துவது என்று சிந்தித்து வேதனையுறவேண்டிய சூழ்நிலையே ஏற்பட்டுள்ளது. ஊடக செயற்பாட்டாளர்களின்படி ஜனவரி மாதம் என்பது 'கறுப்பு' மாதமாகும். ஜனவரி என்பது 'கறுப்பு ஜனவரி' ஆகும். ஊடகவியலாளர்களுக்கு எதிராக நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுமாறு கோரிக்கை விடுத்து அதற்கான அழுத்தம் வழங்கும் மாதமாக ஜனவரி மாதம் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

ஊடகவியலாளர்களுக்கு எதிராக நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கு அழுத்தம் வழங்கும் மாதமாக ஜனவரி மாதம் மட்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதனூடாக இதர மாதங்களில் குற்றங்கள் ஏதும் நிகழ்ந்து விடவில்லை என்று அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாது. ஆண்டின் ஒவ்வொரு மாதத்தினையும் எடுத்துக்கொண்டால் ஊடகவியலாளர்களுக்கு எதிராக குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எனினும், மிகவும் மோசமான - அதிகளவான சம்பவங்கள் ஜனவரி மாதத்திலேயே நிகழ்ந்துள்ளன. சிரச ஊடக நிலைய தாக்குதல் (2009 ஜனவரி 6), சன்டே லீடர் பிரதம ஆசிரியர் படுகொலை (2009 ஜனவரி 8), சுப்பிரமணியம் சுகிர்தராஜன் படுகொலை (2006 ஜனவரி 24), பிரகீத் எக்னெலிகொட வலிந்து காணாமலாக்கப்பட்டமை (2010 ஜனவரி 24), லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டமை (2011 ஜனவரி 30), ரிவிர ஆசிரியர் உபாலி தென்னக்கோன் மீதான தாக்குதல் (2009 ஜனவரி 23), லால் ஹேமந்த மாவலகே மீதான தாக்குதல் (2008 ஜனவரி 23) ஆகிய இந்தச் சம்பவங்கள் யாவும் ஜனவரியை கருமையாக்கியுள்ளது.

எங்களது தகவல் தொகுப்புக்கமைய 1981ஆம் ஆண்டுமுதல் கருத்து வெளிப்பாட்டு உரிமைக்காக படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலாசார செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கை 115 ஆக உள்ளது. (கருத்துச் சுதந்திர கொலையின் இரை - சீதா ரஞ்சனி – 2011) அந்த காலப்பகுதியில் நிகழந்த படுகொலைகளைத் தவிர தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்கள் தொடர்பில் சரியான எண்ணிக்கை பற்றி ஆராய்ந்து பார்க்கப்படவில்லை. எனினும், போரின் இறுதிக் காலப்பகுதியில் மோதல்களில் அகப்பட்டு இறந்த, மக்கள் மத்தியில் போர் வலயத்தினுள் வாழ்ந்த ஊடகவியலாளர்களும் இறந்து போனதாக அறியப்பட்டாலும், அது தொடர்பில் உறுதியான தகவல்கள் அடங்கிய தரவுத் தொகுப்புகளற்ற நிலையே காணப்படுகின்றது. எனினும், கடந்த இரண்டு தசாப்த காலப்பகுதியில் படுகொலைகளைத் தவிர, ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தல்கள், தாக்குதல்கள் தொடர்பில் உள்ள தரவுகள் பற்பல இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களின் இயல்பும் அதன் போக்குகளும் பல சான்றுகளை உலகுக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவ்வாறு நிகழந்துள்ள பாரியளவிலான குற்றங்களில் ஆகக் குறைந்தது ஒரு குற்றத்திற்கு எதிராகவேனும் நீதி கிட்டியுள்ளதா என்பது பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டியுள்ளது என்பதே இந்த பதிவின் நோக்கமாகும். இறந்த காலத்தைத் தவிர்த்து, போர் வலயத்தினுள் மோதலுக்குள் அகப்பட்டு நிகழ்ந்த கொலைகளைத் தவிர்த்து, அண்மைக்கால வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்களின் பட்டியலைப் பார்க்கும்போது நேரடியாகவே ஊடகவியலாளர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கு இயலாமல் போனது ஏன் என்பதனை ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது. விசாரணைகள் நடைபெறும் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளுக்குத் தேவையான பொலிஸ் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ள அவ்வாறான சம்பவங்களின் பட்டியலைப் பற்றிப் பார்ப்போம்.

**சம்பவங்களின் பட்டியல்:**

**2000- 2015 படுகொலைகள்**

1. மயில்வாகனம் நிமலராஜன் - படுகொலை 2000.10.19
2. அய்யாத்துரை ஜி. நடேசன் - படுகொலை 2004.05.01
3. கந்தசாமி ஐயர் பாலநடராஜ் - படுகொலை 2004.08.16
4. தர்மரத்னம் சிவராம் - படுகொலை 2005.04.28
5. ரேலங்கி செல்வராஜா - படுகொலை 2005.08.12
6. சுப்பிரமணியம் சுகிர்தராஜன் - படுகொலை 2006.01.24
7. சம்பத் லக்மால் டி சில்வா - படுகொலை 2006.07.01
8. சுபாஸ் சந்திரபோஸ் - படுகொலை 2007.04.16
9. செல்வராசா ரஜிவ்வர்மன் - படுகொலை 2007.04.29
10. சகாதேவன் நிலக்ஷன் - படுகொலை - 2007.08.01
11. பரணிரூபசிங்கம் தேவகுமார் - படுகொலை 2008.05.28
12. லசந்த விக்கிரமதுங்க - படுகொலை 2009.01.08

**வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள்**

சுப்பிரமணியம் ராமச்சந்திரன் - காணாமலாக்கப்பட்டது 2007.02.15

பிரகீத் எக்னெலிகொட - காணாமலாக்கப்பட்டது 2010.01.24

**தாக்குதலுக்குள்ளானவர்கள்**

1. டி.எம்.ஜி.சந்திரசேகர - தாக்குதல் 2007.12.27
2. லால் ஹேமந்த மாவலகே - தாக்குதல் 2008.01.25
3. கீத் நொயர் - தாக்குதல்/கடத்தல் 2008.05.22
4. நாமல் பெரேரா - தாக்குதல் 2008.06.30
5. ரதிகா தேவகுமார் - துப்பாக்கிச்சூடு 2008.09.08
6. உபாலி தென்னக்கோன் - தாக்குதல் 2009.01.23
7. என். வித்யாதரன் - கடத்தல்/தாக்குதல் 2009.02.26
8. போத்தல ஜயந்த - கடத்தல்/ தாக்குதல் 2009.06.01
9. ஞானசுந்தரம் குகநாதன் - தாக்குதல் 2011.07.29
10. மந்தனா இஸ்மாயில் - அச்சுறுத்தல் 2013.08.23

**ஊடக நிறுவனங்களின் மீதான தாக்குதல்**

1. சுடரொளி பத்திரிகை நிறுவனம் - குண்டுத் தாக்குதல் 2005.08.29
2. உதயன் பத்திரிகை நிறுவனம் - தீக்கிரை/ துப்பாக்கிச் சூடு 2006.06.02/ 2013.04.13
3. சியத்த நிறுவனம் - தாக்குதல் 2010.07.30
4. சிரச தொலைக்காட்சி - நிகழ்ச்சி அரங்கம் அழிப்பு 2009.01.06
5. இலங்கை ஈ நியூஸ் நிறுவனம் - தீக்கிரை 2011.01.30

இந்தப் பட்டியலில் உள்ளடங்கும் அனைத்து சம்பவங்களுக்கும் நீதியை நிலைநாட்டு வதற்கான செயற்பாடுகளை ஆரம்பிக்க தேவை யான அடிப்படையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனைத் தவிர குறிப்பிட்ட அக்காலப்பகுதியில் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தினைத் தடுப்பதனை நோக்கமாகக்கொண்ட நேரடி தாக்குதல்கள் காரணமாக ஊடக ஊழியர்கள் (பத்திரிகை பிரதிநிதிகள், விநியோகஸ்தர்கள் மற்றும் அச்சக ஊழியர்கள் ஆகியோர்) 12 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# இன்றைய நாளில்...

- **1531 – போர்த்துக்கல், லிஸ்பன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 30,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.**
- **1924 – சென் பீட்டர்ஸ்பேர்க் லெனின்கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.**
- **1926 – ஜோன் லோகி பைர்ட் முதலாவது தொலைக்காட்சிப் பெட்டியைக் காட்சிப்படுத்தினார்.**
- **1930 – இந்திய தேசியக் காங்கிரஸ் 26 சனவரியை இந்தியாவின் விடுதலை நாளாக (பூரண சுயராஜ்ய நாளாக) அறிவித்தது. இது 17 ஆண்டுகளின் பின்னர் நடைமுறைப்படுத் தப்பட்டது.**
- **1950 – இந்தியா குடியரசு நாடானது. ராஜேந்திர பிரசாத் அதன் முதலாவது குடியரசுத் தலைவரானார்.**
- **1962 – ரேஞ்சர் 3 விண்கலம் சந்திரனை ஆராய்வதற்காக விண்ணுக்கு ஏவப்பட்டது. ஆனாலும் இத் தளவுளவி 22,000 மைல்களால் சந்திரனைத் தவறவிட்டது.**
- **1965 – ஹிந்தி இந்தியாவின் அதிகாரபூர்வ மொழியானது.**
- **1986 – தேசிய எதிர்ப்பு இயக்கத்தினரால் உகாண்டா அரசு கவிழ்க்கப்பட்டது.**
- **2001 – குஜராத்தில் இடம்பெற்ற 7.7 அளவு நிலநடுக்கத்தில் 20,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.**

# நக்கல் நமசிவாயம்

**எனக்கும் கொரோனா வந்தது எண்டு சொல்லுறதும் இப்போ ஒரு பெஷனா போயிட்டுது பாருங்கோ...**



# சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் சந்திப்பு

இலங்கையில் 'மக்கள் யாப்பு' என்ற வகையிலான அரசியலமைப்பை ஏற்படுத்துவதை முன்னிலைப்படுத்தி, பிரபல 'ராவய' பத்திரிகைக்கு கால் நூற்றாண்டு காலமாக ஆசிரியராக விளங்கிய விக்டர் ஐவன் மற்றும் டாக்டர் சைபூல் இஸ்லாம் உள்ளிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) முற்பகல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அதனை மையப்படுத்தி முக்கிய சமகாலப் பிரச்சினைகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில், கட்சியின் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மற்றும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் அர்ஷாத் நிஸாம்தீன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

பிரஸ்தாப 'மக்கள் யாப்பு' அறிமுகப் படுத்தப்படுவதன் அவசியத்தை நோக்கமாகக் கொண்டு இந்த செயற்பாட்டாளர்கள் முக்கிய அரசியல் தலைவர்களைச் சென்று நேரில் சந்தித்து விளக்கமளித்து வருகின்றனர்.



தென்னாபிரிக்காவில் நிலவிய இன ஒதுக்கலுக்கெதிராகக் குரல் கொடுத்த ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் முயற்சியின் பயனாக ஏற்படுத்தப்பட்ட 'மக்கள் யாப்பு' அநேக நாடுகளுக்கு சிறந்த முன்மாதிரியாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.


## 25.01.2022 நாணய மாற்று வீதம்

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 03 324 | 035 30 4 |
| கனேடியன் டொலர் | 044 7880 | 050 6714 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 802 | 21 2444 |
| யூரோ | 113 0316 | 121 6132 |
| ஜப்பான் யென் | 0 6226 | 0 6878 |
| சிங்கப்பூர் டொலர் | 036 1788 | 041 03 |
| ஸ்ரேலிங் பவுன் | 155 14 4 | 163 5416 |
| சுவிஸ் பிராங்க் | 104 4762 | 112 1412 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 8333 |
| குவைட் | குவைட் தினார் | 557 0514 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 6413 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 3770 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7484 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 44 3 |

# ஹோமாகம வைத்தியசாலையில் ஊழியர்கள் 23 பேருக்கு கொரோனா




ஹோமாகம ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் ஜனித் ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி, 3 மருத்துவர்கள், பதினொரு தாதியர்கள் மற்றும் கனிஷ்ட பணிக்குழாமைச் சேர்ந்த ஒன்பது பேரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித் துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, குறித்த மருத்துவமனையில் கொரோனா நோயாளர்கள் சிகிச்சைபெறும் இரண்டு சிகிச்சை அறைகளில் 75 படுக்கைகளே உள்ளன, எனினும், தற்போது 81 நோயாளர்கள் சிகிச்சைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீரை சிக்கனமாக பயன்படுத்த கோரிக்கை

எதிர்காலத்தில் தண்ணீர் தொடர்பில் நெருக்கடி நிலை ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அதனை குறைப்பதற்கு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்றும் அச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து நீரை பயன்படுத்து மாறும் அவர் மேலும் மக்களை வலியுறுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சின்னப்பாடு கடலில் மீனவர் வலையில் சிக்கிய முதலை

## வில்பத்து சரணாலயத்தில் விடுவிக்க நடவடிக்கை





(ரஸீன் ரஸ்மின்)

முந்தல் - சின்னப்பாடு வென்னப்புவல கடற்பிரதேசத்தில் 7 அடி முதலையொன்று மீனவர் ஒருவரின் வலையில் சிக்கிய நிலையில் நேற்று முன்தினம் (24) மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள மீனவர் ஒருவரின் வலையிலேயே இந்த முதலை சிக்கியதாக மீனவர்கள் குறிப்பிட்டனர்.

கடலிலிருந்து மீனவர்கள் வலையை கரையை நோக்கி இழுத்துக்கொண்டு வந்தபோது அந்த வலை பெரும் கனமாகக் காணப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குறித்த மீன் வலை கரையை வந்தடைந்ததும் அந்த வலைக்குள் பெரிய மீன் ஒன்று சிக்கிவிட்டதாகவே தாம் முதலில் கருதியதாகவும் மீனவர்கள் கூறினர்.

எனினும், அந்த வலைக்குள் இருந்து 7அடி நீளமான முதலை ஒன்று இருப்பது பின்னர்தான் மீனவர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இதுபற்றி ஆனவிழுந்தான் மற்றும் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீனவர்களின் உதவியோடு குறித்த முதலையை பிடித்து பாதுகாப்பாக எடுத்துச்சென்றனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட குறித்த முதலையை வில்பத்து சரணாலய பகுதியில் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.



மொனராகலை மாவட்டத்திலுள்ள நூறு பாலர் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தலைமையில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.
(படப்பிடிப்பு: கெலும் குணதிலக்க)

# பெண்ணின் சடலம் பசறையில் மீட்பு

(எம்.செல்வராஜா, என். மலர்வேந்தன்)

பதுளை பகுதியின் வேவெஸ்ஸ பெருந்தோட்ட தெபத்தை தோட்டப் பிரிவிலிருந்து பெண் ஒருவரின் சடலமொன்றினை பதுளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

தெபத்தை தோட்டப் பிரிவைச் சேர்ந்த லெட்சுமணன் சந்திரலேகா என்ற 58 வயது நிரம்பிய பெண்ணின் சடலமே மீட்கப்பட்டதாகும். பதுளை – பசறை பிரதான வழியின் 6ஆம் மைல் அருகாமையிலுள்ள தெபத்தை தேயிலை மலையிலேயே இச்சடலம் கிடந்தது.


பெண்ணொருவரின் சடலம் தேயிலை மலையில் கிடப்பதாக பதுளை பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கவே, பொலிஸார் விரைந்து சடலத்தை மீட்டனர். சடலம் தற்போது பதுளை அரசினர் மருத்துவமனை பிரேத அறையில் சட்ட வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இப்பெண் பாலியல் வல்லுறவிற் குட்படுத்தப்பட்டு, கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டிருப்பதாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், பொலிஸார் பல்வேறு கோணங்களில் இம் மரணம் குறித்து தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# இறால் பண்ணை நீர்த்தொட்டிக்குள் வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

## ஆராச்சிகட்டுவவில் சம்பவம்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - ஆராச்சிகட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள இறால் பண்ணை நீர்த்தொட்டிக்குள் விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பத்துளுஓயா - மகாமாலிய பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த குறித்த நபர் நேற்று முன்தினம் (24) காலை இறால் பண்ணையில் இறால்களுக்கு காலை நேர உணவை வீசிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த நபர் இறால் பண்ணை நீர்த்தொட்டிக்குள் வீழ்ந்து கிடப்பதை அவதானித்த இறால் பண்ணையினர் இது தொடர்பாக ஆராச்சிகட்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

குறித்த தகவலின் அடிப்படையில் அங்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அத்துடன், அங்கு வருகை தந்த ஆராச்சிக்கட்டு பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவ இடத்தில் மரண விசாரணையை மேற்கொண்ட பின்னர், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக சிலாபம் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுத்துவக்குகள் வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

(அனுராதபுரம் செய்தியாளர்)

நான்கு கட்டுத்துவக்குகள் மற்றும் கசிப்பு தயாரிப்பதற்கு ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு கோடா பெரல்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 02ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்கும்படி அநுராதபுரம் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கட்டுத்துவக்கு நான்கு மற்றும் கோடா பெரல்கள் இரண்டுடன் சந்தேகநபர்கள் இருவரையும் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே நீதவான் இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

குஞ்சிகுளம், இப்பலோகம பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட 36 மற்றும் 60 வயதுடைய இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கசிப்பு தயாரித்தல் மற்றும் கட்டுத்துவக்கு கட்டி காட்டு மிருகங்களை வேட்டையாடுதல்களில் ஈடுபடுவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய 23ஆம் திகதி மாலை வலகம்பாகுவ பகுதியில் திறப்பனை பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கு களுத்துறையில் விசேட வேலைத்திட்டம்

2018, 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் உயர் கல்விக்கென அரச பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெறமுடியாதுபோன மாணவர்களுக்கென விசேட வேலைத்திட்டமொன்று களுத்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அரச வட்டியற்ற கடன் யோசனை முறையில் உள்ளடக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை தொடர்வதற்கு இதனூடாக மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஸ்கில்ஸ் ஹை எடியுகேஷன் எக்ஷிபிஷன் எட் களுத்துறை 2022 என குறித்த வேலைத்திட்டத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலக அலுவலகங்களையும் உள்ளடக்கி எதிர்வரும் 28ஆம் திகதி குறித்த ஒருநாள் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை களுத்துறை மாவட்ட செயலக அலுவலகத்திற்கு வருகை தந்து அதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியுமென அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பெருந்தோட்ட வைத்தியசாலைகளை பொறுப்பேற்கிறது அரசாங்கம்; முதற்கட்டமாக 59 நிறுவனங்களுக்கு அமைச்சரவை அனுமதி!

(யோ.தர்மராஜ்)

பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள 450 சுகாதார நிலையங்களில் முதற்கட்டமாக 59 சுகாதார நிறுவனங்கள் மாகாண சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல முன்வைத்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (25) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இதனைத் தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் உரிய சுகாதார நிறுவனங்கள் இல்லாமையாலும் அவை நகரப்புறங்களில் இருப்பதாலும் அங்குள்ள மக்கள் நோய்வாய்ப்பட்டால் அவர்கள் ஒருநாள் விடுமுறையிலேயே வைத்தியசாலைகளுக்குச் செல்லவேண்டியுள்ளது.

மேலும், சிறுவர்களுக்கு மருந்துகள் எடுப்பதென்றாலும் பாரிய நெருக்கடிகள் இருப்பதால் பெருந்தோட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. அதன்படியே, தற்போது பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளை அரசு பொறுப்பேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அதன்படி, குறித்த அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மலையக சமூகத்தவர்களுக்கு மிகவும் பயன்வாய்ந்த சுகாதார சேவைகளை வழங்கும் நோக்கில் தோட்டத்துறையில் காணப்படும் சுகாதார நிறுவனங்களை மாகாண சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைத்தல் மிகவும் பொருத்தமானதாக அமையும் என அடையாளங் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பின்பற்றவேண்டிய பொறிமுறைகள் தொடர்பாக பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமையில், குறித்த ஏனைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரிகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய, தோட்டத்துறையில் காணப்படும் 450 சுகாதார நிறுவனங்களில் முதற் கட்டமாக 59 சுகாதார நிறுவனங்களை மாகாண சுகாதார அதிகாரிகளுக்கு ஒப்படைப்பதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## மாணவருக்கு கொரோனா 3 வகுப்புகளுக்கு பூட்டு

(மநுர சுதத்)

ஹட்டன் ஸ்ரீபாத ஆரம்பப் பாடசாலை மாணவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து, அவர் கல்வி கற்கும் ஐந்தாம் தரத்தின் மூன்று வகுப்புகளையும் தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் இரேஷா ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் குறித்த மாணவர் பங்கேற்றுள்ளமையால், ஐந்தாம் தரத்தின் மூன்று வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுடன் தொடர்புகளை பேணியிருக்கலாம் என்பதால், இந்த மூன்று வகுப்புகளையும் தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.



அ.இராமன்



ஜே.எம்.ஹாபிஸ்


கண்டி சலூன் அழகி நிறுவனத்தின் ஏற்பாட்டில் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பெப்ரவரி முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கண்டி கெட்டம்பே ஒக் ரே மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலாபூஷணம் ஜே.எம்.ஹாபிஸ் ஊடகத்துறைக்கான சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன், கலாபூஷணம். அ.இராமன் இலக்கியச் செம்மல் ரூபராணி ஜோசப் நினைவு விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பொதுமக்களை முறையாக வழிநடத்துக! வைத்தியசாலை பணிப்பாளருக்கு கடிதம்

## அரவிந்தகுமார் எம்.பியின் கோரிக்கையை ஏற்ற பதுளை நிர்வாகம், மக்களின் நலன் கருதி நடவடிக்கை எடுப்பதாக உறுதி

பதுளை பொது வைத்தியசாலையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் ஊழியர்களின் கடுமையான, முறையற்ற கெடுபிடிகளுக்கு பொதுமக்கள் குறிப்பாக, பதுளை மாவட்டம்



தவிர்ந்த நாடளாவிய ரீதியில் பல பாகங்களிலிருந்தும் வரும் மக்களும் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றனர்.

இந்த விடயம் தற்போது பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமாரின் கவனத்திற்கு பலரும் கொண்டுசென்றுள்ளனர்.

மக்களின் கோரிக்கையை செவிசாய்த்த, உறுப்பினர், உடனடியாக பதுளை பொது வைத்தியசாலை பணிப்பாளரை தொடர்புகொண்டு நோயாளர்களை பார்வையிட வரும் பெருந்தோட்ட மற்றும் பொதுமக்கள் சரியாக வழிநடத்தப்படவேண்டுமெனவும் அத்தோடு, எல்லோருக்கும் பொது வான நியாயமான வழிமுறைகள் முன்னெடுக்கப்படவேண்டுமெனவும் கடுமையான எச்சரிக்கையொன்றை கடிதம் மூலமும் தொலைபேசியூடாகவும் பணிப்பாளரின் கவனத்திற்கு அறிவித்துள்ளதாக அறிய முடிகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கையை செவிசாய்த்து பொதுமக்களின் அசௌகரிய செயற்பாடுகள் இனிவரும் காலத்தில் நடைபெறாவண்ணம் நடவடிக்கை எடுப்பதாகவும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் பொதுமக்களின் நலன் கருதி நடவடிக்கை எடுப்பதை ஆவணம் செய்வதாக பதுளை பொது வைத்தியசாலை பணிப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமாருக்கு பதில் கடிதம் மூலம் உறுதியளித்துள்ளார் என்பது சுட்டிகாட்டத்தக்கது

## சந்தேகநபர் மன்றில் ஆஜர்ப்படுத்தப்படாததால்

# இராகலை தீ விபத்து தொடர்பான வழக்கு நுவரெலியா மேல்நீதிமன்றுக்கு மாற்றம்!

ஐந்து உயிர்களைக் காவுகொண்ட இராகலை தீ விபத்து சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நுவரெலியா மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



இச்சம்பவம் தொடர்பான ஒன்பதாவது வழக்கு விசாரணை வலப்பனை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (24) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு மூன்று மாதங்களை கடந்துள்ள நிலையில் சந்தேகநபரை சிறைச்சாலை அதிகாரிகள் மன்றில் ஆஜர்ப்படுத்தாததால் இவ்வழக்கு விசாரணையை நுவரெலியா மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதாகவும், சந்தேக நபருக்கு நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் பிணை மனு சமர்பிக்க முடியுமெனவும் வலப்பனை நீதவான் நீதிமன்ற நீதவான் டி.ஆர்.எஸ்.ஜினதாச அறிவித்துள்ளார்.

வழக்கின் சந்தேகநபர் கடந்த 114 நாட்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சந்தேகநபரை பதுளையிலிருந்து அழைத்து வரமுடியாத நிலைமை காணப்படுவதாக சிறைச்சாலை அதிகாரிகள் நீதவானின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர். எனினும், சந்தேகநபர் "ஸ்கைப்" தொழிநுட்பம் மூலம் விசாரணை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் மீண்டும் இவ்வழக்கு நேற்றுமுன்தினம் (24) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேக நபரை மீண்டும் "ஸ்கைப் "தொழில்நுட்பம் ஊடாக விசாரணையை முன்னெடுத்த நீதவான் வழக்கை நுவரெலியா மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதாக தெரிவித்துடன், பெப்ரவரி 7ஆம் திகதிவரை ஒத்திவைத்து உத்தரவு பிறப்பித்தார்.

ஐந்து உயிர்களைக் காவுகொண்ட இந்த விபத்துச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் தீயில் கருகி உயிரிழந்திருந்தனர். சம்பவம் இடம்பெற்றபோது வீட்டுக்கு வெளியே மதுபோதையில் காணப்பட்ட அதே குடும்பத்தைச் சேர்ந்த தங்கையா இரவீந்திரன் என்பவர் உயிர் தப்பியிருந்தார்.

மேற்படி தீ சம்பவத்தில் பெற்றோல் பாவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க இரசாயன பகுப்பாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டு அதன் அறிக்கை இராகலை பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இராகலை நகரிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலைய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள தங்கையா இரவீந்திரன் பெற்றோல் பெற்றுச் சென்றதாக இராகலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இவரை பொலிஸார் கடந்த வருடம் ஒக்டோபர் 12ஆம் திகதி கைதுசெய்து அன்றைய தினம் மாலை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணையில் மேலதிக விசாரணைகளை இராகலை குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் நீதிமன்றில் ஆஜராகியிருந்த இராகலை பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மாவனல்லை பிரதேச சபைக்கான புதிய தலைவர் இன்று தெரிவு

## சபை அமர்வின் அறிக்கைகள் தமிழ் மொழியிலும் வழங்க பிரேரணை நிறைவேற்றம்

(எம்.எஸ். அமீர் ஹுசைன்)

மாவனல்லை பிரதேச சபையின் வெற்றிடமாகியுள்ள தலைவர் பதவிக்கு புதிய தலைவரை தெரிவுசெய்வதற்கான கூட்டம் இன்று 26ஆம் திகதி புதன் காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கின்றது. அதற்கான அறிவித்தலை சப்ரகமுவ மாகரண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் துலிப் சொமிரத்ன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பிரதேச சபையின் தலைவராக இருந்த சந்தன குமார ஜயவந்தன அவரது பதவிக் காலத்தில் 2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தை முறையாக சமர்ப்பித்து, நிறைவேற்ற தவறியதால் அவர் பதவி விலகியதாக கருதப்படுவதாகவும் இதனால், தலைவர் பதவி வெற்றிடமாகியிருப்பதாகவும் சப்ரகமுவ மாகாண சபையின் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ விசேட வர்த்தமாணி அறிவித்தல் மூலம் 2022.01.15ஆம் திகதி அறிவித்திருந்தார்.

அந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் இன்று (26) நடைபெறும் பிரதேச சபையின் அமர்வின்போது தலைவர் தெரிவுக்கான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே ஐ.தே.முன்னணி ஆட்சிக் காலத்தில் இந்த பிரதேச சபையின் அதிகாரம் ஐ.தே.கட்சியின் கீழ் இருந்துவந்தது. ஆனாலும் ஓர் ஆசன வித்தியாசத்திலேயே அதன் அதிகாரமும் இருந் வந்தது. எனினும், கடந்த இரண்டு வருடங்களாக சபையில் அங்கம் வகிக்கின்ற பொதுஜன பெரமுன, ஸ்ரீ.ல.சு. கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்களின் ஆதரவுடனேயே ஐ.தே.முவின் அதிகாரம்



இருந்துவந்தது.

ஆனாலும் தற்போதைய அரசியல் சூழ்நிலை மாற்றத்தின் காரணமாக 2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் தோல்வியடைந்ததால் அதிகாரம், பிரதான ஆளும் கட்சியின் பக்கம் சாய்ந்திருப்பதால் இன்று நடைபெறுகின்ற தலைவர் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது ஏற்கனவே உப தலைவராக இருந்த வருகின்ற கே.ஜி. பியதிஸ்ஸவே தலைவராகும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

### சபை அமர்வின் அறிக்கைகள் தமிழ் மொழியிலும் இடம்பெற வேண்டும்

அதேநேரம் தற்காலிக தலைவராக பதவியில் இருக்கின்ற கே.ஜி. பியதிஸ்ஸவால் அழைக்கப்பட்டு கூட்டப்பட்ட மாவனல்லை பிரதேச சபையின் விசேட கூட்டம் ஒன்று நேற்று 25ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது, பிரதேச சபையின் கூட்ட அறிக்கைகள் சிங்கள மொழி மூலம் மாத்திரமே வழங்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் தமிழ் மொழி பேசும் 10 முஸ்லிம் உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களில் அநேகமானவர்களுக்கு சிங்கள மொழி பரிச்சயம் இல்லாததால் கூட்டறிக்கைகள் தமிழ் மொழியிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்று ஹெம்மாத்தகம பிரதேசத்தை பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர் எம். ஆர். எம். அஸாம் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பாக எதிரணி உறுப்பினர் மாற்று கருத்துகளை முன்வைத்தனர். குறிப்பாக, தமிழ் பேசும் முஸ்லிம் உறுப்பினர்கள் சிலர் அவ்வாறான மொழிபெயர்ப்பு அவசியம் இல்லை என்றும் எல்லா உறுப்பினர்களாலும் சிங்களம் பேசவும் புரிந்துகொள்ளவும் முடியும் என்றும் தெரிவித்தனர். அதனால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது. முன்னாள் தலைவர் ஜயவந்தன, இந்த பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த பிரேரணை மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் அறிக்கைகள் தமிழ் மொழி மூலம் வழங்கப்படவேண்டும் என்ற பிரேரணை 03 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இந்த பிரேரணைக்கு ஆதரவாக 20 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன.

அதேநேரம் நேற்றைய கூட்டத்தை முன்னாள் தலைவர் ஜயவந்தன சட்டவிரோதமான கூட்டம் என்று ஆட்சேபித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பதுளையில் புத்தகக் கண்காட்சி ஆரம்பம்

'பிறபுத்த' கலாசார அறக்கட்டளை மற்றும் பதுளை மாநகர சபை ஆகியன இணைந்து ஏற்பாடுசெய்யும் வருடாந்த 'பதுளை புத்தக வசந்தம்' பதுளை புத்தகக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு நேற்று பதுளை சேனநாயக்க பூங்காவில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.





குறித்த புத்தகக் கண்காட்சி நேற்றுமுன்தினம் (24) முதல் 30ஆம் திகதிவரை தினமும் காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை பதுளை சேனநாயக்க பூங்காவில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னணி புத்தக வெளியீட்டாளர்களின் பங்கேற்றலுடன் நடைபெறும் இந்த புத்தகக் கண்காட்சியில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான புத்தகங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அதேவேளை புத்தகங்களை கொள்வனவுசெய்பவர்களுக்கு 20 வீத விசேட தள்ளுபடிகள் வழங்கப்பட ள்ளமை விசேட அம்சமாகும்.

# கனிய வள – சுரங்கத் கைத்தொழில்களுக்கான அனுமதிப்பத்திரங்களை ஒன்லைனில் பெறலாம்

## சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

கனிய வள மற்றும் சுரங்கத் கைத்தொழில்கள் தொடர்பான அனுமதிப்பத்திரங்களை ஒன்லைன் முறையில் பெற்றுக்கொள்ள சுற்றாடல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சச்சிந்ர சில்வா தெரிவித்தார்

கண்டியில் ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்பட்ட செயலமர்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகக்குறைந்த தொகை ஊழியர்களைக் கொண்டு மிகப் பாரிய பொறுப்புகளை நிறைவேற்றும் நிறுவனங்களில் சுற்றாடல் அமைச்சு மிக முக்கியமான ஒன்றாகும். சுற்றாடல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பல நிறுவனங்கள் உள்ளன. சுற்றாடல் பொலிஸ் உட்பட பல பாதுகாப்பு அமைப்புகள் பங்கு கொள்கின்றன. அவற்றிற்கு பாரியளவில் ஆளணியினர் காணப்படுகின்றனர்.

ஆனால், சுற்றாடல் அமைச்சைப் பொறுத்த வரை சுமார் 30 - 40 பேரை வைத்துக்கொண்டு நாடளாவிய ரீதியில் கடமைபுரியவேண்டியுள்ளது. சுற்றாடல் என்பது எமது எதிர்கால சந்ததிக்கு மீதப்படுத்தப்படவேண்டிய ஒரு முக்கிய வளமாகவுள்ளது. எனவே, சுற்றாடல் அமைச்சு வழங்கும் அறிவுரைகளை நன்கு கவனத்திற்கொள்வது



பிரஜைகளின் பொறுப்பாகும்.

அண்மைகாலமாக நில அதிர்வுகள் பற்றி அதிகம் பேசப்பட்டுவருகிறது. ஆங்காங்கே பல சிறு சிறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதுடன் மத்திய மலைநாட்டில் சிறு சம்பங்கள் பல தொடராகப் பதிவாகியுள்ளன. ஒரு புமி அதிர்வு இடம் பெற்றபின் அதன் சேத விபரங்களை ஊடகங்கள் வெளியிடுவதை விட புமி அதிர்வு ஏற்பட முன் என்ன செய்யலாம். அதிர் ஏற்பட்ட வேளை என்ன செய்வது, அதிர்வின் பின் மேற்கொள்ள வேண்டியவைகள் என்ன என்ற மூன்று அம்சங்களையும் ஊடகவியலாளர் பொதுமக்களுக்குவழங்குவது முக்கியமாகும்.

கனிய வளங்கள், மணல், மண், கருங்கற்கள் போன்ற பல விடயங்கள் சுற்றாடல் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ளன. இதில் கனிய வளங்கள் என்பது ஒருபோதும் மீளப்பெற முடியாதவை. எனவே அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்யாவிட்டால் ஒரு காலத்தில் அவை இல்லாது போகலாம்.

அப்படியான நிலை ஏற்படின் கனிய வளங்களுடன் தொடர்புடைய கைத் தொழில்கள் இல்லாது போகலாம். இதனால், பல்லாயிரக்கணக்கான மக்கள் தொழில்களை இழக்கவும் நேரிடும். குறைந்தளவு ஊழியர்களைக் கொண்டு நாம் பணியாற்றும் காரணத்தால் சில வேளைகளில் அனுமதிப்பத்திரங்களுக்கு காலதாமதம் ஏற்படுகிறது. எனவே "ஒன்லைன்" முறையில் அவற்றைப் பெற்றுக்கொள்ள வசதிகளை செய்துள்ளோம். எதிர்காலத்தில் அதனை இன்னும் விரிவுப்படுத்தி அனுமதிப்பத்திரங்கள் தபால் சேவையுடாக இல்லங்களுக்கே வந்தடைய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.




# Women in Management, IFC மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இணைந்து இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்களுக்கு கௌரவிப்பு

Women in Management (WIM) இனால் IFC மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆகியன இணைந்து சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் 2021 நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது இலங்கை மற்றும் மாலைதீவுகளில் தமது துறைகளில் சிறப்பாக செயலாற்றியிருந்த நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

11ஆவது ஆண்டாகவும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வின்போது விருந்தோம்பல், வங்கி மற்றும் நிதியியல், சரக்குக் கையாளல் மற்றும் விநியோக சங்கிலிகள், தொழில்முயற்சியாண்மை, ஊடகம் மற்றும் சட்டம் போன்றவற்றுடன், தாம் தெரிவுசெய்த தொழில்நிலைகளில் அல்லது தமது சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு ஊக்குவிப்பாக திகழ்ந்தமைக்காக கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கலின்போது, பணியிடங்களில் பெண்களின் வளர்ச்சி மற்றும் அவர்களுக்கு வலுவூட்டல் வழங்கியிருந்த இலங்கையின் நிறுவனங்களின் செயற்பாடுகளும் பாராட்டப்பட்டிருந்தன.

இந்த விருதுகள் வழங்கலின்போது உயர்ந்த விருதுகள் வைத்தியர் மஹேஷி ராமசாமி (ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் நிபுணர்), பேராசிரியர் நதீரா கருணாவீர (ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண்), அருணி குணதிலக்க (Trail Blazer), ரந்துலா டி சில்வா (ஆண்டின் சிறந்த கேம் சேஞ்ஜர்) மற்றும் கலாநிதி. வஜிரா சித்ரசேன (நடுவர்களின் தெரிவு) போன்ற விருதுகள் வழங்கப்பட்டிருந்தன. விருதுகளின் வெற்றியாளர்கள் பற்றிய முழு விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

Women in Management (WIM)இன் ஸ்தாபகர்/தலைமை அதிகாரி கலாநிதி. சுலோச்சனா செகேரா கருத்துத் தெரிவிக்கையில், "மீட்சி, ஆர்வ மனப்பாங்கு, கடும் உழைப்பு மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் கொண்டாட்டமாக 2021ஆம் ஆண்டின் விருதுகள் வழங்கும் நிகழ்வு அமைந்திருந்தது. தொற்றுப் பரவல் ஆரம்பித்து மூன்றாவது ஆண்டில் நாம் காலடி பதித்துள்ள நிலையில், இன்னல் வேளைகளின் போதும் காணப்படும் வாய்ப்புகள் மற்றும் ஆற்றல்களைப் பற்றி இந்த ஆண்டின் வெற்றியாளர்கள் எமக்கு நினைவூட்டுவதாக அமைந்துள்ளனர். சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் இலங்கை மற்றும் மாலைதீவுகளைச் சேர்ந்த பெண்கள் கொண்டிருக்கும் ஆற்றல்களைப் பற்றியும் இவர்கள் எமக்கு நினைவூட்டியுள்ளனர். வெளிப்படையில் தமது நிலையை பெற்றுக்கொள்வதில் பெண்கள் பின்நின்றாலும், கடந்த தசாப்த காலப்பகுதியில் சிறந்த 50 பெண் நிபுணர்கள் விருதுகளினூடாக, அவர்களுக்கு தமது திறமைகள் மற்றும் சாதனைகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புக் கிட்டியிருந்ததுடன், ஏனையவர்கள் மத்தியில் ஆர்வமனப்பாங்களை தோற்றுவிக்கக்கூடியவர்களாகவும் அமைந்திருந்தனர்" - என்றார்.

கடந்த காலங்களில் 470இற்கும் அதிகமான வெற்றியாளர்களைக்கொண்டுள்ளதுடன், நாட்டின் நிலைபேறான மற்றும் உள்ளடக்கமான பொருளாதார வளர்ச்சியில் தலைவர்களாக, ஊழியர்களாக, தொழில் முயற்சியாளர்களாக மற்றும் பங்காளர்களாக ஆற்றும் பங்களிப்புகளை கௌரவித்து வெளிக்கொணரும் வகையில் சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் அமைந்துள்ளன.

இந்த நிகழ்வை இணைந்து முன்னெடுப்பதில் IFC ஏழாவது வருடத்தை பூர்த்தி செய்துள்ளதுடன், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான IFCஇன் இடைக்கால முகாமையாளர் விக்டர் அந்தனிபிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், "பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்கள் சிறந்த வகையில் கட்டியெழுப்பப்படுவதற்கு நேர்த்தியான சூழலை கட்டியெழுப்ப வேண்டும். IFC-DFAT Women in Work நிகழ்ச்சியினூடாக ஆதரவளிக்கப்பட்டிருந்த இந்த ஆண்டின் சிறந்த 50 விருதுகள் வழங்கலினூடாக தொற்றுப் பரவல் மத்தியில் இலங்கையின் பெண்களின் மீட்சியான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது" - என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலி கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில் சிறந்த 50 விருதுகள் வழங்கல் என்பதனூடாக வியாபாரத்திலுள்ள பெண்கள் தமது சக்தியினூடாக தலைமைத்துவத்திலுள்ளவர்களையும் மற்றும் சமூகத்திலுள்ளவர்களினதும் கவனத்தை ஈர்த்து முன்மாதிரியாக திகழ்ந்திருந்தனர். கொவிட்-19 தொற்றுப் பரவல் காணப்படும் காலப்பகுதியில் 2022 விருதுகள் வழங்கலினூடாக இலங்கை பெண்களின் மீண்டெழுந்தன்மைக்கு கௌரவிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது" - என்றார்.

சிறந்த 50 நிபுணத்துவ மற்றும் தொழில்நிலை பெண்கள் விருதுகள் 2021இற்கு டயலொக் அனுசரணை வழங்கியிருந்ததுடன், தங்க அனுசரணையாளர்களாக Salota International மற்றும் சிங்கர் இணைந்திருந்தன. வெள்ளி அனுசரணையாளர்களாக லங்கா ஐஓசி, யுனிலீவர், விஷன் கெயார் மற்றும் எயிட்கன் ஸ்பென்ஸ் ஆகியன இணைந்திருந்தன. நிகழ்வின் அனுசரணையாளர்களாக மலிபன் மற்றும் சம்பத் வங்கி ஆகியனவும் இணைந்திருந்தன. நிகழ்வின் அன்பளிப்புப் பங்காளராக New Vivya கைகோர்த்திருந்தது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் சட்டப்பிரிவின் தலைமை அதிகாரியும், செயலாளர் மற்றும் கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியும், 2021ஆம் ஆண்டு விருதுகள் வழங்கலுக்கான நடுவர் குழுவின் தலைவருமான நதீஜா தம்பையா விருதுகளின் வெற்றியாளர்கள் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஆண்டு விருதுகளுக்காக விண்ணப்பித்திருந்த பெண்களின் தரம் உண்மையில் உயர்வானதாக அமைந்திருந்தது. இந்தப் பெண்களின் தொழில்நிலைகளில் அவர்கள் அடைந்திருந்த சாதனைகளை மாத்திரம் கவனம் செலுத்தாமல், தொழிற்துறையில் அவர்களின் தாக்கம் மற்றும் தமது நிறுவனங்களில் ஏனைய பெண்களுக்காக எவ்வாறான பங்களிப்புகளை வழங்கியிருந்தனர் என்பது பற்றியும் கவனம் செலுத்துமாறு தூண்டப்பட்டிருந்தோம்" - என்றார்.

இந்த ஆண்டின் நடுவர் குழுவின் தலைவராக நதீஜா தம்பையா இயங்கியதுடன், குழுவில் Hayleys Agriculture Holdings Ltd முகாமைத்துவப் பணிப்பாளர் ஜயந்தி தர்மசேன, Dreamron Group of Companies குழும முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கிஷு கோமஸ், Daily FT பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நிஸ்தார் கசிம், Clootrack இலங்கை/மாலைதீவுகள் மற்றும் பாகிஸ்தான் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஹாந்த அத்துகோரல, Dialog Axiata PLC இன் குழு பிரதம வாடிக்கையாளர் அதிகாரி சான்ட்ரா டி சொய்ஸா, தந்திரோபாய சந்தைப்படுத்தல் நிபுணர் சந்தியா சல்காடோ, KL.LK பிரதம நிறைவேற்று அதிகாரி சந்தோஷ் மேனன், இலங்கைக்கான இடைக்கால அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் அமன்டா ஜுவெல் மற்றும் IFC இன் Women in Work இல் நிகழ்ச்சி முகாமையாளர் சாரா ட்விக் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

| Sri Lanka | | | |
|---|---|---|---|
| Category | Name | Designation | Organization |
| மனித வளங்கள் (HR, HRD மற்றும் IR ஆகியவற்றைக் கொண்டது) | தினலி பீரிஸ் | குழும மனித வளங்கள் பணிப்பாளர் | MAS ஹோல்டிங்ஸ், MAS கெப்பிட்டல் பிரைவட் லிமிடெட் பணிப்பாளர் சபை அங்கத்தவர். |
| வங்கியியல் துறை (வங்கியியல் நிபுணர்கள்) | கேஷிலா ஜயவர்தன | தலைமை அதிகாரி | தேசிய சேமிப்பு வங்கி |
| நிதிச் சேவைகள் (நிதியியல் நிபுணர்கள், கணக்காய்வாளர்கள், காப்புறுதி சேவைகள், பங்குமுகவர்கள் மற்றும் லீசிங்) | தினலி கட்டிபெஆராச்சி | உப தலைவர் | எயிட்கன் ஸ்பென்ஸ் கோர்பரேட் ஃபினான்ஸ் பிரைவட் லிமிடெட் |
| சந்தைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல்கள் (விற்பனைகள், வர்த்தக நாமங்கள், நுகர்வோர் பராமரிப்பு, பொது உறவுகள்) | காவிந்திர ராஜபக்ச | VP/சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி | சொஃப்ட்லொஜிக் லைஃவ் இன்சூரன்ஸ் பிஎல்சி |
| சட்டம் | அம்பிகா சற்குணநாதன் | மனித உரிமைகள் சட்டத்தரணி மற்றும் சக ஊழியர் | திறந்த சங்க மையம் |
| அரச மற்றும் பொதுத் துறை | கிரேஸ் ஆசிர்வாதம் | பெல்ஜியம், லக்சம்பேர்க் தூதுவர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதுக்குழுவின் தலைமை அதிகாரி | வெளி விவகார அமைச்சு, இலங்கை |
| கூட்டாண்மை தொடர்பாடல் | மனிந்திரி பண்டாரநாயக்க | பிரதம வர்த்தக நாம சந்தைப்படுத்தல் அதிகாரி | ஜனசக்தி குழுமம் |
| டிஜிட்டல் ஊடகம் | தரிந்தி தலாஹிட்டி | பிரதி ஆசிரியர் | Pulse Derana |
| விநியோகத் தொடர் மற்றும் சரக்குக் கையாளல் | தெபோரா திசாநாயக்க | விற்பனைகள் பொது முகாமையாளர் | Expolanka ஃபிரைட் பிரைவட் லிமிடெட் |
| விருந்தோம்பல் துறை (சுற்றுலா, உணவு மற்றும் பானங்கள், பிரயாணம், போக்குவரத்து மற்றும் நிகழ்வுகள், களியாட்டம் மற்றும் கவர்ந்திழுக்கும் பகுதிகள்) | சந்திரா மதநாயக்க | முகாமைத்துவ பணிப்பாளர் | Fab ஃபுட்ஸ் பிரைவட் லிமிடெட் |
| கலை மற்றும் களிப்பூட்டல் தொழிற்துறை | அனோலி பெரேரா | கலைஞர் மற்றும் எழுத்தாளர் | |
| பாதுகாப்புப் படை மற்றும் சிவில் பாதுகாப்பு | எஸ்எஸ்பி ஆர் ஏ தர்ஷிகா குமாரி | பணிப்பாளர் – சிறுவர் மற்றும் பெண்கள் சித்திரவதை தடுப்பு பிரிவு | சிறுவர் மற்றும் பெண்கள் சித்திரவதை தடுப்பு பிரிவு |
| விளையாட்டு | தம்பு நெல்கா ஷிரோமலா | அண்மையில் இடம்பெற்ற டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையின் முதலாவது பெண் மத்தியஸ்தர் மற்றும் நடுவர் | |
| கல்வி (கல்வி நிலையங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்றன) | பேராசிரியர். மங்கலா குணதிலக | உடலியக்கவியல் பிரிவின் இணை பேராசிரியர்/பேராசிரியர், முகாமைத்துவ பணிப்பாளர் | கொழும்பு பல்கலைக்கழக, மருத்துவ பீடம், விலங்கு விஞ்ஞான ஆய்வுகூடங்களின் இலங்கையின் சம்மேளனம் |
| விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி | பேராசிரியர். ஹிரன்யா பீரிஸ் | University College London (UCL) இன் வான்பௌதிகவியல் பேராசிரியர், UCL Cosmoparticle முன்னெடுப்பின் பணிப்பாளர், மற்றும் Oskar Klein Centre இன் பணிப்பாளர் (http://www.okc.albanova.se/) for Cosmoparticle Physics in Stockholm. | |
| சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறை | வைத்தியர். பத்மா ஸ்ரீயானி குணரட்ன | தலைவர் | இலங்கை மருத்துவ சங்கம் |
| ஆண்டின் கூட்டாண்மை தலைமைத்துவம் | வித்யா சிவராஜா | முகாமைத்துவ பணிப்பாளர் | ஃபொன்டெரா ஸ்ரீ லங்கா அன்ட் இந்தியா |
| ஆண்டின் சிறந்த பெண் பணிப்பாளர் சபை அங்கத்தவர் | துஷாரா விஜேவர்தன | நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர் | கொமர்ஷல் பாங்க் ஒஃவ் சிலோன் பிஎல்சி |
| ஆண்டின் சிறந்த தொழில்நிலை முன்மாதிரியாளர் | திலங்கா அபேவர்தன | CMO Lead – தெற்காசிய புதிய சந்தைகள் | மைக்ரோசொஃப்ட் ஸ்ரீ லங்கா |
| ஆண்டின் சிறந்த வியாபார முன்மாதிரியாளர் | பசீலா நர்மரட்ன | உரிமையாளர் | CeeBees முன்பள்ளி மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையம் |
| மாற்றத்துக்கான ஆண் சம்பியன் | அஜய் அமலீன் | இணை ஸ்தாபகர் / நவிசாளர் | MAS ஹோல்டிங்ஸ் |
| ஆண்டின் சிறந்த சமூக மாற்றத்தை மேற்கொண்டவர் | தேவதர்மினி செல்விகா சஹாதேவன் | நிறைவேற்று பணிப்பாளர் | யுனைட்டட் வியுமனிட்டி |
| ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் நிபுணர் | வைத்தியர். மஹேஷி ராமசாமி | மருத்துவம் | பிரித்தானிய-இலங்கை வைத்திய அதிகார மற்றும் விரிவுரையாளர். இவர் தற்போது ஒக்ஸ்பேர்ட் கம்ப்பசி குமமக்கின் பிரதம அய்வாளர்களில் ஒருவராக பணியாற்றுகின்றார் |
| ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் | பேராசிரியர். நதீரா கருணாவீர | ஒட்டுண்ணியியல் சிரேஷ்ட பேராசிரியர் | கொழும்பு பல்கலைக்கழகம், மருத்துவ பீடம் |
| Trail Blazer | அருணி குணதிலக | தலைமை அதிகாரி | HNB வங்கி |
| ஆண்டின் சிறந்த கேம் சேஞ்ஜர் | ரந்துலா டி சில்வா | ஸ்தாபக பிரதம நிறைவேற்று அதிகாரி | GLX (Good Life X) |
| நடுவர்கள் விருது | கலாநிதி. வஜிரா சித்ரசேன | இலங்கையின் மூத்த பாரம்பரிய நாட்டிய கலைஞர் மற்றும் ஆசிரியர் | |
| அச்சு ஊடகம் | சாந்தனி கிரிந்தி | சிரேஷ்ட ஊடகவியலாளர் | விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் |
| இலத்திரனியல் ஊடகம் | சேத்தனா லியனகே | சட்டவ அரசியல் நிகழ்ச்சி தொகுப்பாளர் | சிரச – மஹாராஜா குழுமம் |
| தொழில்நிலை சாதனையாளர்கள் | ஷானி கல்யானிரட்ன கருணாரட்ன | லெபனானின் இலங்கை தூதரகம் - தூதுவர் | லெபனான் தூதரகம் |
| | தேவிகா வல்லேபொல | விற்பனை முகாமையாளர் – வணிக செயற்பாடுகள், இலங்கை | எமிரேட்ஸ் விமானசேவை |
| | தர்ஷிகா ஜயசேகர | செயற்திட்ட பணிப்பாளர் – களனி புதிய பால நிர்மாணத்தின் – செயற்திட்ட பணிப்பாளர் | |
| | கமையா மக்கான் மார்கார் | பிரதம சட்ட, ஒழுக்க மற்றும் அந்தரங்க அதிகாரி | அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லமிடெட் |
| உள்நாட்டு சர்வதேசம் (உள்நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டு வர்த்தகத்தை முன்னெடுப்பதில் சிறப்பாக செயலாற்றியவர்) | சுஹன்யா ரஃபல் | அருங்காட்சியக பணிப்பாளர் | M+, ஹொங் கொங் |
| பெண்களுக்கு வலுவூட்டும் வகையில் முன்னெடுக்கப்பட்ட நேர்த்தியான ஊடக பிரச்சாரத் திட்டம் | NDB/சிரச | " ஸ்ரீ லங்கா வனிதாபிமான" | |
| சிறந்த பெண்கள் வலுவூட்டல்களை மேற்கொள்ளும் அரச சார்பற்ற நிறுவனம் / சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் அல்லது சம்மேளனம் | SOS சிறுவர் கிராமங்கள் இலங்கை | | |
| சிறந்த நிறுவனசார் சுவாசார விருது (பாலின சமத்துவம், உள்ளடக்கமான மற்றும் நன்மதிப்புள்ள பணியிடம்) | AIA இன்ஷுரன்ஸ் லங்கா லிமிடெட் | | |
| பெண்கள் வலுவூட்டலில் நிறுவனமொன்றினால் முன்னெடுக்கப்பட்ட சிறந்த ESG செயற்திட்டம் | Hirdaramani அப்பரல் | WOW - The Wonders of Wellbeing நிகழ்ச்சி | |
| பண்புகள் மற்றும் திறன்களுடனான உத்வேகமான பெண் | அசந்தி குவன்மலி டி சில்வா | கவிதை, பாடல், குறுங்கதை, புதுக்கதை மற்றும் அறிவிப்புத் துறையில் சிறப்பாக செயலாற்றும் கலைஞர் என்பதுடன் கஷ்டப்பட்டு வாழ்க்கையில் முன்னேறிய நபராவார் | பார்வை குன்றியவர் |
| ஆண்டின் சிறந்த உத்வேகமான இளம் தொழில் முயற்சியாளர் | ஹர்ஷி மனமேந்திர | ஸ்தாபக பணிப்பாளர் | இஷாரா வென்ச்சர்ஸ் பிரைவட் லிமிடெட் |
| சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் (பாரிய) | ஷிஆ விக்ரமசிங்க | குழும முகாமைத்துவ பணிப்பாளர் | சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் |
| சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் (சிறிய) | கிர்த்திகா துஷ்யந்த | முகாமைத்துவ பணிப்பாளர் | டெக்னோ பிரைன் இன்டர்நஷனல் பிரைவட் லிமிடெட் |
| சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் (சிறிய) | அநிஷா தஹநாயக்க | ஸ்தாபக பணிப்பாளர் | டபிள் XL பிரைவட் லிமிடெட் |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | நயனதாரா விமலகுண கொடிதுவக்கு | உரிமையாளர் | தாரா வோட்டர்கேட் ஹோட்டல் |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | புலானி ரணசிங்க | ஸ்தாபகர்/பிரதம நிறைவேற்று அதிகாரி | ஹான்ஸ் லைப் பிரைவட் லிமிடெட் |
| ஆண்டின் சிறந்த சமூக தொழில்முயற்சியாளர் | குசினி லியனகே | முகாமைத்துவ பணிப்பாளினி | சுனிதியல்ஸ் |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | சாந்தினி அஹங்கம | ஸ்தாபகர்/பிரதம நிறைவேற்று அதிகாரி | கொகனட் மிரகிள் பிரைவட் லிமிடெட் |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | டி எம் பொடிமெனிகே | உரிமையாளர் | பாக்யா பான் புரொடக்ட்ஷன் – பொலன்னறுவை |
| வளர்ந்து வரும் பெண் தொழில் முயற்சியாளர் (5 விருதுகள்) வடக்கு, கிழக்கு, தெற்கு, மேல், மத்திய | ஜி சிவஜோதி | உரிமையாளர் | லக்ஷ்மி புரொடக்ட் - கல்முனை |
| மாலைதீவுகள் | | | |
| ஆண்டின் சிறந்த நிபுணத்துவ முன்மாதிரியானவர் | உசா ஆயிஷா சுஜுன் முஹம்மட் | உயர் நீதிமன்றம் | உச்ச நீதிமன்றம் |
| ஆண்டின் சிறந்த தொழில்நிலை சாதனையாளர் | அய்ஷத் ஜெனிபர் | ஐலன்ட் ஏவியேஷன் சேர்விசஸ் லிமிடெட் | பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் |
| நோக்கத்தைக் கொண்ட பெண் | வைத்தியர். பாத்திமா நஸ்லா ரஃபீக் | சுகாதார பாதுகாப்பு முகவரமைப்பு | மருத்துவ அதிகாரி (தலைமை அதிகாரி, தொற்று நோய் கட்டுப்பாட்டு பிரிவு |
| ஆண்டின் சிறந்த உத்வேகமான பெண் | மைமூனா அபூபகுரு | சுகாதார பாதுகாப்பு முகவரமைப்பு | பணிப்பாளர் நாயகம் |
| காலநிலை செயற்பாடு விருது | அயிஷத் ஹுதா அஹமட் | சுயாதீன சூழல் ஆலோசகர் | |
| ஆண்டின் சிறந்த தொழில் முயற்சியாளர் | அபிதா இஸ்மைல் அலி | ஆடை வடிவமைப்பாளர் | |

## சிறந்த 50 தொழில்நிலை மற்றும் நிபுணத்துவ பெண்கள் விருதுகள் 2021 வெற்றியாளர்கள்





### WIM இனைப் பற்றி

பெண்களின் வெற்றிக்காக அர்ப்பணிக்கப்பட்ட Women in Management (WIM) இலங்கையின் பெண் தொழில் வல்லுனர்களையும் தொழில் முனைவோரையும் ஒரு தனித்துவமான இணையத்தளத்தின் மூலம் ஒன்றிணைத்து, அவர்களின் திறமைகளை உலகளாவிய வெற்றிக்கு கொண்டுசெல்கிறது. மேலதிக தகவல்களை பின்வரும் லிங்க்களில் பார்வையிடவும்:

www.womeninmanagementawards.org/
www.womeninmanagement.org/
www.facebook.com/SLWIM/
www.twitter.com/WomeninManageme
www.linkedin.com/in/women-in-management-sri-lanka

### IFC இனைப் பற்றி

உலக வங்கியின் சகோதர அமைப்பும் உலக வங்கிக் குழுவின் உறுப்பினருமான IFC வளர்ந்துவரும் சந்தைகளில் தனியார்துறையில் கவனம் செலுத்திய மிகப்பெரிய உலகளாவிய வளர்ச்சி நிறுவனமாகும். உலகெங்கிலும் 100இற்கும் மேற்பட்ட நாடுகளில் நாங்கள் பணியாற்றுகிறோம், எங்கள் மூலதனம், நிபுணத்துவம் மற்றும் செல்வாக்கினைப் பயன்படுத்தி சந்தைகள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்க மிகவும் தேவைப்படும். 2021ஆம் நிதியாண்டில் வளரும் நாடுகளுக்கு 31.5 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான நீண்டகால நிதியுதவியினை நாங்கள் வழங்கினோம், தீவிர வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் பகிர்வு செழிப்பினை அதிகரிப்பதற்கும், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட நாடுகளின் பொருளாதார சுபீட்சத்திற்கும் தனியார்துறையின் சக்தியை மேம்படுத்துகிறோம். மேலும் தகவல்களுக்கு, www.ifc.org. ஐப் பார்வையிடவும்.








# குடியரசு தின சிறப்பிதழுக்கு உயர்ஸ்தானிகரின் செய்தி

இந்தியாவின் 73 ஆவது குடியரசு தினத்தில், நட்பான இலங்கை மக்களுக்கும், இந்த அழகிய நாட்டில் வசித்துவருகின்ற சகல இந்தியர்களுக்கும் எனது நல் வாழ்த்துகளை பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன். 72 வருடங்களுக்கு முன்னர் இதேபோன்ற ஒரு நாளில் உலகின் மிகப்பெரிய எழுதப்பட்ட அரசியலமைப்பு இளமையான சுதந்திர இந்தியாவில் அமுலாக்கப்பட்டது.

கடல் மார்க்கமாக இந்தியாவின் மிகவும் நெருங்கிய அயல் நாடாகவும் நட்பு நாடாகவும் இலங்கை உள்ள நிலையில் இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையிலும் இலங்கை மையப்பகுதியில் உள்ளது. கலாசாரம், ஆன்மீகம், மொழி, வர்த்தகம் மற்றும் ஏனைய பலவிடயங்கள் உட்பட ஆழ வேரூன்றிக்காணப்படும் பொதுவான விடயங்களை இருநாட்டு மக்களும் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரான காலம் முதலே பகிர்ந்து கொள்கின்றனர்.

நமது சமகால மற்றும் பரந்தளவிலான இருதரப்பு ஈடுபாட்டிற்கு ஓர் உறுதியான அடித்தளத்தை இவ்வாறான தனித்துவமிக்க உறவுகள் வழங்குகின்றன. பொதுவான முன்னேற்றம், செழுமை மற்றும் சமாதானம் ஆகியவற்றை நோக்கிய என்றென்றும் வலுவான நட்புறவுக்கான அர்ப்பணிப்பினைக் கொண்டிருக்கும் இரு நாடுகளினதும் தலைவர்களது வழிகாட்டல்களுக்கமைவாக "மித்ரத்வ மகா" எனப்படும் நட்புறவுப்பாதையில் இலங்கையும் இந்தியாவும் துரிதமான முன்னேற்றத்தைக் காண்கின்றன.

இந்த பொதுவான நோக்கானது, இலங்கையில் இந்தியாவின் மிகப்பரந்தளவிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களை முன்னெடுத்துச்செல்ல வழிவகுக்கின்றது. இவ்வாறான தொடர்ச்சியான அமுலாக்கம் காரணமாக 2021 ஒக்டோபரில் இந்திய வெளியுறவுச் செயலாளர் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது கல்வி மற்றும் வீடமைப்பு துறைகள் போன்ற பரந்தளவிலான துறைகளில் நான்கு பாரிய திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்துவைத்தமையையிட்டு நான் மகிழ்வடைகின்றேன். சில நாட்களுக்கு முன்னதாக இந்தியாவை பூர்வீகமாக கொண்ட தமிழ் மக்களுடன் தைப்பொங்கல் தினத்தை கொண்டாடி மத்திய மாகாணத்தில் இந்திய உதவியில் நிர்மாணிக்கப்பட்ட 1000 வீடுகள் எம்மால் கையளிக்கப்பட்டன.

இந்திய இலங்கை உறவுகளில் அபிவிருத்தி உதவி ஒரு முக்கிய தூணாக இருக்கும் நிலையில் கூட கொவிட் 19 காரணமாக ஏற்பட்டுள்ள சவால்களை கூட்டாக எதிர்கொள்வதற்கு இரு தரப்புப் பரிமாற்றங்களும் நிறுவகப் பொறிமுறைகளும் மிகவும் அவசியமானவை. கொவிட் 19 நெருக்கடி நிலையில் முற்கூட்டியே தடுப்பூசிகளை வழங்கியமை மற்றும் ஒட்சிசன் விநியோகம் முதல் கடல் அனர்த்தங்களின்போது முதலில் பதிலளித்து செயற்படுவதுவரை இலங்கையின் மிகவும் நம்பகமான நட்புறவாக இந்தியா நீடிக்கிறது.

நிதி அமைச்சர் மேன்மைதங்கிய பசில் ராஜபக்ஷ அவர்கள் அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தை அடுத்து இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட பொருளாதார மற்றும் அந்நிய செலாவணி ஆதரவானது இலங்கையுடன் இணைந்திருக்கும் எமது உறுதிப்பாட்டை சுட்டிக்காட்டுகிறது. அத்துடன் இலங்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான மேலும் பல உதவித்திட்டங்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேநேரம் இந்தியாஇலங்கை இடையிலான வலுவான வர்த்தக முதலீட்டு தொடர்புகள் மற்றும் இருநாட்டு மக்களிடையிலுமான உறவுகளை உயர் ஸ்தானிகராலயம் ஊக்குவிக்கின்றது. புனித சின்னங்கள் மற்றும் மகா சங்கத்தினரின் சங்கைக்குரிய உறுப்பினர்கள் சகிதம் கௌரவ அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்கள் உட்பட முக்கிய தலைவர்களுடன் இலங்கையிலிருந்து குஷிநகருக்கான சர்வதேச விமான சேவையின் அங்குரார்ப்பண விமான சேவை மேற்கொள்ளப்பட்டமை போன்ற முன்னெடுப்புக்கள் மற்றும் இலங்கையில் இந்தியாவின் பாரியளவான முதலீட்டுத்திட்டங்கள் தொடர்வதை காண்பதில் நாம் மகிழ்வடைகின்றோம்.

அதேபோன்று முன்னொருபோது மில்லாதவாறு பெருமளவான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் இலங்கைஇந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட நிகழ்வில் பங்கேற்றமை பெரும்பாக்கியமும் கௌரவமுமாகும். இந்த வரவேற்கத்தக்க முன்னேற்றம் இரண்டு ஜனநாயக நாடுகளுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான நட்பின் பிணைப்பை மேலும் வலுப்படுத்தும்.


கௌரவ கோபால் பாக்லே
இந்திய உயர்ஸ்தானிகர்

இந்தியா தனது சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டை கொண்டாடும் வேளையில் இலங்கையும் அதே மைல்கல்லை அடையவுள்ளது. பன்முக மற்றும் பல்வகைத்தன்மை கொண்ட நமது இரு ஜனநாயக நாடுகளின் பயணங்களை எதிர்வரும் மாதங்களில் ஒன்றிணைந்து உரிய முறையில் கொண்டாட இரு அரசாங்கங்களும் திட்டமிட்டுள்ளன. இத்தகைய முயற்சிகள் இரு நாட்டு மக்களிடையே நிலைபேறான நட்புறவை வலுப்படுத்துவதோடு, அவர்களின் ஒத்துழைப்பை முன்னேற்றப்பாதையில் துரித கதியில் முன்னெடுத்துச் செல்லும்.

இவ்வாறான உள்ளுணர்வுடன், கிட்டத்தட்ட இன்னும் ஒரு வார காலத்தில் கொண்டாடப்படவுள்ள இலங்கையின் சுதந்திர தின நல் வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நமஸ்கார், ஆயுபோவன்,**
**வணக்கம்!**









Azadi Ka Amrit Mahotsav

# 73rd REPUBLIC DAY of INDIA

JANUARY 26, 2022





## பொருளாதார மற்றும் வணிக ரீதியான தொடர்புகளில் விசாலமான பங்குடைமை வர்த்தகம்

★ இலங்கையின் 2வது பெரிய வர்த்தக பங்குதாரர் மற்றும் 3வது பெரிய ஏற்றுமதி பிராந்தியம் .

★ தொற்றுநோயால் பாதிக்கப்பட்டபோதும் 2020 இல் இருதரப்பு வர்த்தகம் 3.6 பில்லியன்அமெரிக்க டொலர்கள் .

★ 2000ல் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் [ FTA] கையெழுத்திட்டதில் இருந்து வர்த்தகத்தில் பன்மடங்கு அதிகரிப்பு.

• இந்தியாவுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 60%க்கும் அதிகமானவை FTA மூலம் பயனடைந்துள்ளன.

★ இலங்கைக்கான இந்தியாவின் ஏற்றுமதியில் 5% FTA விதிகளைப் பயன்படுத்தியுள்ளன.

### முதலீடுகள்

★ இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் மிகப்பெரிய மூலங்களில் இந்தியாவும் ஒன்றாகும்.

★ இலங்கையில் பல முன்னணி இந்திய நிறுவனங்களின் இருப்பு.

★ கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடு [ FDI] 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்களென மதிப்பிடப்பட்டுள்ளது.

★ FDI விரைவில் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயரும்.

## சமீப காலத்தின் முக்கிய செய்தி

### மேற்கு கொள்கலன் முனையம் (WCT)

★ கொழும்பு துறைமுகத்தில் WCT 1ற்காக 650 மில்லியன் அமெரிக்க டொலர்கள் .

★ இது ஒரு இந்தியஇலங்கை கூட்டு வர்த்தகம் கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (பிரைவேட்) லிமிடெட்.

★ BOT ஒப்பந்தம் செப்டம்பர் 2021 இல் கையெழுத்திடப்பட்டது .

### திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதி

★ சக்தி கூட்டுறவில் ஒரு மைல்கல்.

★ எண்ணெய் தாங்கி தொகுதியினை மேலும் மேம்படுத்துவதற்காக இலங்கை அரசுடனும் இலங்க்கை பெற்றோலிய கூட்டுஸ்தாபனம் மற்றும் லங்கா IOC ஆல் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்களின் பூர்த்தி.

## இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்குவிப்பு: இந்திய நிறுவனங்கள்

### புதிய சூழலுக்கமைவான இசைவாக்கம்

★ தொடர்ச்சியான தழுவல்.

★ ஒரு சமீபத்திய உதாரணமாக நாட்டில் இந்திய வாகன உற்பத்தியாளர்களால் வாகன உருவாக்க கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியமை.

### தொழில் உருவாக்கம்

★தொடர்ந்து தொழில்களை உருவாக்குதல்.

• பிரபல இந்திய தொழில்நுட்ப நிறுவனமான HCL மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்கள் உருவாக்கம்.

•இதில் 60% க்கும் அதிகமானோர் புதிய பட்டதாரிகள்.

## பல்பரிமாணங்கள்

### காற்று குமிழி

★ ஏப்ரல் 2021 இல் நிறுவப்பட்டது

★ இருபுறமும் பயணத்தை எளிதாக்குதல்

சக்தி தொடர்பான கூட்டுப் பணிக் குழு

★ அக்டோபர் 2021 இல் எரிசக்தி கூட்டாண்மைக்கான இருதரப்பு கூட்டு பணிக்குழுவை நிறுவ முடிவு செய்யப்பட்டது

### நனோ நைட்ரஜன்

★ இயற்கைமுறை விவசாயம் தொடர்பான முன்னுரிமைகளில் இலங்கைக்கு ஆதரவு

★ இந்திய விமானப்படை (IAF) பாரந்தூக்கும் விமானங்கள் இரண்டு நவம்பர் 2021 இல் திரவ நனோ நைட்ரஜன் உரங்களை விநியோகித்தன.

### ஆழமான வணிக தொடர்புகளுக்கான தளங்கள்

★ கௌரவ அமைச்சர் பந்துல குணவர்தன, 2021 டிசம்பர் CII கூட்டாண்மை உச்சிமாநாட்டின் போது சிறப்பு அமைச்சர்கள் குழு கூட்டத்தில் இந்திய அமைச்சர் பியூஷ் கோயலுடன் பங்கேற்பு.

CII கூட்டாண்மை உச்சிமாநாட்டில் வணிக உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற பிராந்தியத்தின் வர்த்தக அமைச்சர்களுடனான சிறப்புக் கூட்டத்தின் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.

★ ஜூன் 2021 இல் இலங்கை முதலீட்டு மன்றத்தில் இந்தியாவுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அமர்வு




இலங்கை தொடர்பான அமர்வானது இரு நாடுகளிலுமிருந்து வணிகம் மற்றும் தொழில்துறையின் முக்கியப் பிரதிநிதிகளின் பங்கேற்பைக்கொண்டிருந்தது.

★ வர்த்தக அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.எம்.பி. ஜயவர்தன நவம்பர் 2021 இல் நடந்த 18வது உலகளாவிய MSME உச்சிமாநாட்டில், மீள்திறன்மிக்க உலகளாவிய பெறுமதி வலையமைப்பை உருவாக்குவதில் பெண் தொழில்முயற்சியாளர்களின் பங்கு குறித்த இணையத்தள அமர்வில் பங்கேற்றார்.

★ கௌரவ பந்துலகுணவர்தன அவர்கள் ஜூலை 2021 இல் இந்தோபசிபிக் நடைபெற்றது. உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரகபாலசூரிய உட்பட பல முக்கியஸ்தர்கள் மற்றும் இலங்கையில் உள்ள முன்னணி இந்திய முதலீட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

★இந்தியாஇலங்கை பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்த டிஜிட்டல் மாநாடு 12 மார்ச் 2021 அன்று நடைபெற்றது, இதில் இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் அப்போதைய வெளியுறவு அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்தன மற்றும் உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலங்கையின்அபிவிருத்தியில் உள்கட்டமைப்பு, வாழ்வாதாரம் மற்றும் அதற்கும் அப்பால் நம்பகமான பங்காளியாகத் திகழும் இந்தியா



இலங்கையுடனான இந்தியாவின் அபிவிருத்தி பங்குடமையானது இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமைகள் மற்றும் அதன் மக்களின் அபிலாஷைகளால் செயற்படுத்தப்படுகிறது . மொத்தம் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட தொகையில் , இந்தியா பாரிய அளவிலான உள்கட்டமைப்பு மற்றும் இணைப்புத் திட்டங்கள் மற்றும் சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி, தொழில்துறை மேம்பாடு போன்றவற்றில் மக்களை மையமாகக் கொண்ட திட்டங்களை உள்ளடக்கிய அபிவிருத்திதிட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதானது உள்நாட்டு பொருளாதாரத்திற்கு பெருமளவுபங்களிப்பினை வழங்குகிறது .

சலுகைக்கடன் வசதிகளின் கீழ் பாதுகாப்பு, புகையிரதத்துறை , போக்குவரத்து, உள்கட்டமைப்பு மேம்பாடு, இணைப்பு, சோலார் போன்ற துறைகளில் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன . கோவிட் 19 தொற்றுநோயால்ஏற்பட்ட சவால்களை சமாளித்து, இந்தத் திட்டங்கள் சமீப காலங்களில் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

கல்கிசைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான புகையிரத சேவை இந்த மாத தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2021 இல் RITES இந்தியா லிமிடெட் மூலம் 120 பயணிகள் பெட்டிகள் மற்றும் 2 முழு ஏசி டீசல் பன்முக அலகுகள் (DMUs) வழங்கப்பட்டுள்ளன. இலங்கை பொலிஸாருக்கு 750 ஜீப்புகளும் (காவல்துறை விசேட அதிரடிப்படைக்கான 150 ஜீப்புகள் உட்பட) மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்கு இந்தியாவிலிருந்து 500 பஸ்களையும் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொல்கஹவெல மற்றும் அளுத்கமவில் இரண்டு ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டங்கள் முறையே 91.80 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 164.90 மில்லியன்அமெரிக்க டொலர்கள் நிதியுதவியுடன் கிட்டத்தட்ட 90% நிறைவடைந்துள்ளன. விரைவில் அவை பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டங்கள் 7,50,000 க்கும் மேற்பட்ட மக்களின் சுத்தமான குழாய் நீரைப் பெறுவதற்கான அவர்களின் கனவைநனவாக்கும்.

2021 ஜூனில் சூரிய சக்தி திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய EXIM வங்கிக்கும் இடையில் 100 மில்லியன் அமெரிக்க டொலர் ஒப்பந்தமானது , தூய்மையான மற்றும் பசுமையான சக்திக்கானஇரு அரசாங்கங்களின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன், இலங்கை ஜனாதிபதியின்இலக்குக்கு அமைய 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் 70% எரிசக்தி தேவைகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறது. வீடுகள் மற்றும் அரசாங்க கட்டிடங்களின் கூரைகளில் அமைக்கப்படும்சூரிய சக்தி மின்கல அமைப்புகள் மற்றும் இலங்கையின் பாராளுமன்ற கட்டிடத்திற்கான மிதக்கும் சூரிய மின்சக்தி ஆலை உட்பட பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதற்கு இந்த ஒப்பந்தம் வழி வகுக்கும்.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பல்வேறு பிராந்தியங்களை உள்ளடக்கிய மக்களால் இயக்கப்படும் 80க்கும் மேற்பட்ட மானியத் திட்டங்களுடன் இந்தியா ஈடுபாட்டினைக்கொண்டுள்ளது.

இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூன்றாம் கட்டம் நிறைவடையும் தறுவாயில் உள்ளது. 2021 அக்டோபரில் வெளியுறவுச் செயலர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவின் வருகையின் போது 1235 வீடுகள் கையளிக்கப்பட்ட நிலையில், 2022 ஜனவரியில் பொங்கல் திருநாளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் கையளிக்கப்பட்டன. இந்த முதன்மைத் திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் சுமார் 50,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக பெருந்தோட்டப் பகுதிகளில் மேலும் 10000 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

இலங்கையுடனான இந்தியாவின் அபிவிருத்திபங்குடைமையின் பரந்த தன்மையை வெளிப்படுத்தும் வகையில், இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வவுனியாவில் மாதிரி வீடமைப்பு கிராமம், வடமராட்சியில் புனரமைக்கப்பட்ட வட மகளிர் மத்திய கல்லூரி மற்றும் புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரியில் பல்நோக்கு மண்டபம் ஆகியவற்றையும் வெளிவிவகார செயலாளர் திறந்து வைத்தார்.

1990 சுவசெரிய அவசர ஆம்புலன்ஸ் தொற்றுநோய் காலங்களில் மிகவும் மதிப்பு வாய்ந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ருஹுணு பல்கலைக்கழகத்தில் உள்ள ரவீந்திரநாத் தாகூர் கேட்போர் கூடம் ஒரு அதிநவீன கட்டமைப்பு மற்றும் தென் மாகாணத்தில் உள்ள மிகப்பெரிய வசதிகளில் ஒன்றாகும்.

நாட்டிலேயே முதன்முறையாக தம்புள்ளையில் அமைக்கப்பட்டு வரும் 5000 MT வெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகசாலை நிர்மாணப்பணிகள் விரைவில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தம்புள்ளை பகுதி மற்றும் அண்டை மாவட்டங்களில் உள்ள விவசாய சமூகத்திற்கு அவர்களின் உற்பத்திகளின் ஆயுளை நீடிப்பதன் மூலம் பெரிதும் உதவ முடியும். ஒரு தனித்துவமான ஏற்பாட்டில், இந்திய மற்றும் இலங்கை நிறுவனம் கைகோர்த்து, கூட்டு முயற்சியாக இத்திட்டம் உருவாக்கப்பட்டது.




குடியரசு தின வாழ்த்துக்கள்

இந்திய நண்பர்கள் அனைவருக்கும் இனிய 73வது குடியரசு தின வாழ்த்துக்கள்

CEAT

CEAT Kelani Holdings (PVT) Ltd.

# ஓய்வூதியம் பெறுவோர் அரசினால் அறிவிக்கப்பட்ட ரூ. 5000 கொடுப்பனவைப் பெறுவதில் நிபந்தனைகள்

(காரைதீவு செய்தியாளர்)

ஓய்வூதியம் பெறுவோருக்கு அரசினால் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங்குவதற்கு அறிவிக்கப்பட்ட ஐயாயிரம் ரூபா கொடுப்பனவை ஜனவரி மாதக் கொடுப்பனவையும் சேர்த்து பெப்ரவரி மாதத்திலிருந்து வழங்க ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்படி ஓய்வூதியத்துடன் விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு ஒன்று மட்டுமே வழங்கப்படும். அரச உத்தியோகத்தர் ஒருவர் விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியம் பெறுவாராயின் ஒரு கொடுப்பனவு மட்டுமே வழங்கப்படும்.

பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக உயிரிழந்தவரில் தங்கிவாழ்வோர் 55 வயது வரை சம்பளம் பெறுபவராயின் அவர்கள் பெறும் ஓய்வூதியத்துடன் இக்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியம் பெற்றுவந்து மறுமணம் செய்தோருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவு மட்டுமே வழங்கப்படும். இவர்களுக்கு சம வீதத்தில் கொடுப்பனவு பெறுவோருக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவும் விகித சமமாகப் பிரிக்கப்பட்டே வழங்கப்படும்.

இதேவேளை, ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு உயிர்வாழ் சான்றிதழ் மற்றும் ஒருவர் பெறும் சம்பளம் மற்றும் பெறும் ஓய்வூதியம் போன்ற விவரங்கள் உரிய பிரதேச செயலகங்களினால் உறுதிப்படுத்தி ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னரே வழங்கப்படுமென ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சிவனொளிபாதமலைக்கு போதைப்பொருளுடன் யாத்திரை! தீவிர சோதனைகள் முன்னெடுப்பு

சிவனொளிபாதமலை பருவ காலத்தில் போதைப்பொருளுடன் வருகைதந்த 58 பேர் வரையில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வழிபாட்டுக்காக வருகைதரும் இளைஞர்கள் பலர் சூட்சுமமான முறையில் போதைப்பொருளை மறைத்துவைத்துக்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். மோப்பநாயின் உதவியுடனேயே பெரும்பாலானவர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிவனொளிபாதமலைக்குச் செல்லும் வழிகளில் தீவிர சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



# ஒரே இரவில் நான்கு கடைகளில் கொள்ளை; வசமாக சிக்கிய திருடன்

(எச். விஜேரத்ன)

பூஜாபிட்டியவில் ஒரே இரவில் நான்கு கடைகளில் கொள்ளையடித்த நபர் ஒருவரை பொதுமக்கள் மரத்தில் கட்டிவைத்திருந்தபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மத்துரட்டவைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பூஜாபிட்டிய, மாரதுகொட, மெதவெல ஆகிய பகுதிகளில் இவர் நான்கு கடைகளை உடைத்து பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை திருடியுள்ளார். பூஜாபிட்டிய பகுதிக்கு நள்ளிரவில் வந்த அந்த நபர் முச்சக்கரவண்டி சாரதியொருவரிடம் கண்டிக்கு செல்லவேண்டுமெனக் கூறியுள்ளார். அதற்கென ஆயிரத்து 500 ரூபா தருவதாகவும் கூறியுள்ளார்.

இதனால் சந்தேகம்கொண்ட முச்சக்கரவண்டியின் சாரதி, பொதுமக்களை உதவிக்கு அழைத்துள்ளார். அதன் பின்னர் பொதுமக்கள் இணைந்து அந்த நபரை மரத்தில் கட்டிவைத்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டபோது, சந்தேகநபர் பல பிரதேசங்களில் கொள்ளைகளில் ஈடுபட்டுவந்தவர் என்பது தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பில் பூஜாபிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக தனி பொலிஸ் அமைத்த ஆசாமி

உயரதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து காரியத்தை முடிப்பாராம்!

(எப். அஸ்லம்)


அநுராதபுரம், பரசன்கஸ்வெவ பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக தனியொரு பொலிஸ் நிலையத்தை நடத்திச்சென்ற நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் உயரதிகாரிகள் தனக்கு நெருங்கிய நண்பர்கள் என்றும் அவர்களிடம் கூறி முறைப்பாடுகளை தீர்ப்பதாகவும் குறிப்பிட்டு பணம் பெற்றுவந்துள்ளார்.

இந்த நபர் ஓய்வுபெற்ற பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் என்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பரசன்கஸ்வெவ பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வீடமைப்புத் திட்டத்தில் இந்த நபர் தங்கியிருந்துள்ளார். பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடுகளை பதிவுசெய்ய வரும் நபர்களிடம் இரண்டாயிரம் ரூபாமுதல் ஐயாயிரம் ரூபாவரை பெற்றுக்கொண்டுள்ளார்.

உயரதிகாரிகள் தனக்கு நெருக்கம் என்பதால் அவர்களிடம் கூறி முறைப்பாடுகளை தீர்த்துக் கொள்ளலாம் என அந்த நபர்களுக்கு அவர் குறிப்பிட்டுள்ளார். ஒருசில சந்தர்ப்பங்களில் பொருட்களையும் இலஞ்சமாக அவர் வாங்கியுள்ளார்.

இந்த நபர் பொலிஸில் பணியாற்றிய காலப்பகுதியில் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் பல தடவைகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.



# வட்டிக்கு பணம் தருவதாக ஏமாற்றிய தம்பதியினர் மாயம்

பெருந்தொகைப் பணத்தை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்டு வட்டியுடன் திரும்பத் தருவதாக உறுதியளித்த தம்பதியினர் மாயமாகியுள்ளதாக பயாகல பொலிஸார் தெரிவித்தனர். களுத்துறையைச் சேர்ந்த பெண்ணொருவர் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், தம்பதியினர் மாயமாகியுள்ளமையை அறிந்துகொண்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வாதுவ, மொரந்தொட்டுவ வீதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த தம்பதியினர் பெருந்தொகைப் பணத்தை பல்வேறு நபர்களிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. எனினும், குறித்த பணத்தொகையை உரியவர்களுக்கு மீள கையளிப்பதாக தம்பதியினர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பணத்தை மீள கையளிக்காமல் அவர்கள் மாயமாகியுள்ளனர். அவர்கள் தங்கியிருந்த வீடு பூட்டப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# பலாங்கொடையில் கார் விபத்து; காயமடைந்த சாரதி உயிரிழப்பு

கொழும்பு - பதுளை பிரதான வீதியின் பலங்கொடை மாதொல பிரதேசத்தில் காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று (25) இடம்பெற்ற குறித்த விபத்தில் காரில் பயணித்த நபர் பலத்த காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பதுளை - பஹல ரஜ வீதியில் வசித்து வந்த ஹேமச்சந்ர விக்ரமரத்ன என்ற 75 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான காரை இவரே செலுத்தியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தலைமன்னாரில் ஐந்து பிரதான இடங்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகத் திட்டம்











(இக்பால் அலி)

தலைமன்னார் பொலிஸ் நிலையம், பௌத்த விகாரை, கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் தமிழ் பாடசாலை ஆகிய 5 பிரதான இடங்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை மற்றும் கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையம் இணைந்து தலைமன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பொலிஸ் நிலையம் பௌத்த விகாரை, கிறிஸ்தவ தேவாலயங்கள், தமிழ் பாடசாலை ஆகிய 5 பிரதான இடங்களில் சுத்தமான குடிநீர் விநியோகம் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக திறந்து கையளிக்கப்பட்டது.

தலைமன்னார் பிரதேசத்திலுள்ள தலைமன்னார் பொலிஸ் நிலையம் , வாலுகாராமய பௌத்த விகாரை, பிலதெல்பியா பப்டிஸ்ட் கிறிஸ்தவ தேவாலயம், தலைமன்னார் ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள அகபே கிறிஸ்தவ தேவாலயம், தலைமன்னார்துறை அ. த. க. பாடசாலை ஆகிய ஐந்து பிரதான இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட நீர்விநியோகத் திட்டம் நேற்று திறந்து பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் மற்றும் மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தின் பணிப்பாளர் எம்.பி.எம்.சரூக் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டு இந்த ஐந்து நீர் விநியோகத் திட்டத்தை திறந்துவைத்தனர்.

வாலுகாராமய பௌத்த விகாரையின் விகாராதிபதி, தலைமன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர். டி சிறில், அகபே கிறிஸ்தவ தேவாலயத்தின் பங்குத்தந்தை வி.சந்திரன், தலைமன்னார்துறை அ. த. க. பாடசாலை அதிபர், மல்டிலெக் பெயின் நிறுவனத்தின் கிழக்கு பிராந்திய விநியோக முகாமையாளர் ஏ. அப்துல் பத்தாஹ் மற்றும் அக்பர் உள்ளிட்ட பல பிரமுகர்கள் இந்த நீர் விநியோகத் திட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## குற்றம் தவிர்

### போதைப்பொருட்களுடன் சந்தேக நபர்கள் கைது

**கடவத்தை**

கடவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்கட வீதியில் 13 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் (24) கைதுசெய்துள்ளனர். பியன்வில பகுதியைச் சேர்ந்த 24 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**வத்தளை**

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரீத்திபுர ஜனபதய பகுதியில் 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபரொருவர் நேற்றுமுன்தினம் (24) கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் ஹெந்தளையைச் சேர்ந்த 26 வயதுடையவரென பொலிஸார் தெரிவித்தனர்.

### அடையாளம் காணப்படாத சடலம்

**ஹபரணை**

ஹபரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 126ஆவது மைல்கல், சிங்ஹகம காட்டுப் பகுதியில் ஆணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்றுமுன்தினம் (24) மீட்டுள்ளனர். பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், அடையாளம் காணப்படவில்லையென தெரிவிக்கப் பட்டுள்ளது.

செருப்பு ஜோடிகள், தண்ணீர்ப் போத்தல், சிறிய மதுபானப் போத்தல், ஐயாயிரத்து 20 ரூபா பணம், ஆடைகள் இரண்டு ஆகியவை அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் ஹபரணை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### கஞ்சா பயிர்ச்செய்கை முற்றுகை

**தனமல்வில**

தனமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கொட்டுகந்த காட்டுப்பகுதியில் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்ட கஞ்சா பயிர்ச்செய்கை விசேட அதிரடிப் படையினரால் நேற்றுமுன்தினம் (24) முற்றுகையிடப்பட்டுள்ளது. ஹப்புத்தளை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, ஹப்புத்தளை, நுவரெலியா, மஸ்கெலியா, தலவாக்கலை ஆகிய முகாம்களில் ட்ரோன் கெமராக்களின் உதவியுடன் குறித்த இடம் கண்டறியப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் கஞ்சா செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். அங்கிருந்த 11 ஆயிரத்து 770 கஞ்சா செடிகள் தீயிட்டு அழிக்கப்பட்டன.

### உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் சந்தேக நபர் கைது

**ஹொரவப்பொத்தானை**

உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட இரண்டு துப்பாக்கிகளுடன் ஹொரவப்பொத்தானையில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் (24) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் ஹொரவப்பொத்தானையைச் சேர்ந்த 45 வயதுடைய நபரென பொலிஸார் தெரிவித்தனர்.

### சட்டவிரோத மணல் விநியோகம்

**கொத்மலை**

கொத்மலையில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற லொறியொன்றை பொலிஸார் நேற்றுமுன்தினம் (24) முற்றுகையிட்டுள்ளனர். கொத்மலையில் பொலிஸ் சோதனைச்சாவடியில் வைத்து லொறி சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது அனுமதிப்பத்திரம் இல்லாமை தெரியவந்துள்ளது.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த 63 வயதான நபர் ஒருவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## திருமலையில் 40 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் கையளிப்பு



(மூதூர் நிருபர்)

திருகோணமலை - ஈச்சிலம்பற்று கல்வி கோட்டத்திற்குட்பட்ட இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் வறுமையான 40 மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வு நேற்று (25) இடம்பெற்றது.

இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக் கல்லூரியில் சுமார் 25 கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இவர்களில் அதிகமான மாணவர்கள் தூரப் பகுதிகளிலிருந்து கால்நடையாக தினந்தோறும் பாடசாலைக்கு வருகை தருகின்றனர். இந்நிலையில், இம்மாணவர்களின் போக்குவரத்து நலனில் அக்கறைகொண்டு திருகோணமலை ரோட்டரிக் கழகம் இவற்றை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் பற்றாக்குறையால் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயம் மூடப்படும் அபாயம்

### நியமனம் வழங்கப்படாவிடில் போராட்டம் முன்னெடுப்போமென பொதுநல அமைப்புகள் எச்சரிக்கை



கல்முனை வலயத்துக்குட்பட்ட, நிந்தவூர் கோட்டத்தின் கீழுள்ள அட்டப்பளத்திலுள்ள ஒரேயொரு தமிழ்ப் பாடசாலையான அட்டப்பளம் விநாயகர் வித்தியாலயம் மூடப்படும் அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதியளவு ஆசிரியர்கள் இன்மையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.136 மாணவர்கள் மற்றும் 14 ஆசிரியர்கள் காணப்படும் இப்பாடசாலையில் முக்கிய பாடங்களாகக் கருதப்படும் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களையும் கற்பிக்கும் ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால், மாணவர்கள் குறித்த பாடங்களைக் கற்க முடியாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பின்தங்கிய பிரதேசத்திலுள்ள ஒரேயொரு பாடசாலையையும் இழுத்து மூடுவதற்கு இவ்விடமாற்றங்கள் செய்யப்படுகின்றனவா என அப்பகுதி மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அத்துடன், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் ஆலயங்கள் உள்ளிட்ட பொதுநல அமைப்புகள் இது விடயத்தில் போர்க்கொடி தூக்கியுள்ளன.

போதுமானளவு ஆசிரியர்கள் நியமிக்கப்படாவிடின் தீவிர போராட்டமொன்றை முன்னெடுக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



அரசியல் தீர்வு பிரச்சினை இல்ல..! அபிவிருத்தி பற்றி பேச வருமாறு கூட்டமைப்புக்கு பசீல் சொல்லுறாரு.. அப்ப சோறுகேட்டுத்தான் தந்தை செல்லாவும், காப்பட்றோட்டு கேட்டுத்தான் இளைஞர்கள் எல்லாம் போராடினதும், லட்சக்கணக்கில தமிழர்கள் கொல்லப்பட்டதும் எண்டல்வா அவரும் அவரிட அண்ணர் மாரும் நினைக்கிறாங்க போல..!

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை பஸ்தரிப்பு நிலைய புனரமைப்பு பணிகள் துரித கதியில் முன்னெடுப்பு



(பாறுக் ஷிஹான்)

18.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலைய வளாகத்தை புனரமைத்து, அழகுபடுத்தும் வேலைத் திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்பிலுள்ள நகர அபிவிருத்தி அமைச்சினால் தேசிய ரீதியில் 100 நகரங்களை செழுமைமிகு நகரங்களாக அபிவிருத்திசெய்யும் திட்டத்தின்கீழ் கல்முனை நகரமும் உள்வாங்கப்பட்டு, முதற்கட்டப் பணியாக பஸ் நிலைய வளாகம் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரிஸ், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் விடுத்த வேண்டுகோளின்பேரில், பிரதமரின் விசேட பணிப்புரைக்கமைவாக மேற்படி திட்டத்தில் கல்முனையும் உள்வாங்கப்பட்டிருந்ததுடன், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் இராஜாங்க அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் எச்.எம்.எம்.ஹரிஸ் எம்.பி. மற்றும் மேயர் ஏ.எம்.றகீப் ஆகியோர் மேற்கொண்ட கலந்துரையாடலின் பிரகாரம் முதற்கட்டமாக பஸ் நிலைய வளாக புனரமைப்புக்காக மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதையடுத்து கடந்த செப்டெம்பர் 10ஆம் திகதியன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதி பணிப்பாளர் எஸ்.பி.எஸ்.ஜெயதிஸ்ஸவின் பங்கேற்புடன் மேயர் தலைமையில் இத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த பஸ் நிலைய புனரமைப்புப் பணிகள் காரணமாக இங்கு சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள், வீதிகளிலும் ஐக்கிய சதுக்கத்திலும் தரித்து நிற்கச் செய்யப்பட்டு வருகின்றது.

மேலும் இப்புனரமைப்புப் பணிகள் இன்னும் துரிதப்படுத்தப்பட்டு மிக விரைவாக நிறைவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என மேயர் ஏ.எம்.றகீப் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு 'புலதிசி' அதிவேக குளிரூட்டப்பட்ட ரயில்சேவை ஆரம்பம்



(மட்டக்களப்பு நிருபர்)

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொலன்னறுவை - கொழும்பு கோட்டைக்கு இடையில் நடைபெற்ற நகரங்களுக்கிடையில் ஆரம்பிக்கப்பட்ட 'புலதிசி' அதிவேக குளிரூட்டப்பட்ட புகையிரத சேவையானது போக்குவரத்து அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சியின் தீர்மானத்திற்கு அமைவாக எதிர்வரும் 28.01.2022 திகதிமுதல் மட்டக்களப்பு - கொழும்பு சேவையாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

இப்புகையிரத சேவையானது மட்டக்களப்பிலிருந்து அதிகாலை 01.30 மணிக்கு புறப்பட்டு காலை 08.45 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும். மீண்டும் பிற்பகல் 15.05 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் புகையிரதமானது இரவு 21.52 மணிக்கு மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை வந்தடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்புகையிரத சேவையினை ஏற்படுத்திக் கொடுத்த போக்குவரத்து அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சிக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் தமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கல்முனை வடக்கில் யுவதிகளுக்கு பற்றிக் கைத்தொழில் பயிற்சிநெறி


(பாண்டிருப்பு நிருபர்)

பற்றிக் கைத்தறி, புடவைக் கைத்தொழில் மற்றும் ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படும் ஒரு மாத பற்றிக் கைத்தொழில் பயிற்சிக்கான ஆரம்ப நிகழ்வு கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் தலைமையில் சேனைக்குடியிருப்பு விதாதா வள நிலையத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இங்கு தெரிவுசெய்யப்பட்ட 20 யுவதிகள் பயிற்சிநெறியில் கலந்துகொண்டனர். பயிற்சியாளர்களுக்கு ஒருமாத பயிற்சிநெறியின் முடிவில் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கான சுயதொழில் முயற்சிக்கான உதவிகளும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளமை குறிபிடத்தக்கது.

# அரை நூற்றாண்டு காலமாக கல்விப் பணியாற்றும் எஸ்.எச்.ஆதம்பாவா மௌலவிக்கான கௌரவிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)




அரை நூற்றாண்டுக்காலமாக கல்விப் பணியாற்றி வருகின்ற அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவரும் சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியின் முதல்வருமான மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா மதனியை பாராட்டி கௌரவிக்கும் வைபவமும் அவரது சுயசரிதை நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் பெப்ரவரி 06ஆம் திகதி சாய்ந்தமருது லீ மெரிடியன் மணடபத்தில் இடம்பெறவுள்ளது.

மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா, தனது கடந்த ஐம்பது வருட கால கல்விப் பணியின்போது கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி உள்ளிட்ட சில பாடசாலைகளில் இஸ்லாம் மற்றும் அரபு பாட ஆசிரியராக, தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளராக, தொலைக்கல்வி போதனாசிரியராக, அரபுக் கல்லூரிகள் பலவற்றின் அதிபராக சேவையாற்றி, பன்னூறு உலமாக்கள் மற்றும் கல்விமான்கள் பட்டம் பெற பெருந்தொண்டாற்றி யிருக்கிறார்.

இக்காலப் பகுதிகளில் அவரிடம் கல்வி கற்றுத்தேர்ந்த மாணவர் குழாம் ஒன்றே மேற்படி நிகழ்வுகளுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிகழ்வில் மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா (மதனி) - கல்வி, சமூகப் பணிகளும் பயணங்களும் எனும் நூல் வெளியீட்டு வைக்கப்படவுள்ளமை முக்கிய அம்சமாகும் என ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் உலமாக்கள், கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள், பள்ளிவாசல்கள், நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்துகொள்ளவிருக்கின்றனர் என மேலும் அறிவிக்கப்படுகிறது.

# நிந்தவூர் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலையை நவீனமயப்படுத்த கிழக்கு ஆளுநரிடம் கோரிக்கை





(பொத்துவில் நிருபர்)

அரசாங்கத்தின் தேசிய கொள்கை வேலைத்திட்டத்திற்கமைவாக கூட்டுறவுச் சங்கங்களினூடாக உற்பத்திகளை அதிகரிக்கும்பொருட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் நெல் உற்பத்தியில் முதன்மை வகிக்கும் நிந்தவூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலையை நவீனமயப்படுத்துவதற்கு திட்டமிட்டு, அதுதொடர்பான கோரிக்கையொன்றினை கிழக்கு மாகாண ஆளுநரிடம் முன்வைத்துள்ளதாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேசத்திற்கான கோப் பிறஷ் பல்பொருள் விற்பனை நிலையம் நிந்தவூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நேற்று முன்தினம் (24) திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கிழக்கில் 16 கோப் பிறஷ் பல்பொருள் விற்பனை நிலையங்களை அமைக்கும் விசேட வேலைத்திட்டத்திற்கமைவாக எட்டாவது கோப் பிறஷ் விற்பனை நிலையம் நிந்தவூர் பிரதேசத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை அபிவிருத்திசெய்யும் நோக்கில் அதன் எரிபொருள் நிலையத்தை ஆரம்பிப்பதற்காக கூட்டுறவு நிதியிலிருந்து ஒரு மில்லியன் ரூபாவை வழங்கி அதன் வேலைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

தேசிய கொள்கைத் திட்டத்திற்கமைவாக கூட்டுறவுச் சங்கங்களினூடாக உற்பத்திகளை ஆரம்பிப்பதே எமது இலக்காகும். நிந்தவூர் பிரதேசம் நெல் உற்பத்தியில் முதன்மை வகிக்கிறது. நிந்தவூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி ஆலையை நவீனமயப்படுத்தும் கோரிக்கை கிழக்கு மாகாண ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏ. சஹீத் அஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி பிரதம அதிதியாகவும், கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.வி.தங்கவேல் விசேட அதிதியாகவும், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டு. தமிழ்ச் சங்க செயலாளர் அமரர் தவராஜாவின் நினைவஞ்சலி நிகழ்வு

(மட்டக்களப்பு)




மட்டக்களப்பு தமிழ்ச் சங்க செயலாளர் அமரர் வேலுப்பிள்ளை தவராஜாவுக்கு மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம் நடத்திய நினைவஞ்சலி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிள்ளையாரடியில் அமைந்துள்ள மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தில் சங்கத்தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.


தீபச்சுடர் ஏற்றப்பட்டு திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அமரத்துவமடைந்த வே.தவராஜாவின் ஆத்மா சாந்தியடைய மௌன அஞ்சலிப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி வரவேற்புரையும் தலைமையுரையும் நிகழ்த்தப்பட்டது. அதன் பின்னராக அமரர் வே.தவராஜாவின் ஆசிரியப்பணியின் சிறப்பினை பற்றி மட்டக்களப்பு தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர் வே.அமிர்தலிங்கம், தமிழ்ப்பணியும் தமிழ்ச்சங்கமும் என்ற தலைப்பில் மட்டக்களப்பு தமிழ்ச் சங்க செயற்குழு உறுப்பினர் ச.தங்கராசா, சமூக வாழ்வியலோடு பிணைந்த கொள்கைசார் பற்றுறுதி பற்றி மட்டக்களப்பு தமிழ்ச் சங்க துணைச்செயலாளர் இ.பிரதீஸ்காந்த், ஆன்மாவின் பேறு என்ற தலைப்பில் மட்டக்களப்பு தமிழ்ச்சங்க செயற்குழு உறுப்பினர் சைவப்புலவர் சிவானந்தஜோதி ஞானசூரியம் ஆகியோரால் நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

அதனைத்தொடர்ந்து மட்டக்களப்பு தமிழ்ச்சங்க கணக்காய்வாளர் கலாபூஷணம் கா.சிவலிங்கத்தால் கவிதாஞ்சலி நிகழ்வு இடம்பெற்றதுடன், அமரர் வே.தவராஜா தொடர்பான நினைவுசார் மனப்பதிவுகள் கல்முனை ஆதார வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி முரளீஸ்வரனாலும் ஆசிரியர் த.சிவகுமாராலும் நிகழ்த்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து நினைவஞ்சலி நிகழ்வுக்கான ஏற்புரையினை அமரர் வே.தவராஜாவின் புதல்வி திருமதி தனுஷனா சுகந்தன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க துணைச் செயலாளர் திருமதி பிரியா கருணாகரனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

# கல்முனை ஹோலிபீல்ட் விளையாட்டுக் கழக 26ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்





(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை பிரதேசத்தின் மூத்த கழகங்களில் ஒன்றான கல்முனை ஹோலிபீல்ட் விளையாட்டுக் கழகத்தின் 26ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும், நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் சமாதான கற்கைகள் நிலைய சம்மாந்துறை வளாகத்தில் கழக செயலாளர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம்.ஜெஸ்மின் தலைமையில் நடைபெற்றது.

இந்த பொதுக் கூட்டத்தில் கடந்தாண்டின் இறுதிக் கூட்டத்தின் கூட்டறிக்கை மற்றும் கணக்கறிக்கை விடயங்கள் என்பன எடுத்துரைக்கப்பட்டு சபையோரின் அங்கீகாரம் பெறப்பட்டதுடன், கல்முனை ஹோலிபீல்ட் விளையாட்டுக் கழகம் 26 வருடங்கள் கடந்துவந்த பாதைகள் தொடர்பிலும், கடந்த கால செயற்பாடுகள் தொடர்பிலும் கழக நிர்வாகிகளினால் நினைவுரைகள் நிகழ்த்தப்பட்டன

கழகத்தின் கால் நூற்றாண்டு விழா நிகழ்வுகளை பண்டாரநாயக்கா சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் நடத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன், மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம்.ஜிப்ரி தொடர்பிலுமான விடயங்கள் இங்கு ஆராயப்பட்டதுடன், சாதனையாளர்களின் கௌரவிப்புகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

அந்த வகையில் புதிய நிர்வாகத் தலைவராக மீண்டும் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம்.ஜெஸ்மின், செயலாளராக பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ், பொருளாளராக எம்.எச்.எம். ஹனீஃப் ஆகியோரும் தவிசாளராக சமீர் ஜுனூஸ் மற்றும் பிரதித் தவிசாளராக யூ.எல்.எம்.றியாஸ், உப செயலாளராக பஸ்மி காசிம், கலாச்சார செயலாளராக மௌலவி சபா முஹம்மத் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த பொதுக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளனத் தலைவர் இந்திக்கநளின் ஜெயவிக்ரம, செயலாளர் சித்தார்த் லியானாராய்ச்சி, செயற்குழு உறுப்பினர்கள் கண்காணிப்பாளர்களாக கலந்துகொண்டதுடன், கல்முனை ஹோலிபீல்ட விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது அம்பாறை மாவட்ட கிரிக்கட் சம்மேளன நிர்வாகிகள் கல்முனை ஹோலிபீல்ட் விளையாட்டுக் கழக நிர்வாகிகளினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# திருமலையில் அரசுடைமையாக்கப்பட்ட 68 ஏக்கர் காணி; எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரசூல்நகர் கிராமத்தில் சுமார் 250 குடும்பங்கள் ஒரு தலைமுறைக்கு அதிகமாக வசித்துவரும் 68 ஏக்கர் காணியை சுற்றுலாத்துறை வர்த்தமானி அறிவித்தல் மூலம் உரிமையாக்கிக் கொண்டுள்ளது. இதனை எதிர்த்து குறித்த மக்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த நிலையில் சுற்றுலாத்துறைக்கு சாதகமாக தீர்ப்பு கிடைத்துள்ளது.

எனவே, நேற்று முன்தினம் (24) திருகோணமலை நீதிமன்றத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், பொலிஸாரும், சுற்றுலாத்துறை அதிகாரிகளும் குறித்த காணிகளை கையகப்படுத்த சென்றபோது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வழியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதுடன், கிராமசேவகர் மக்களுடன் கலந்துரையாடிய போதும் வாய்த்தர்க்கங்கள் இடம்பெற்று சற்று அமைதியின்மை ஏற்பட்டது.

பின்னர் அவ்விடத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலை வலுவடைந்ததையடுத்து அதிகாரிகள் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.





# மட்டுநகர் பெரிய உப்போடை பார்வீதியில் முச்சக்கரவண்டி சாரதி மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள பார்வீதி பெரியஉப்போடை வீதியில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் நேற்று (25) காலை மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலமாக முச்சக்கரவண்டியுடன் மீட்கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கருவப்பங்கேணியைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய மாசிலாமணி தர்மரட்ணம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மட்டு ரயில்நிலையத்தின் முன்னால் உள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் இருந்து முச்சக்கரவண்டியை செலுத்திவருவதாகவும் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு அதிகாலை 4 மணிக்கு வந்தடையும் ரயிலில் வரும் பிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்காக நேற்று அதிகாலை 4 மணியளவில் வீட்டைவிட்டு முச்சக்கரவண்டியில் சென்றுள்ளார்.





இந்நிலையில், ரயில் நிலைய முச்சக்கரவண்டி தரிப்பிடத்திலிருந்து புன்னைச்சோலை பகுதிக்கு பயணி ஒருவரை ஏற்றிச்சென்ற நிலையில் பார்வீதி உப்போடை வீதியில் காலை 6 மணிக்கு முச்சக்கரவண்டி சேதமடைந்த நிலையில் அதன் அருகே மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அக்கரைப்பற்று பிரதேச சபை நலன்புரி அமைப்பினால் உத்தியோகத்தர்கள், மக்கள் பிரதிநிதிகள் கௌரவிப்பு





(நூருல் ஹுதா உமர்)

இலங்கையிலுள்ள 126 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான LDSP திட்டத்தின் ஊடாக நடத்தப்பட்ட (PPTA) போட்டி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அக்கரைப்பற்று பிரதேச சபை அம்பாறை மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை தன்வசமாக்கிக்கொண்டது.

இதற்காக நிர்வாக ரீதியாக தன்னை அர்ப்பணித்த அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எல்.முகம்மட் இர்பான் மற்றும் பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்களை பாராட்டும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச சபையின் நலன்புரி அமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த கௌரவிப்பு நிகழ்வில் பிரதேச சபையின் கௌரவத்திற்காக நிர்வாக ரீதியாக தன்னை அர்ப்பணித்த அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எல்.முகம்மட் இர்பான், தவிசாளர், உப தவிசாளர் ஆகியோர் பிரதேச சபை உத்தியோகத்தர்களினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# கல்முனை பிராந்திய சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் றிபாஸ் தெரிவிப்பு



(பொத்துவில் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சிறந்தொரு கட்டமைப்பினைக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதன் கடந்தகால செயற்பாடுகள், இங்குள்ள உத்தியோகத்தர்களின் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்புகள் பாராட்டத்தக்கதாகும் - என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பதவியேற்றுக்கொண்ட வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸுக்கு நேற்று முன்தினம் (24) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வரவேற்பளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் யுனிசெப்பில் கடமையாற்றியபோது இலங்கையிலுள்ள அத்தனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் விஜயம் செய்திருக்கின்றேன். கல்முனையைபோன்று சிறந்தொரு கட்டமைப்பினைக்கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட பணிமனையினை எங்கும் காணவில்லை. அவ்வாறானதொரு சிறந்த பணிமனைக்கு பணிப்பாளராக வரக் கிடைத்ததனையிட்டு சந்தோஷமடைகின்றேன்.

நாம் எல்லோரும் மனிதர்கள் என்ற அடிப்படையில், ஒவ்வொருவரும் பல திட்டங்கள், அபிப்பிராயங்கள், கருத்துகளைக் கொண்டிருக்கின்றோம்.

இருந்தாலும் எல்லோரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டுள்ளோம். குறிப்பாக, இப்பிராந்தியத்தின் சுகாதாரத் துறையை அபிவிருத்திசெய்வதற்கு என்னிடம் பல திட்டங்கள் உள்ளன. அதுதொடர்பில் உங்களோடு கலந்தாலோசிக்க உத்தேசித்துள்ளேன். அவற்றை நடைமுறைப் படுத்தக்கூடிய சூழல் உருவாகின்ற பட்சத்தில் இந்தப் பிராந் தியத்தினை இன்னும் பல படிகள் முன்னோக்கி நகர்த்த முடியும் என்கின்ற நம்பிக்கை எனக்குள்ளது.

குறிப்பாக, இன்று தொடங்கும் இந்தப் புதிய பயணத்தில் சகலரும் இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இப்பிராந்தியத்தின் சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு இப்பணிமனையின் அத்தனை உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

கிழக்கு
செய்திகள்
easttamilan@gmail.com

# நெனசல வாசிகசாலை வேலைத்திட்டத்தின்கீழ் 14 நூலகங்களுக்கு புத்தகங்கள் கையளிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நெனசல வாசிகசாலை வேலைத்திட்டத்தின்கீழ் மட்டக்களப்பிலுள்ள 14 வாசிகசாலைகளுக்கு புத்தகப் பொதிகள் வழங்கும் நிகழ்வு உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன் தலைமையில் நேற்று (25) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் பிரதேச செயலகப் பிரிவுகளின்கீழ், நாடுபூராகவுமுள்ள பின்தங்கிய வாசிகசாலைகளை வளப்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதனூடாக வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் வாசிகசாலைகளுக்கு இலக்கியம் மற்றும் ஆய்வு நூல்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



இதேவேளை, கடந்த 2021 காலப்பகுதிக்கான நெனசர வேலைத்திட்டம் கொவிட்-19 பரவல் காரணமாக பிற்போடப்பட்டிருந்தது. தற்போது இம்மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்து 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட பின்தங்கிய வாசிகசாலைகளுக்கு சுமார் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான இப்புத்தகத் தொகுதிகள் உதவி மாவட்ட செயலாளர் நவேஸ்வரனினால் நூலகர்களிடம் கையளிக்கப்பட்டது.

மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எம்.ஏ.சீ. ஜெய்னுலாப்தீனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வாசிகசாலைக்குப் பொறுப்பான நூலகர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

மேலும் 2022ஆம் ஆண்டுக்காக ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து இரண்டு வாசிகசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் புத்தகப் பொதிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சைக் கடமைகளிலும் அரசியல் தலையீடு; அரசின் கேவலமான செயல் என்கிறார் இம்ரான் எம்.பி.

(கிண்ணியா, திருமலை நிருபர்கள்)

சுயாதீனமாக செயற்படவேண்டிய பரீட்சைக் கடமைகளிலும் அரசியல் தலையீடு இடம்பெறுவது இந்த அரசின் கேவலமான செயல்களில் ஒன்றாகும் - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் 5ஆம் தர மற்றும் உயர்தரப் பரீட்சைக் கடமைக்காக நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த நியமனங்களில் வழமைக்கு மாறாக இனரீதியான புறக்கணிப்புகள் இடம்பெற்றுள்ளதாக அதிபர், ஆசிரியர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த பரீட்சைக் கடமை நியமனங்களில் வழமையாகப் பின்பற்றப்பட்டுவந்த இனச்சமநிலை பின்பற்றப்படவில்லை. முஸ்லிம் அதிபர், ஆசிரியர்கள் இம்முறை பரீட்சைக் கடமைகளில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

பரீட்சைக் கடமை வழங்கப்பட்ட கிண்ணியா, மூதூர், தோப்பூர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் புல்மோட்டை, கோமரங்கடவெல போன்ற தூரப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை, குச்சவெளி போன்ற பிரதேசத்தவர்களே வழமையாக இப்பகுதி பரீட்சைக் கடமைக்கு நியமிக்கப்பட்டனர். இம்முறை சிரமப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நிலை திட்டமிட்டு மாற்றப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

வழமையாக வலயக்கல்விப் பணிப்பாளர் களினால் வழங்கப்படும் பெயர்ப்பட்டியல்களி லிருந்தே பரீட்சைக் கடமை நியமனங்கள் செய்யப்பட்டன. இவ்வாறு செய்வதனூடாக சிரேஷ்டத்துவம், தகைமை என்பன கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கும். இம்முறை இந்த நிலை பின்பற்றப்படவில்லை. வலயக்கல்விப் பணிப்பாளர்களின் பெயர்ப்பட்டியலுக்கு வெளியே நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. அரசியல் ரீதியாக வழங்கப்பட்ட பெயர்ப்பட்டியலிலிருந்தே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

அதிபர், ஆசிரியர்களின் சிரேஷ்டத்துவம் கவனத்திற்கொள்ளப்படாமல் முதலாந்தர அதிபர், ஆசிரியர்கள், உதவி மேற்பார்வையாளர்களாக இம்முறை நியமிக்கப்பட்டுள்ளனர். வழங்கப்பட்ட நிமயனக் கடிதங்களில் கூட பெயர், தரம், பாடசாலை என்பன சரியாகக் குறிப்பிடப்படாது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கலந்துகொண்டோரிடமிருந்து ஒப்பம் பெறப்பட்டபோது பரீட்சை நிலையமோ மேற்பார்வையாளர், உதவி மேற்பார்வையாளர் பெயர்களோ குறிப்பிடப்படாது ஒப்பங்கள் பெறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பரீட்சைக் கடமை தொடர்பாக தெளிவுபடுத்தும் கூட்டம் பகல் 12 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் மாலை 5 வரை அது நடத்தப்பட்டுள்ளது. கலந்துகொண்டவர்களுக்கு மதிய உணவு கூட வழங்கப்படவில்லை. இக்கூட்டத்தில் வைத்தும் நியமனங்களில் விருப்பு, வெறுப்புகள் காட்டப் பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டதாக கலந்து கொண்டோர் புகார் தெரிவிக்கின்றனர்.



ஆளுநர் செயலகத்திலிருந்து வந்த அறிவுறுத்தல்களுக்கமைய பரீட்சைக்கான பிராந்திய இணைப்பாளர் செயற்பட்டதாலேயே இவ்வாறான குறைபாடுகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் பரீட்சைக் கடமைகளில் இனரீதியான புறக்கணிப்புகள் இடம்பெற்றாலும் 20ஆம் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்து, வரவு-செலவுத்திட்டம், போர்ட் சிட்டி சட்டமூலம் என பல விடயங்களில் அரசுக்கு ஆதரவாக இருந்துவரும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் இந்த விடயம் குறித்து எதுவித நடவடிக்கையும் தங்களால் எடுக்க முடியாது என கை விரித்ததாக சில அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நேர்மையாக நடக்கவேண்டிய பரீட்சைக் கடமைகளில் இவ்வாறான தலையீடுகளும், இனரீதியான புறக்கணிப்புகளும் இடம்பெற்றால் பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிவிடும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

# கந்தளாயில் மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஆரம்பம்





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்திகுட்பட்ட தி/ஆயீஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று (25) ஆரம்பிக்கப் பட்டன.

தி/ஆயீஷா மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.சாகித்தீன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது பைசர் தடுப்பூசிகள் தரம் ஏழாம் ஆண்டிலிருந்து தரம் பத்து வரையான மாணவர்களுக்கு கந்தளாய் பிராந்திய சுகாதார வைத்திய அத்தியட்சகர் அலுவலகத்தினால் செலுத்தப்பட்டன.

மேலும் மாணவர்களுக்கு கொவிட் தடுப்பூசிகளின் முக்கியத்துவம் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகரினால் தெளிவுபடுத்தப்பட்டது. இதில் 700 மாணவர்களுக்கு மேல் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

# ஆறு மாதங்கள் நீர்க்கட்டணம் செலுத்தாவிடின் விநியோகம் துண்டிப்பு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவிப்பு



ஆறு மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக நீர் விநியோக கட்டணத்தை செலுத்தாதவர்களுக்கு நீர் விநியோகத்தை துண்டிக்கும் செயற்பாடு மாவட்ட மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொது முகாமையாளர் ஏக்கநாயக்க வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 7,200 மில்லியன் ரூபாவை நீர் பாவனையாளர்கள் செலுத்தத் தவறியுள்ளதாகவும், ஆறு மாதங்கள் அல்லது 2000 ரூபாவுக்கு மேல் நிலுவையாகவுள்ள நீர்ப் பட்டியலுக்கான நீர் விநியோகத்தை துண்டிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

27 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மாதாந்தம் 50 மில்லியன் கனமீற்றர் குடிநீரை வழங்குகிறது. மேலும் 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2,100 மில்லியன் ரூபாவாக இருந்த நிலுவைக் கட்டணத் தொகையை செலுத்தாமையினால், டிசம்பர் மாதமளவில் அத்தொகை 7,200 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

மாதாந்த குடிநீர்க் கட்டணத்தை 14 நாட்களுக்குள் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு அடுத்த மாத பில்லில் 1.5 சதவீத தள்ளுபடியும் பணம் செலுத்த தாமதப்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு மாதாந்த பில்லில் 2.5 சதவீதம் தாமதக் கட்டணமும் அறவிடப்படும் என்று உதவிப் பொது முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலா விடுதிகளில் வெளிநாட்டவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியில் பணம் பெற வேண்டும்

## இலங்கை மத்திய வங்கியினால் விசேட வர்த்தமானி ஊடாக அறிவுறுத்து

சுற்றுலா விடுதிப் பணிகளை வழங்குவோர் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்தான கொடுப்பனவுகளை வெளிநாட்டுச் செலாவணியில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதனை மத்திய வங்கி கட்டாயமாக்கியிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை சுற்றுலா விடுதிப்பணிகளை வழங்குவோர் இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களிடமிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் மாத்திரமே கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதனை கட்டாயமாக்குகின்ற விதிகளை விடுத்திருக்கிறது. இவ்விதிகள் ஜனவரி 21 திகதியிடப்பட்ட இல. 2263/41 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இவ்விதிகள் வெளியிடப்பட்டமையைத் தொடர்ந்து இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு செய்துகொண்டுள்ள அத்துடன், அதனால் உரிமம் வழங்கப்பட்டுள்ள சுற்றுலா விடுதிப் பணி வழங்குவோர் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றனர்:

இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு வழங்கப்பட்ட பணிகளுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் மாத்திரம் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்தல்,




அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை மூன்று வியாபார நாட்களுக்குள் சுற்றுலா விடுதிப் பணி வழங்குவோரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வைப்புச் செய்தல் அல்லது உரிமம்பெற்ற வங்கியொன்றிற்கு விற்றுவிடுதல் வேண்டும்.

இலங்கைக்கு வெளியே வதியும் அத்தகைய ஆள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையைப் (கொடுகடன் அட்டை, பற்று அட்டை, பயண அட்டை போன்றவை) பயன்படுத்தி கொடுப்பனவுகளைச் செய்திருக்கும் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவுகளை சுற்றுலா விடுதிப் பணி வழங்குவோரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைத்தல் வேண்டும்.

அதேநேரம், இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்கள் இலங்கைக்குள் வெளிநாட்டு நாணயத்தினைக் கொண்வந்தமைக்கும் அதனை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுநர் ஒருவரினூடாக இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொண்டமைக்கும் மூல ஆவணச்சான்றுகளை அத்தகைய ஆட்கள் சமர்ப்பிப்பதற்குட்பட்டு, இலங்கைக்கு வெளியே வதியும் அத்தகைய ஆட்களுக்கு வழங்கப்பட்ட பணிகள் தொடர்பில் இலங்கை ரூபாவில் செய்யப்படும் கொடுப்பனவுகளை சுற்றுலா விடுதிப் பணிகளை வழங்குவோர் ஏற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# எழுத்தாக்கப் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

2022 ஆம் ஆண்டின் தேசிய எழுத்தாக்கப் போட்டிக்கு விண்ணப்பங்களை கலாசார அலுவல்கள் திணைக்களம் கோரியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் விண்ணப்பங்களை பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்க முடியும்.

புதிய எழுத்தாளர்களை பல்வேறு விடயங்களுக்குரிய கலை அல்லது ஆய்வு நூலாக்கத்தில் ஈடுபட ஊக்குவிக்கும் நோக்கில் தேசிய கையெழுத்துப் போட்டியை மும்மொழிகளிலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 011 288 2667 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது www.culturaldept.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

# நொண்டி அழகர் திருக்கோயில் பிரதிஷ்டை பெருவிழா











இங்கிரிய, றைகம்,மேற்பிரிவு நொண்டி அழகர் திருக்கோயிலின் பிரதிஷ்டை கும்பாபிஷேக பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

றைகம், கீழ்பிரிவு, ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு,

'சர்வாலய கிரியாமணி' சிவஸ்ரீ கணேச பரமசிவன் குருக்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தார்கள்.



நிகழ்வில், ஆன்மீக பணிகளுக்கு பங்களிப்பு செய்த தன்னார்வலர்களுக்கு அழகர் நினைவுச் சின்னம் பரிசாக வழங்கப்பட்டது.

# கட்டுத்துவக்கில் சிக்கி விவசாயி உயிரிழப்பு

(அனுராதபுரம் செய்தியாளர்)

காட்டு மிருகங்களை வேட்டையாடுவதற்காக கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கில் அகப்பட்டு விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக விளச்சிய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் 24ஆம் திகதி மாலை யாயஹத்த வெலிஅல பகுதியிலுள்ள வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் யாய 06 தெற்கு இவுற பேமடுவ பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட 53 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

சம்பவதினத்தன்று மாலை தனது பயிர்ச்செய்கை நிலத்திற்கு சென்றபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விளச்சிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டெஸ்மன் டுட்டுவும் சர்வதேச அரசியலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இன்று உரை

தென்னாபிரிக்க இன ஒடுக்குமுறைக்கு எதிராகச் செயற்பட்ட பேராயர் டெஸ்மன் டுட்டுவும் சர்வதேச அரசியலும் என்ற கருப்பொருளில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உரை ஒன்று இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர், பத்திரிகையாளர் நிக்ஸன் மேற்படி தலைப்பில் உரையாற்றவுள்ளார். சங்கத்தின் பேரவை உறுப்பினர் பேராசிரியர் தை.தனராஜ் நிகழ்வுக்குத் தலைமை தாங்குவார்.

இன்று 26ஆம் திகதி புதன்கிழமை மாலை ஆறு மணிக்கு சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் உரை நிகழ்த்தப்படும். வெள்ளவத்தை உருத்ரா மாவத்தை ஊடான சங்கம் மாவத்தையிலுள்ள கொழும்புத் தமிழச் சங்கம் மாதாந்தம் நடத்தும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்விலேயே மேற்படி தலைப்பில் உரை இடம்பெறவுள்ளது.

சமகால புவிசார் அரசியல் மற்றும் பேராயர் டெஸ்மன் டுட்டுவின் ஈழத்தமிழ் மக்கள் மீதான அக்கறை குறித்த விடயங்கள் உரையின் பிரதான கருப்பொருளாகும்.

உரையின் பின்னர் கேள்வி பதில் இடம்பெறும். மாணவர்கள், ஆர்வலர்கள், அரசியல் பிரதிநிதிகள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் கல்விக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

# இலவச ஊடக செயலமர்வு 30ஆம் திகதி கண்டியில்

மாவனெல்லை ஜே.எம். மீடியா நிறுவனம் ஏற்பாடுசெய்துள்ள 'மீடியா டிப்ஸ்-7' என்ற தலைப்பிலான ஒரு நாள் ஊடக அறிவூட்டல் செயலமர்வு எதிர்வரும் 30ஆம் திகதி கண்டி கொடுகொடல்ல வீதியில் அமைந்துள்ள ஈ.எல்.சேனாநாயக்கா கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறும். இந்த ஒரு நாள் செயலமர்வில் பங்குபற்ற விரும்புபவர்கள் 0777128348 என்ற இலக்கத்துடனான வட்ஸ் அப் மூலம் பதிவு செய்துகொள்ள முடியும். கொவிட் கட்டுப்பாடு காரணமாக 200 பேர் மாத்திரமே இந்த செயலமர்வுக்கு அனுமதிக்கப்படுவர் என்று ஜே.எம். மீடியா வழிகாட்டல் மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த நிறுவனம் இளம் தலைமுறையினர் மத்தியில் ஊடகம் பற்றிய அறிவை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை மட்ட செயலமர்வுகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# மறைந்த துணைத் தூதுவர் நீலாவுக்கு மிலானில் மத அனுஷ்டானங்கள்







மறைந்த துணைத் தூதுவர் விஷாரத நீலா விக்கிரமசிங்கவுக்காக கடந்த சனிக்கிழமை (22) இத்தாலியின் மிலானிலுள்ள காசா புனரேரியா மரணச்சடங்கு இல்லத்தில் பல்வழி மத அனுஷ்டானங்கள் நடைபெற்றன. மறைந்த துணைத் தூதுவரின் கணவர் கபில ஹேரத், உறவினர்கள், துணைத் தூதரகத்தின் ஊழியர்கள் மற்றும் மறைந்த துணைத் தூதுவருக்கு பிரார்த்தனை செய்வதற்காக ஒன்றுகூடியிருந்த இத்தாலியிலுள்ள இலங்கை சமூகத்தின் உறுப்பினர்களின் பங்கேற்புடன் மிலானிலுள்ள இலங்கையின் துணைத் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்றன.

இத்தாலியின் பிரதம சங்கநாயக்க தேரரும், மிலானோ சர்வதேச பௌத்த நிலையத்தின் பிரதம மதகுருவுமான ராஜகிரிய பண்டித வணக்கத்திற்குரிய மகாகம விபுலசிறி தேரர் மறைந்த துணைத் தூதுவருக்கு பன்சுகுலவை நிறைவேற்றி தர்ம தேஷனவை மேற்கொண்டார்.

மிலானுக்கு வருகை தருவதற்கு முன்னர் மறைந்த திருமதி விக்கிரமசிங்கவினால் திட்டமிடப்பட்டிருந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போனமையினால் அவரது திடீர் மறைவு மிலான் மற்றும் வடக்கு இத்தாலியிலுள்ள இலங்கை சமூகத்திற்கு ஒரு இழப்பாகும் என நாயக்க தேரர் குறிப்பிட்டார்.

ஐரோப்பாவின் பிரதம சங்கநாயக்க தேரரும், எதென்ஸ் பௌத்த விகாரையின் பிரதம மதகுருவுமான வணக்கத்திற்குரிய எலுவாபொல பஞ்ஞரதன தேரர் அனுஷாசனத்தை மேற்கொண்டார்.

இந்த சமய நிகழ்வுகளில் மிலான் தர்மநிகேதனாராமயவின் பிரதம மதகுருவான சாஸ்தபதி வணக்கத்திற்குரிய பெல்கஹதென்ன சீலவிமல தேரர் மற்றும் மிலானோ லங்காராம விகாரையின் பிரதம மதகுருவான வணக்கத்திற்குரிய வெளபெத்தே சுனீத தேரர் ஆகியோர் கலந்துகொண்டனர். இத்தாலியிலுள்ள கத்தோலிக்க சமூகத்தின் சார்பாக, அருட்தந்தை தேஷான் பெரேரா கத்தோலிக்கப் பிரார்த்தனைகளை நிகழ்த்தியதுடன், அருட்தந்தை பிரிங்கி ரொசான் அப்புஹாமியும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

நன்றியுரையை வழங்கிய கபில ஹேரத், இத்தாலியில் வாழும் இலங்கைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மிலானுக்கு வருகை தந்து, மறைந்த தனது பாரியாருக்கு வழங்கிய நேர்மையான உதவிகளுக்காக தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். மறைந்த துணைத் தூதுவர் இலங்கைச் சமூகத்திற்கு தனது பதவிக்காலத்தில் வழங்க விரும்பிய சேவைகளை நினைவுகூர்ந்த ஹேரத், மறைந்த திருமதி விக்கிரமசிங்க வாடிய மலரைப் போன்று அல்லது இறங்கிய சந்திரனைப் போன்று காலமானதாக குறிப்பிட்டார். ஹேரத்தின் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை சமூகத்தின் சார்பாக ஹேமந்த பீரிஸ் இறுதிச் சடங்கு நிகழ்வில் உரையாற்றினார்.

திருமதி விக்கிரமசிங்க திடீர் சுகவீனம் காரணமாக 2022 ஜனவரி 17ஆம் திகதி மிலானில் காலமானதுடன், மறைந்த துணைத் தூதுவரின் சடலத்தை இத்தாலி மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலுமுள்ள அதிகாரிகளின் ஒருங்கிணைப்பில் இந்த வாரத்தின் தொடக்கத்தில் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.




றோயல் கல்வி நிறுவனத்தின் ஆங்கிலப் பாட ஆசிரியை ஷஹாரா கனக ஹாலால்டினின் 8ஆவது படைப்பாக பாலர் பிரிவு மாணவர்களின் ஆரம்ப எழுத்தறிவுக்கான சிங்கள மொழிநூல் வெளியீடு திங்கட்கிழமை (24) மாலை கொள்ளுப்பிட்டியிலுள்ள புரவலர் ஹாசிம் உமரின் இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்வில் நூலின் முதல் பிரதியை பதிப்பாசிரியரிடமிருந்து இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்வதையும் அருகில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதாமேத்தா, ஊடகவியலாளர் சமீஹா சபீர் மற்றும் அஹாச மீடியா பொறுப்பாளர் பியன்சிகா பண்டாரநாயக்க ஆகியோரையும் படங்களில் காணலாம். (அஷ்ரப் ஏ சமத்)

# இலங்கையின் 74ஆவது சுதந்திர தினம் அனுஷ்டிப்பு தொடர்பாக மன்னாரில் இடம்பெற்ற முன்னாயத்த விசேட கலந்துரையாடல்

## திணைக்களத் தலைவர்கள் பங்கேற்பு

(மன்னார் நகர் நிருபர்)

இலங்கையின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வை மன்னார் மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் (24) காலை மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின்போது அரச அதிபர் தெரிவிக்கையில்,

கடந்த சில வருடங்கள் கொரோனா தொற்று காரணமாக சுதந்திர தின நிகழ்வு மட்டுப்படுத்தப்பட்ட அளவு அதிகாரிகளுடன் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

தற்போது கொரோனா தொற்றின் தாக்கம் சிறிதளவு குறைவடைந்திருக்கும் நிலையில் இலங்கையின் 74ஆவது சுதந்திர தின நிகழ்வை மிகவும் சிறப்பாக நடத்துவதற்கு



தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அன்றைய தினம் (4) காலை மன்னார் பாலத்தடியிலிருந்து முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் பாடசாலை மாணவர்கள், மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்களுடன் ஆரம்பமாகி மன்னார் செயலகத்தில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அதற்கு முன்னர் மன்னார் பாலத்தடி கடற்கரைப் பகுதியில் பாரிய சிரமதான நடவடிக்கையொன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபர்கள், மன்னார் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் , பாதுகாப்புத்துறையினர் மற்றும் முப்படையினரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் உருத்திராதேவி மோதி மாணவன் உயிரிழப்பு

(யாழ் நிருபர்)

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த உருத்திராதேவி புகையிரதம் மோதி மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6.15 மணியளவில் குறித்த விபத்துச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் கொடிகாமத்தைச் சேர்ந்த உதயகுமார் பானுசன் (வயது 18) எனும் மாணவனே உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் புகையிரத பாதையினை நடந்து கடந்தவேளை யாழ்ப்பாணம் நோக்கிச்



சென்ற புகையிரதத்துடன் மோதியதில் உயிரிழந்துள்ளார். குறித்த மாணவன் இன்று பாடசாலையில் நடைபெறும் (சோர்சல்) நிகழ்வுக்கு ஆடைகளை தைக்கச் சென்றபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஒற்றுமையை நிலைநாட்டுவோம்; ஒற்றையாட்சியை நிராகரிப்போம்!

## துண்டுப்பிரசுரங்கள் தென்மராட்சியில் விநியோகம்





(சாவகச்சேரி நிருபர்)

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிக்கக் கோரி தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று (25) செவ்வாய்க்கிழமை காலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசம்,இறைமை,சுயநிர்ணயமுள்ள சமஸ்டித் தீர்வினை வலியுறுத்தி 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமாகவிருக்கும் பேரணியில் கலந்துகொண்டு ஒற்றுமையை நிலைநாட்டவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

13ஆம் திருத்தத்திற்கு எதிராக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# சுன்னாகத்தில் மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



(யாழ் நிருபர்)

சுன்னாகம் சந்தியில் வீதி சமிக்ஞை விளக்கில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் மதுபானசாலையிலிருந்து மோட்டார்சைக்கிளை கொள்ளையிட்டுத் தப்பி ஓடியவர்கள் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

ராசா ரவிச்சந்திரன் என்ற 50 வயது மதிக்கத்தக்கவரே உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் மதுபானசாலைக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தென்மராட்சியைச் சேர்ந்த இருவர் கொள்ளையிட்டு தப்பித்ததை மோட்டார்சைக்கிளின் உரிமையாளர் கண்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் உள்ளிட்டோர் துரத்திச்சென்ற நிலையில் கொள்ளையர் பயணித்த மோட்டார்சைக்கிள் சுன்னாகம் சந்தி வீதி சமிக்ஞை விளக்கு பகுதியில் எதிரே வந்தவரை மோதித்தள்ளியது.

சம்பவ இடத்திலேயே அதிக குருதிப்போக்கு போன நிலையில் அவர் உயிரிழந்தார்.

கொள்ளையர்கள் இருவரும் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோத மணல் அகழ்வினால் கிளிநொச்சி இரணைமடு குளத்திற்கு பாரிய ஆபத்து ஏற்படும்

## அரச அதிபர் ரூபவதி தெரிவிப்பு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வினால்

மாவட்டத்தில் இருக்கின்ற மிகப்பெரும் வளமான இரணைமடு குளத்திற்கு மிகப்பெரும் ஆபத்து ஏற்படும். மாவட்டத்திலிருக்கின்ற மிகப்பெரும் வளத்தை நாம் இழக்கமுடியாது – என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார். சட்டவிரோத மணல் அகழ்வுகளால் மாவட்டத்திலிருக்கும் மிகப்பெரிய வளத்தை நாங்கள் இழக்க முடியாது. இதனால் ஏற்படும் அழிவுகள் ஆபத்துகள் மிக அதிகம். எனவே, அனைவரும் இதில் பொறுப்புடன் செயற்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (24) பகல் 2 மணிக்கு மாவட்ட செயலக மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கருத்துரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத மணல் அகழ்வுகளால் இருக்கின்ற மிகப்பெரிய வளத்தை நாங்கள் இழக்கமுடியாது. இதனால் ஏற்படும் அழிவுகள், ஆபத்துகள் மிக அதிகம். எனவே, அனைவரும் இதில் பொறுப்புடன் செயற்படவேண்டும். அதிகாரிகளாகிய நாங்கள் இங்கே கடமையில் இருப்போம். சில வருடங்களுக்குள் சென்று விடுவோம்.

ஆனால், இந்த சமூகமும் இந்த மக்களும் பிரதேசத்திலேயே தொடர்ந்தும் இருக்கப் போகின்றார்கள். ஆகவே,இந்த சட்டவிரோத மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும்.

குறிப்பாக இங்கே இருக்கின்ற ஒரு பெரிய வளமான இரணைமடு குளத்தின்கீழ் மணல்

அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் எதிர்காலத்தில் பெரிய ஒரு வளத்தை நாங்கள் இழந்துபோக முடியாது. இதனால் ஆபத்துகளும் அழிவுகளும் அதிகமாக இருக்கும். எனவே, சமூகத்தின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிக மிக அவசியமானது. அந்த அடிப்படையிலேயே குறிப்பாக முதற்கட்டமாக 5 இடங்களில் இராணுவ காவலரண்களை அமைத்து அதன்மூலம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு இதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதற்கு கமக்காரர் அமைப்புகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன இடங்களை அடையாளப்படுத்தி காவலரண்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவு வங்கியில் வைப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மறுசீரமைக்கப்பட்ட சம்பளம் மற்றும் அரசாங்கத்தின் மேலதிக கொடுப்பனவு என்பன வங்கியில் வைப்பு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு வலயம் மற்றும் வவுனியா வடக்கு வலயம் என்பன துரிதமாக ஆசிரியர்களின் சம்பள மறுசீரமைப்பு வேலைகளை மேற்கொண்டு அவர்களுக்கான மறுசீரமைக்கப்பட்ட சம்பள அதிகரிப்புகளையும், அரசாங்கத்தால் இடைக்கால கொடுப்பனவாக வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா பணத்தையும் இணைத்து ஆசிரியர்களின் சம்பள வங்கிக் கணக்கில் வைப்பு செய்துள்ளதாக ஆசிரிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஆசிரியர்களின் இம் மாதத்திற்கான சம்பளம் கடந்த 20ஆம் திகதி வைப்புசெய்யப்பட்ட நிலையில் விசேட பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு நேற்று முன்தினம் (24.01) இவ்வதிகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் கார்பட் வீதிகளில் நெல்லை உலரவிடும் துயரம் இவ்வருடமும் தொடர்கிறது

## விவசாயிகள் கவலை



(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் தற்போது காலபோக நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் அறுவடை செய்த நெல்லை உலர வைப்பதற்கான போதியளவு உலரவிடும் தளம் இன்மையால் இவ்வருடமும் கார்பட் வீதிகளில் நெல் உலரவிடும் அவலம் தொடர்கிறது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நெல் அறுவடை நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையில் நெல்லை உலரவைப்பதற்கான தளங்கள் இல்லாததன் காரணமாக வீதிகளில் நெல்லை காயவைப்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற பல கூட்டங்களில் நெல்லை உலரவைப்பதற்கான தளங்கள் இல்லாததன் காரணமாகவே ஈரமாக நெல்லை விற்பனை செய்வதாகவும் ஒவ்வொரு கமக்கார அமைப்புக்கும் குறைந்தது நெல் உலரவைப்பதற்கான ஒரு தளத்தினையாவது அமைத்துத் தாருங்கள் என விவசாயிகளினால் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அவை நிறைவேறாததன் காரணமாகவே விவசாயிகள் நெல்லை வீதிகளில் உலர வைக்கின்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன.

கடந்த வருடங்களிலும் இந்த நிலைமை தொடர்ந்தது. இந்த நிலைமையினால் கடந்த காலங்களில் பல வீதி விபத்துகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது

குறிப்பாக புளியங்குளம் - நெடுங்கேனி பிரதான வீதியின் பரவலான இடங்களில் இவ்வாறு நெல் உலரவிடப்பட்டுள்ளன.

# மன்னார் சிறுத்தோப்பு பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையம் உரிய முறையில் செயற்படுவதில்லை

## மக்கள் விசனம்



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, சிறுத்தோப்பு பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையம் தொடர்ச்சியாக உரிய நேரத்தில் திறக்கப்படாமையினால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, தாராபுரம் கிராமத்திலிருந்து பேசாலை வரையிலான குறித்த பிரதான வீதியில் ஒரேயொரு எரிபொருள் நிரப்பும் நிலையம் மாத்திரம் அமைந்துள்ளது.

குறித்த எரிபொருள் நிறப்பும் நிலையத்தில் கடந்த சில வருடங்களாக எரிபொருட்கள் போதியளவு கையிருப்பில் இருப்பதில்லை எனவும், அதனைத் தொடர்ந்து உரிய நேரத்தில் திறக்கப்படுவதில்லை எனவும் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பேசாலை மற்றும் அதனை அண்டிய பல பகுதிகளிலுள்ள அரச தனியார் பணியாளர்கள் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அசமந்தப்போக்கு காரணமாக பெரும் சிரமங்களை தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளதுடன், குறித்த பிரதேசத்தில் உள்ளவர்கள் மீன்பிடித்தொழிலை அதிகம் மேற்கொண்டுவரும் நிலையில் மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான மண்ணெண்ணையை உரிய முறையில் கொள்வனவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கடந்த சில நாட்களாக உரிய நேரத்தில் குறித்த எரிபொருள் விற்பனை நிலையம் திறக்கப்படுவதில்லை எனவும், நேற்று முன்தினம் (24) காலை சுமார் 7.50 மணிளவில் எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்கப்பட்டபோது அங்கு எரிபொருளை பெறுவதற்காக காத்திருந்தவர்கள் தாமதம் குறித்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணியாளரிடம் கேள்வி எழுப்பியபோது கடமையாற்றுகின்றவர் தாமதம் குறித்து வினவிய பெண்ணிடம் அநாகரிக வார்த்தையை பாவித்து அநாகரிகமாக நடந்துகொண்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவித்துள்ளதோடு, இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு











(வவுனியா நிருபர்)

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் 16ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் நேற்று முன்தினம் (24) அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நகரசபை மண்டபத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சு.சுகிர்தராஜனின் உருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு



ஒளிதீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அவர் தொடர்பான நினைவுப்பேருரைகளும் இடம்பெற்றன.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் த.யோகராஜா, காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், நகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்

## ஜேர்மனியில் புதிய கட்டுப்பாடுகளுடன் கூடிய ஊரடங்கு நீடிப்பு



ஜேர்மனியில் பல்வேறு புதிய கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கை நீடித்து பிரதமர் ஓலாப் ஷோல்ஸ் அறிவித்துள்ளார்.

பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் பூஸ்டர் டோஸ் செலுத்திக்கொண்டதற்கான சான்று அல்லது கொரோனா நெகடிவ் சான்றிதழ்களுடன் வருபவர்களுக்கு மட்டும் பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ள அனுமதி என உத்தரவிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி மத்தியில் ஓமிக்ரொன் தொற்று பரவல் உச்சம் தொடும் என்ற சிறப்பு சுகாதாரக் குழுவின் எச்சரிக்கையை அடுத்து கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. வைரஸ் பரவல் குறையும் சூழலில் கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து ஆலோசிக்கப்படுமென பிரதமர் தெரிவித்துள்ளார்.

## ஹெய்ட்டியை அடுத்தடுத்து உலுக்கிய நிலநடுக்கங்கள்

**• 200 வீடுகள் தரைமட்டம்; இருவர் பலி; 100 பேர் படுகாயம்**

**• மிதமான நில அதிர்வுகள் தொடர்வதால் பரபரப்பு**

ஹெய்ட்டியில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரண்டு நில நடுக்கங்களால் கட்டடங்கள் பல இடிந்து தரைமட்டமாகியுள்ளன. அத்தோடு இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் போர்ட் அயு பிரின்சின் மேற்கு பகுதி மற்றும் நிப்பஸ் மாவட்டத்தில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. இந்நிலநடுக்கம் அதிகபட்சமாக 5.3 ரிச்டராக பதிவானதாக நில அதிர்வு ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இந்நிலநடுக்கம் நாட்டின் தெற்கு நகரங்கள் முழுவதிலும் உணரப்பட்டது.

தொடர்ந்தும் 4.4 மற்றும் 5.1 ரிச்டர் அளவுகளில் மேலும் இரு நிலநடுக்கங்களும் பதிவாயுள்ளன.

இந்நிலநடுக்கம் காரணமாக ஏறத்தாழ 200 வீடுகள் இடிந்து தரைமட்டமாகியுள்ளதாகவும், 600 கட்டடங்கள் சேதமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிர்வில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து பெண் உட்பட 2 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இடிபாடுகளில் சிக்கி படுகாயமடைந்த



நூற்றுக்கணக்கானோர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தொடர் மீட்புப் பணி நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நில அதிர்வு ஏற்பட்டதையடுத்து வீடுகளைவிட்டு பொதுமக்கள் அலறி அடித்து வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்திற்குப் பின்னர் ஹெய்ட்டியில் மிதமான நில அதிர்வுகள் தொடர்ந்து வருவதால் அங்கு பரபரப்பு நிலவுகிறது.

## புர்கினா ஃபாசோ ஜனாதிபதி கிளர்ச்சிப் படையினரால் கைது



புர்கினா ஃபாசோவில், கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள இராணுவம் அந்த நாட்டு ஜனாதிபதி ரோக் மார்க் கிறிஸ்ரியன் கபோரேவை (Roch Marc Christian Kabore) சிறைப்பிடித்துள்ளது.

இதுகுறித்து கிளர்ச்சிப் படையினர் தெரிவிக்கையில்,

''ஜனாதிபதி கிறிஸ்ரியன் கபோரே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு, பாதுகாப்பான இடத்திலுள்ளார்'' என்றனர்.

ஜனாதிபதி மாளிகை அருகே ஞாயிற்றுக்கிழமை இரவு துப்பாக்கிச் சூடு சப்தம் கேட்டதாகவும் திங்கட்கிழமை துப்பாக்கி மோதல் நடைபெற்றதாகவும் சம்பவப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இதனால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டாலும், ஆங்காங்கே சோதனைச்சாவடிகளில் ஏராளமான கிளர்ச்சிப் படையினர் இருந்து சோதனையில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நீடிக்கும் அமெரிக்க – சீன மோதல்: தென்சீனக் கடலில் தொடரும் பதற்றம்

தென்சீனக்கடல் பகுதியில் பதற்றம் தொடர்கிறது. அமெரிக்க - சீன மோதல் அடுத்தகட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

சர்ச்சைக்குரிய தென்சீனக் கடற்பகுதியில் அமெரிக்காவும் சீனாவும் அவ்வப்போது தங்களது போர் விமானம் தாங்கி கப்பல்களின் வாயிலாக மோதல் போக்கில் ஈடுபடும். இதேபோல் சமீபத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது.

உலகின் சர்ச்சைக்குரிய கடற்பரப்புகளில் முக்கியமானது தென்சீனக் கடல் பரப்பு. இந்த தென்சீனக் கடல் பரப்பை தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகளிடமிருந்து கடல் எல்லையை ஆக்கிரமித்து முழுவதுமாக சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.

மேலும், இப்பகுதியில் செயற்கை தீவுகளை உருவாக்கி இராணுவ மற்றும் கடற்படை பயிற்சி மேற்கொண்டு வருகிறது. தென் கொரியாவின் நட்பு நாடான அமெரிக்கா, சீனாவின் இந்தச் செயலுக்கு பதிலடி



தருவதற்காக அவ்வப்போது தென் கொரிய மற்றும் அமெரிக்க போர் விமானம் தாங்கி கப்பல்கள் இந்தக் கடற்பரப்பில் செலுத்தி பயிற்சி மேற்கொள்வது வாடிக்கை.

தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் கடற்படை மேற்கொள்ளும் இந்த கூட்டுப்பயிற்சி சீனாவை மறைமுகமாக அச்சுறுத்தி வருகிறது. அடிக்கடி தென்சீனக் கடற்பகுதியில் நுழையும் அமெரிக்கக் கப்பல் சமீபத்திலும் நுழைந்துள்ளது.

தென்சீனக் கடல் பகுதியை தற்போது தாய்வான், வியட்நாம், மலேஷியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் தங்களுக்குத்தான் சொந்தம் என்று கூறி மோதல் போக்கில் ஈடுபட்டு வருகின்றன.

இதற்கு முக்கிய காரணம் சரக்குக் கப்பல்கள் இந்த கடற்பரப்பு வழியாகச் செல்வது மற்றும் மீன்பிடித் தொழிலுக்கு ஏற்றாற்போல இப்பகுதி அதிக மீன்கள் கொண்ட பரப்பாக விளங்குவதாகும்.

சமீபத்தில் அமெரிக்க போர்க்கப்பல்கள் இந்த கடற்பகுதியில் சென்றதற்கு காரணம் கூறிய அமெரிக்க இராணுவ கொமாண்டர், பிற நாடுகள் தங்களது உரிமையை நிலைநாட்டுவதற்காகவே தென்சீனக் கடற்பகுதியில் அமெரிக்க கப்பல் செல்ல உத்தரவிட்டதாக தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட இந்த நாடுகளின் இச்செயல்கள் சீன கம்யூனிச அரசை மேலும் அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துருக்கியில் கடும் பனியில் புதைந்த வாகனங்கள்; சிக்கித் தவித்த 200 பேர் பத்திரமாக மீட்பு!



துருக்கியில் பனியில் புதைந்த வாகனங்களில் சிக்கித் தவித்தவர்களை மீட்புக் குழுவினர் 12 மணிநேரம் போராடி மீட்டுள்ளனர்.

டியார்பகிர் மாகாணத்தில் கடும் பனிப்புயல் வீசியதால் நெடுஞ்சாலை ஒன்றில் 47 கார்களும், 2 பஸ்களும் நகர முடியாமல் சிக்கிக்கொண்டன.

ஒரு கட்டத்தில் கார்களை பனி படிப்படியாக மூடத்தொடங்கியது, அப்போது அங்குவந்த பேரிடர் மீட்புக் குழுவினர், பனியை அகற்றி கார்களில் சிக்கிக்கொண்டிருந்த 200இற்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளனர்.

## இந்தியாவுக்குள் நுழைந்த பி.ஏ.2 வைரஸ்: மகாராஷ்ட்ராவில் 21 பேர் பாதிப்பு

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஓமிக்ரொன் வகை வைரஸ் தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ளது. இந்தியாவில் கொரோனா 3ஆவது அலை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஓமிக்ரொன் வைரஸே காரணமாகும். இதனால் தினசரி தொற்று பாதிப்பு 3 இலட்சத்துக்கும் மேல் கடந்துள்ளது. இந்நிலையில், ஓமிக்ரொன் வகை கொரோனா வைரஸில் பி.ஏ.2 என்ற புதிய மரபணு மாறுபாடு இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் முதன்முறையாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த பி.ஏ.2 வகை புதிய மரபணு மாறுபாடு வைரஸ் சுவீடன், டென்மார்க் உட்பட 40 நாடுகளில் பரவியுள்ளது.

தற்போது இந்த வைரஸ் இந்தியாவில் பெரும்பாலானோருக்கு தொற்றியுள்ளது. இதை ஆர்டி பிசிஆர் பரிசோதனையிலும் கண்டறிய முடியவில்லை. மத்திய பிரதேசம் மாநிலம் இந்தூரில் 6 குழந்தைகள் உட்பட 21 பேர் இந்த புதிய உருமாறிய வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஒரு தனியார் ஆய்வுகூடத்தில் கடந்த 6ஆம் திகதிமுதல் நடத்தப்பட்ட பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதில் 6 பேருக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 18 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய நிலையில், 3 பேர் இன்னும் சிகிச்சையிலுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 18 வயதை தாண்டிய 15 பேரும் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கேள்விகேட்ட ஊடகவியலாளரை திட்டித் தீர்த்த அமெரிக்க ஜனாதிபதி



பணவீக்கம் குறித்து கேள்வியெழுப்பிய ஊடகவியலாளரை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தகாத வார்த்தைகளைக்கொண்டு திட்டியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வொஷிங்டனிலுள்ள வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, அமெரிக்காவில் பணவீக்கம் அதிகரித்து வருவது குறித்து பொக்ஸ் நியூஸ் நிறுவனத்தின் செய்தியாளர் பீட்டர் டூசி கேள்வி கேட்டதற்கு, ஜோ பைடன் அவர் மீது தனது கோபத்தை வெளிப்படுத்தினார்.

“இது மிகப்பெரிய சொத்து, மேலும் பணவீக்கம்?” என்று கூறியவாறு, செய்தியாளரை தகாத வார்த்தைகளால் கோபமாகத் திட்டினார்.

தனது இருக்கைக்கு அருகே பொருத்தப்பட்டிருந்த மைக் அணைத்துவைக்கப்பட்டிருக்கும் என்று நினைத்து ஜோ பைடன் திட்டிய நிலையில் மைக் செயல்பாட்டில் இருந்ததால், அவர் பேசியது அனைவருக்கும் கேட்டது.

இவை அனைத்துமே அங்கிருந்த கெமராக்களில் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் ஜோ பைடன் குறித்து வெளியான சர்ச்சைகளில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. ஏற்கனவே செய்தியாளர் சந்திப்பின்போது, “முதல் அடியை ரஷ்ய ஜனாதிபதி எடுத்து வைக்கவேண்டும். ஏன் காத்திருக்க வேண்டும்?” என இதே பொக்ஸ் நியூஸ் செய்தியாளர் கேட்டதற்கு, “என்ன ஒரு முட்டாள்தனமான கேள்வி?” என்று ஜோ பைடன் கேட்டது சர்ச்சையைக் கிளப்பியதும் குறிப்பிடத்தக்கது.

*4ஆம் பக்கத் தொடர்ச்சி....*

மேலே தரப்பட்டுள்ள பட்டியலில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களாவர். இதனைத் தவிர மேலும் சில ஊடக ஊழியர்களும் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளனர். அதேவேளை, போரில் அகப்பட்டு படுகொலைக்குள்ளான ஊடக ஊழியர்களும் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. ஊடகவியலாளர்களை நேரடியாக இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாக அவை இருக்காமையினால் மேற்கூறப்பட்ட பட்டியலில் குறிப்பிட்ட அக்காலப்பகுதியில் போர்க் காரணங்களினால் குண்டுத் தாக்குதல் போன்ற தாக்குதல்களுக்குள்ளாகி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் (லங்கா ஜயசுந்தர, டபிள்யூ. குணசிங்க, மொகமட் மஹ்ரூப் ரஷ்மி, செம்பியன்) பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டோரும் (யசீகரன், வளர்மதி ஆகியோர்), இருபது ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவரும் (ஜே.எஸ்.திஸ்ஸநாயகம்), மேலும் சிலரும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. காரணம், மேலே தரப்பட்டுள்ள பட்டியல், நீதியை நிலைநாட்டுவதற்கு வழிகாட்டும் முன் அறிகுறி கொண்டதனால் தண்டனைகளிலிருந்து விடுபடும் செயற்பாடு அமுலாகும் ஆபத்தினை அதனூடாக விளங்கிக்கொள்ள இலகுவாக இருப்பதாகும்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை மற்றும் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளின் சந்தேகநபர்களும் இனம் காணப்பட்டுள்ள நிலையில், விசாரணைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. காணாமற்போன சுப்பிரமணியம் இராமச்சந்திரன் இராணுவ காவலரணில் வைத்து அவரின் நண்பருடன் செல்லும்போது கைதுசெய்யப்பட்டார். இறுதியில் குறிப்பிட்ட ஓர் இராணுவ முகாமில் இருக்கின்றார் என அறிவிக்கப்பட்டு அவரின் வீட்டுக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்டு விரைவாக வாருங்கள் கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இராணுவ முகாமுக்கும் மற்றும் சில பொறுப்பு கூறக்கூடிய இடங்களுக்கும் அவரை தேடிச்சென்ற அவரின் சகோதரிக்கும் தந்தைக்கும் தாமும் காணாமலாக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சுறுத்தலுடனேயே வீடு திரும்ப நேர்ந்தது. கடுமையற்ற தாக்குதலானாலும் சாட்சி கண் முன் இருக்கும் நிலையில் தண்டனைகளிலிருந்து விடுபடும் செயற்பாடு அமுலாகின்றது என்பதற்கான பிரபல சாட்சியாக டி.எம்.ஜி. சந்திரசேகரவின் சம்பவத்தினைக் குறிப்பிட முடியும். தேசிய தொலைக்காட்சியில் மூன்று ஊழியர்கள் தாக்கப்பட்டமை இந்தச் சம்பவத்தின் தொடர்ச்சியாகவே நடைபெற்றதென்பது அனைவரும் அறிந்த விடயமாகும். ரூபவாஹினிக்குள் அத்துமீறி நுழைந்த அன்று அமைச்சர் பதவியை வகித்த மேர்வின் சில்வாவே டி.எம்.ஜி. மீது தாக்குதல் நடத்தியிருந்தார். ரூபவாஹினி ஊழியர்கள் அவரை சிறைப்படுத்தி வைத்து, அதனை நேரடியாக அந்த காட்சிகளை ஒளிபரப்பியிருந்தாலும் இன்றுவரையும் அச்சம்பவம் தொடர்பில் எந்தவிதமான நீதியும் நிலைநாட்டப்படவில்லை.

இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுடன் தொடர்பினைப் பேணி தவறான ஊடக நடைமுறைகளைப் பின்பற்றியதாக பின்பு தெரியவந்த சம்பத் லக்மால் இறுதியாக வீட்டை வெளியேறியிருந்தது அவர் தொடர்ச்சியாக தொடர்பினைப் பேணி வந்த புலனாய்வுத்துறை நண்பருடன் என்று அவரின் தாயார் குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிட்டிருந்த சம்பவத்தின் புலனாய்வுத்துறை நண்பரின் பெயர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்ட சம்பவத்தினூடாக பகிரங்கமாகியது. பெண் ஊடகவியலாளராக மந்தனா இஸ்மாயிலின் வீட்டுக்கு அத்துமீறி பிரவேசித்த ஆயுதம் ஏந்திய குழுவுக்கு தமது தேவையை நிறைவேற்றிக்கொள்ளவோ, அவருக்கு ஆபத்தை விளைவிக்கவோ முடியால் போனது. இரவு வீடு திரும்பிய அவரின் கணவரான ஊடகவியலாளர், வீட்டில் தொலைபேசி அழைப்புக்கு பதில் கிடைக்காததினால், அங்கு ஏதோ நடைபெறுகின்றது என்பதனை ஊகித்தறிந்து பொலிஸாரை வரவழைத்திருந்தார். பொலிஸாருக்கும் ஆயுதக் குழுவுக்கும் இடையிலான துப்பாக்கிச்சூட்டில் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். சடலமாக ஒரு சாட்சி கிடைத்தபோதிலும் அந்தச் சம்பவம் தொடர்பிலும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

வரலாற்றில் ஒரே ஒரு வழக்கு 2021 மே மாதம் 5ஆம் திகதி முடிவுற்றது. அது 2000ஆம் ஆண்டு கொல்லப்பட்ட நிமலராஜன் சம்பந்தப்பட்ட வழக்காகும். நீண்டகாலம் மூடி வைக்கப்பட்டிருந்த அந்த வழக்கு சட்ட மா அதிபரின் ஆணையின்படி சந்தேகநபர்களாக பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அறுவரை விடுதலை செய்ததனூடாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. நிமலராஜனை கொலை செய்தவர்கள் என்று எவரும் இல்லை. அவ்வாறே தர்மரத்னம் சிவராம் படுகொலை வழக்கும் மூடி வைக்கப்பட்டுள்ளது. அதனை எப்படி எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவார்கள் என்று தெரியவில்லை. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பிரகீத் எக்னெலிகொட, லசந்த விக்கிரமதுங்க சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை விடுதலை செய்து அவர்களுக்கு தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க அரசியல் திடசங்கற்பத்தினை வெளிக்காட்டிய அரசின் முக்கியஸ்தர் ஒருவர் நடவடிக்கை எடுத்திருந்தார். மற்றைய அனைத்து குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகும் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படுவதற்கான எந்தவிதமான வாய்ப்புகளும் இல்லை.

இவை யாவும் சுட்டிக்காட்டும் விடயம் என்னவென்றால், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் கண்களுக்கு புலப்படுகின்ற நிரூபிக்கக்கூடிய சாட்சிகள் இருந்தாலும் குற்றவாளிகளால் சுதந்திரமாக இருக்க முடிகின்றது என்பதாகும். குற்றவாளிகளால் தாங்கள் இழைத்த குற்றங்களிலிருந்து விடுபட்டிருக்க முடிவதுடன், அந்தக் குற்றவாளிகள் அரச நிர்வாகத்துடன் பிணைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதனை அறிந்துவைத்துள்ள ஊடக சமூகத்திற்கு சுய தணிக்கையைப் பின்பற்றிக்கொண்டு இயங்கவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. அல்லது தனது தொழிலைக் கைவிடவேண்டியுள்ளது. இயலுமாயின் நாட்டை விட்டு வெளியேற நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. தண்டனைகளிலிருந்து விடுபடும் ஆபத்து நிலை அதிலிருந்து ஆரம்பித்து ஊடகச் சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுநத்திரத்தினை மீறுதல் வரை மோசமாக மாறுவதற்கு ஒரு காரணமாக அமைகின்றது என்பதனை விசேடமாக சுட்டிக்காட்ட தேவையில்லை.

ஹேக் நகர மக்கள் நீதிமன்றத்தில் ஜனவரி 12 மற்றும் 13 ஆகிய தினங்கள் சாட்சிகளை விசாரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டபோதிலும் கொவிட் காரணமாக ஏப்ரல் மாதம் வரை விசாரணைகள் பிற்போடப்பட்டுள்ள லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கு சர்வதேச நீதிமன்றத்திற்கு சென்று அங்கு கிடைக்கும் நீதியான தீர்ப்பின் ஊடாக இலங்கை ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பரந்துபட்டளவில் செயற்படுத்தப்படும் தண்டனையிலிருந்து விடுபடும் நடைமுறைகள் பற்றி உலகின் கவனம் வெகுவாக திரும்பும் என்று நம்புகின்றோம். அதேபோன்று ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்ட வேண்டுமாயின் அதற்கென அரசியல் திடசங்கற்பமும் அவசியமாகும். அந்த அரசியல் திடசங்கற்பம் உள்ள அரசியலை எமது வாழ்நாளில் காண முடியுமா? அதற்காக தொடர்ச்சியாக அழுத்தம் வழங்க வேண்டியுள்ளது.

**• சீதா ரஞ்சனி**

**தமிழில்:- பிரியதர்ஷினி**

# புதிய ஐ.பி.எல். அணியின் பெயர் வெளியானது




2022 இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் புதிதாக இரு அணிகளின் பங்கேற்புடன் மொத்தமாக 10 அணிகள் பங்கேற்கின்றன. லக்னோ மற்றும் அஹமதாபாத் அணிகள்தான் புதிதாக இணைந்துள்ள இரண்டு அணிகளாகும். இதில் ரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் லக்னோ அணியின் பெயர் நேற்று முன்தினம் இரவு வெளியானது.

ஆர்.பி. சஞ்ஜீவ் கோயங்கா குழுமம் உரிமையாளராக உள்ள இந்த அணிக்கு 'லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ்' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அணியின் தலைவராக பஞ்சாப் கிங்ஸ் அணியின் முன்னாள் தலைவரும், ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான கே.எல்.ராகுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கே.எல்.ராகுலை அடுத்து அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் மார்கஸ் ஸ்டொய்னிஸ் மற்றும் இந்திய வீரர் ரவி பிஷ்னோய் ஆகியோரை லக்னோ அணி தக்கவைத்துள்ளது. 2022 ஐ.பி.எல். தொடருக்கான மெகா ஏலம் அடுத்த மாதம் பெங்களூரில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் காலிறுதிச் சுற்று இன்று ஆரம்பம்




ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரானது கடந்த 14ஆம் திகதியிலிருந்து மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்றுவரும் நிலையில் இன்றைய தினம் காலிறுதிச் சுற்றுப்போட்டிகள் ஆரம்பமாகின்றன.

இன்று நடைபெறுகின்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் இங்கிலாந்து இளையோர் அணியும், தென்னாபிரிக்க இளையோர் அணியும் மோதுகின்றன.

6 ஆண்டுகளின் பின்னர் ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருக்கும் இலங்கை இளையோர் அணி தங்களது காலிறுதிப் போட்டியில் நாளை ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

வெள்ளிக்கிழமை மூன்றாவது காலிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய இளையோர் அணியும், பாகிஸ்தான் இளையோர் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. நான்காவதும், இறுதியுமான காலிறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான பங்களாதேஷ் இளையோர் அணியும், இந்திய இளையோர் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்தப் போட்டிகள் அனைத்தும் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

8 அணிகள் காலிறுதி சுற்றுக்குத் தெரிவான நிலையில், இதில் 5 ஆசிய அணிகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென்கொரிய ஒலிம்பிக் ஸ்கேட்டிங்கின் இருண்ட பக்கம்




(அக்ஷரா)

தென்கொரியாவின் ஷார்ட் ட்ராக் ஸ்பீட் ஸ்கேட்டர்கள் அடுத்த மாதம் பீஜிங் ஒலிம்பிக்கிற்குச் செல்கின்றனர். ஒலிம்பிக்கில் தென்கொரியா ஒரு வல்லரசாகும். 1992ஆம் ஆண்டு விளையாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டதிலிருந்து 24 தங்கங்கள் உட்பட பல பதக்கங்களுடன் மற்ற எந்த நாட்டையும் விட அதிக ஒலிம்பிக் பதக்கங்களை வென்றது.

ஆனால், 2018 பியோங்சாங்கில் நடந்த விளையாட்டுகளிலிருந்து பாலியல் வன்கொடுமை, கொடுமைப்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுகளால் ஸ்கேட்டர்கள் பாதிக்கப்பட்டனர். இந்தக் கொடுமையைச் செய்த பயிற்சியாளருக்கு 10 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.



2018 பியோங்சாங்கில் நடந்த விளையாட்டுகளிலிருந்து பாலியல் வன்கொடுமை மற்றும் கொடுமைப்படுத்துதல் வழக்குகள், பந்தயங்களை நாசப்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுகள் வீரர்கள் மீதும் பயிற்சியாளர்கள் மீதும் சுமத்தப்பட்டன.

2018ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டியின்போது ஷிம் தனது அணி வீரர்களைப் பற்றி பயிற்சியாளருக்கு அனுப்பிய விரிவான செய்திகளை உள்ளூர் ஊடகங்கள் வெளிப்படுத்தியதையடுத்து, டிசம்பரில் ஷிம் தண்டிக்கப்பட்டார். 2014 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் ரிலேயில் தங்கம் உட்பட நான்கு ஒலிம்பிக் ஷார்ட் டிராக் பதக்கங்களுடன் தென் கொரியாவின் வெற்றிகரமான ஸ்கேட்டர்களில் ஷிம் ஒருவர்.

அப்பீலில் அவர் வெற்றிபெற்றாலும் பீஜிங்கிற்கான அணியில் அவர் வரவேற்கப்படுவார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. 2018இல் தென்கொரியாவின் ஷிம் சுக்-ஹீ, அவரது பயிற்சியாளர் ஒருவர் தன்னை பல ஆண்டுகளாக பாலியல் வன்கொடுமை செய்ததை வெளிப்படுத்தினார். தனது பயிற்சியாளர்களில் ஒருவரான சோ ஜே-பீம், தனக்கு 17 வயதாக இருந்தபோது மூன்று ஆண்டுகளாக தன்னை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக அவர் 2019இல் வெளிப்படுத்தினார்.

ஷிமின் வெளிப்பாடுகள், சமூக ரீதியாக பழைமைவாத தென்கொரியாவில் அவமானகரமான கலாசாரத்தை எதிர்கொண்டது. விளையாட்டு வீரர்களின் தொடர் இதே போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைக்கத் தூண்டியது. மற்றும் விளையாட்டு அதிகாரிகளிடமிருந்து மன்னிப்பு கேட்கப்பட்டது. 2019ஆம் ஆண்டில், தேசிய பயிற்சி மையத்திலுள்ள பெண் விடுதியில் இரகசியமாக நுழைந்த ஒரு ஆண் ஸ்கேட்டர் ஒரு மாதத்திற்கு இடைநீக்கம் செய்யப்பட்டார்.

அடுத்த ஆண்டு 1,500 மீற்றர் ஒலிம்பிக் சம்பியனான லிம் ஹியோ-ஜூன், பயிற்சி மையத்தில் மற்ற அணி வீரர்கள் முன்னிலையில் மற்றொரு ஆண் தடகள வீரரின் கால்சட்டையைக் கீழே இழுத்ததால், பாலியல் துன்புறுத் தலுக்கு தண்டனை பெற்றார். வான்கூவர் 2010இன் போது, அவுஸ்திரேலிய நீதிபதி ஜேம்ஸ் ஹெவிஷின் தகுதிநீக்க முடிவால் கோபமடைந்த ஒரு தென்கொரிய ரசிகர், சியோலிலுள்ள அவுஸ்திரேலிய தூதரகத்தை வெடிக்கச் செய்வதாக மிரட்டியதற்காக கைது செய்யப்பட்டார்.

2003ஆம் ஆண்டு தென்கொரியாவில் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் ஓனோவுக்கு ஏற்பட்ட கொலை மிரட்டல் காரணமாக ஒட்டுமொத்த அமெரிக்க அணியும் வெளியேறியது. இவ்வளவு சர்ச்சைகள் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் பீஜிங்கில் பதக்க வேட்டை நடத்துவதற்கு தென்கொரிய அணி தயாராகவுள்ளது.

# ஆண்களுக்கான அரை மரதனில் மலையக வீரருக்கு மூன்றாமிடம்




இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அரை மரதன் போட்டியில் இந்திய வீரர்களான கார்த்திக் குமார் முதலிடத்தையும், தர்மேந்திரா இரண்டாவது இடத்தையும் பிடித்த அதேவேளை, மலையக வீரரான சண்முகேஸ்வரன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் முகமாக பத்தரமுல்லை தியத்த உயனவில் ஆரம்பமான குறித்த 21 கிலோமீற்றர் தூரம் கொண்ட அரை மரதன் ஓட்டப் போட்டியில் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவுகள் ஆகிய நாடுகளிலிருந்து வெளிநாட்டு வீர, வீராங்கனைகளும் பங்கேற்றிருந்தனர்.

இதில் பெண்களுக்கான அரை மரதனில் இந்திய வீராங்கனையான சஞ்ஜீவனி ஜாதவ் முதலிடத்தைப் பிடித்ததுடன், இலங்கையின் மதுமாலி பெரேரா இரண்டாவது இடத்தையும், சாமினி சமுதிக்கா மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

ஆண்களுக்கான அரைமரதன் ஓட்டத்தில் இலங்கை இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹட்டன் வெலிஓயா வைச் சேர்ந்த குமார் சண்முகேஸ்வரன் போட்டித் தூரத்தை ஒரு மணித்தியாலம் 7 நிமிடங்கள் 28 செக்கன்களில் நிறைவுசெய்து மூன்றாமிடத்தைக் கைப்பற்றினார்.

இதேவேளை, 5 கிலோமீற்றர் தூரம் கொண்ட ஆரோக்கியத்துக்கான ஓட்டப் போட்டியின் ஆண்கள் பிரிவில் கம்பஹா பண்டாரநாக்க மத்திய வித்தியாலய மாணவன் யஹலிய சங்கீத் முதலிடத்தைப் பிடித்த அதேவேளை, பெண்கள் பிரிவில் ஜா-எல துடெல்ல நிமல மரியா வித்தியாலயத்தின் ஒஷாதினி நிலுமிக்கா முதலிடத்தைப் பிடித்தார்.




## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# நெஷனல் சுப்பர் லீக் கிரிக்கெட் தொடர் – 2022
## ஜப்னா – கண்டி, தம்புள்ள – கொழும்பு அணிகள் இன்று பலப்பரீட்சை

டயலொக் நிறுவனத்தின் பூரண அனுசரணையில் இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவருகின்ற நெஷனல் சுப்பர் லீக் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் கொழும்பு – காலி அணிகளுக்கு இடையில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி 47.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 213 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. 214 என்ற இலகு வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய காலி அணி 42.4 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.




நேற்று முன்தினம் பி. சரவணமுத்து மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஜப்னா – தம்புள்ள அணிகள் மோதின. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்னா அணி 47.1 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 255 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்கு களமிறங்கிய தம்புள்ள அணி 25.5 ஓவர்களில் 79 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க ஜப்னா அணி 176 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இன்றைய தினம் நடைபெறுகின்ற இரண்டு போட்டிகளில் ஒரு போட்டியில் ஜப்னா அணியை எதிர்த்து கண்டி அணி விளையாடும் நிலையில், மற்றொரு போட்டியில் தம்புள்ள அணியை எதிர்த்து கொழும்பு அணி விளையாடுகிறது.




# இலங்கையுடன் மோதும் ஆஸி. குழாம் அறிவிப்பு

இலங்கை கிரிக்கெட் அணியானது அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவுக்கு இருதரப்பு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள நிலையில், குறித்த தொடருக்கான ஆஸி. அணியின் குழாம் நேற்று வெளியானது.

ஆரோன் பிஞ்ச் தலைமையிலான குறித்த குழாமில் உபாதைக்குள்ளாகியிருந்த வேகப்பந்துவீச்சாளர் ஜோஸ் ஹேசல்வுட், பிக்பேஷ் லீக் தொடரில் திறமையினை வெளிப்படுத்திய மொய்சஸ் ஹென்ரிக்ஸ், ஆஷஸ் தொடரின் தொடர் நாயகன் விருதினை வென்ற ட்ராவிட் ஹெட் மற்றும் வேகப்பந்துவீச்சாளர் ஜை ரிச்சர்ட்ஸன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். எனினும், ஆரம்ப துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்னர், சகலதுறை வீரர் மிச்செல் மார்ஷ் ஆகியோருக்கு குறித்த தொடரில் ஓய்வு வழங்கப்பட்டிருக்கிறது.




**அவுஸ்திரேலிய இருபதுக்கு 20 குழாம்**

ஆரோன் பின்ச் (அணித்தலைவர்), அஸ்டன் ஏகார், பெட் கம்மின்ஸ், ஜோஸ் ஹேசல்வுட், ட்ராவிஸ் ஹெட், மொய்சஸ் ஹென்ரிக்குஸ், ஜோஸ் இன்ங்லிஸ், பென் மெக்டெர்மோட், கிளேன் மெக்ஸ்வெல், ஜை ரிச்சர்ட்ஸன், கேன் ரிச்சர்ட்ஸன், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டொய்னிஸ், மெத்திவ் வேட், அடம் ஷம்பா.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7